# மாருதம்

ISSN 1800 - 4873

சமூக, கல்வி, கலை, இலக்கிய சஞ்சிகை - சித்திரை ஐப்பசி 2012 இதழ் - 13

100/=



வவுனியூர் இரா.உதயணன்

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

# வவுனியா ப.நோ.கூ.சங்கம் (வ-து)

நுகர்ச்சிப் பொருட்கள் விற்பனைச் சேவை
கோப்சிற்றி மினி கோப்சிற்றி சேவை
ஒப்பந்த சேவைகள்
உலக உணவுத்திட்ட பொருட்கள் விநியோகம்
கிராமிய வங்கிச் சேவைகள்
பாலர் முன்பள்ளிச் சேவை.
புதிய வேலை வாய்ப்புகளை வழங்குதல்.
வாகன சேவை.
கலாசார மண்டப சேவை.
அரிசிமா உற்பத்தி, நல்லெண்ணெய் உற்பத்தி.

பொதிமண்டப வீதி,
வவுனியா.
தொ.பே.இல. 0242222384, 0242220131





# மாருதம்

தை - மார்கழி 2012 இதழ் 13

ஓயுதல் செய்யோம் தலைசாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்

**ஆசிரியர் குழு:**
கலாநிதி தமிழ்மணி அகளங்கன்
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்

**உதவி:**
த.பிரதாபன்
து.நந்தீஸ்வரி

**அச்சு:**
மல்ரிவிஷன் அச்சுக்கலையகம்
77, 1ம் குறுக்குத்தெரு, வவுனியா.
தொ.பே: 024 : 2223669

வடிவமைப்பு: க.சுவீதன்
இலச்சினை: ப.சிவஅன்பு
தலைப்பு: ஆ.இராசையா

**தொடர்புகட்கு:**
(1) 166, செல்வ பவனம்
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
021-225 5902

(2) 90, திருநாவற் குளம்
வவுனியா.
024 2221676

**வெளியீடு:**


## நண்பர்களுக்குமட்டும்

## உள்ளே


| | |
|---|---|
| அட்டைப் பட அதிதி | 3-7 |
| கலாகீர்த்தி | 8-9 |
| தும்பிவிடு தூது | 10 |
| அவஸ்தை | 12-13 |
| எது வறுமை | 14 |
| ஹைக்கூக் கவிதைகள் | 15 |
| உன்னை வெல்வாய் | 16 |
| தாஜ்மகால் | 17-18 |
| நான் | 19 |
| உன் பணி | 20 |
| எங்கள் சீவிய சிவியே | 21 |
| தமிழர் பண்பாடு | 22 |
| பாரதி | 23 |
| தாயின் கருவறை | 24 |
| செய்யுள் இலக்கணம் | 25-30 |
| ஆறொடு நோகேன் | 31-50 |
| உடைந்த ஏணி | 51-54 |
| கவிதைச் சிதறல் | 55 |
| சிவத் தமிழ்ச் செல்வி | 56 |
| பாடசாலை மாணவிகளின்... | 57-61 |
| த.பிரதாபன் | 62-63 |
| கல்லும் கலையும் | 64-65 |
| வட்டத்தின் முத்தமிழ்ச்... | 66-67 |
| திரு.சு.சிவபாலன் | 68-74 |
| வட்டத்தின் ஆங்கிலச்.... | 75-77 |
| வட்டத்தின் மாதாந்த | 78-81 |
| 2012இல் வவுனியா | 82-84 |
| வாழ்த்துகிறோம் | 85-88 |
| நினைவு கூர்கிறோம் | 89-91 |



**வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**

Published by : Circle of Arts and Literary Friends - Vavuniya, SriLanka. Estd: Feb.1997
Editors :Agalangan & Kandiah Shriganeshan email: kshriganeshan@yahoo.com

## மாருதம் வாசகர்களே!

இதழ் 13 இல் உங்களை மீண்டும் சந்திப்பதில் மிகவும் மன நிறைவடைகின்றோம்.

1997 மாசி (பெப்ரவரி) முழுநிலா நாளில் தொடங்கிய வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் 15 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யதுள்ள நிலையில் இவ் இதழ் வெளிவருகிறது.

மாதந்தோறும் முழுநிலாக் கருத்தரங்குகள் சிறப்பாக நடைபெறுகின்றமை மகிழ்ச்சியளிக்கிறது.

வட்டத்தின் உறுப்பினர்கள் பேச்சு, கவிதை, பாடல், குறும்படம், வில்லுப்பாட்டு, புரவி நடனம், நாடகம், குறும்படம், இசையமைப்பு, நூல்வெளியீடு, விமர்சனம், ஆய்வு, நாட்டிய நாடகம், எனப் பலதுறைகளிலும், பிரகாசிப்பதைப் பார்த்துப் பெருமையடைகின்றோம்.

பிரதேசத்தைத் தாண்டி தேசிய மட்ட விருதுகளையும் வட்ட உறுப்பினர்கள் பெறுவது மகிழ்ச்சியளிக்கிறது.

வவுனியா மாவட்ட கலை கலாசார இலக்கிய நிகழ்வுகளில் மட்டுமன்றி மாகாண தேசிய மட்ட நிகழ்ச்சிகளிலும் வட்டத்தின் உறுப்பினர்கள் சிறந்த பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

புதுப்புது உறுப்பினர்களின் இணைவு பெருமிதம் அடையச் செய்கிறது. புதுப்புதுத் தலைப்புகளிலான கலந்துரையாடல்கள் ஆரோக்கியமான வளர்ச்சியைக் காட்டுகிறது.

இவ் இதழிலும் வழமையான சிறப்புக்களைத் தரிசிக்கலாம். வவுனியா மாவட்ட நிகழ்வுகள் சில ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

இன்னும் படைப்போம் இனிய உலகையும் தான்.

**ஆசிரியர்கள்**





## அட்டைப் பட அதிதி

## எழுத்தறிவுக்கு உதவும் எழுத்தாளர்

## வவுனியூர் இரா.உதயணன்



- கலாநிதி அகளங்கன் -

இந்த மாருதத்தை அட்டைப் படமாய் அலங்கரிப்பவர் எழுத்தாளர் **வவுனியூர் இரா.உதயணன்** அவர்கள்.

இவரின் **"பனிநிலவு"** என்ற பிற்போர் இலக்கிய நாவல் இந்தி, மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. ஆங்கிலம், உஸ்பெஸ்கிஸ்தான் ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஈழத்து நாவல் இலக்கிய வரலாற்றில் முதன் முதல் இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட நாவல் இவருடைய **நூல் அறுந்த பட்டங்கள்** என்ற நாவல் என்பது நாம் பெருமைப்படக் கூடிய ஒன்று.

இவரின் **விதி வரைந்த பாதையிலே, நூல் அறுந்த பட்டங்கள், பனி நிலவு** ஆகிய நாவல்கள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

**நூல் அறுந்த பட்டங்கள், பனிநிலவு,** ஆகிய இவரின் இரண்டு நாவல்கள் இந்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

2012 ஒக்டோபர் 04ந் திகதி இந்தியக் கேரள மாநிலத்துக் காலாடி என்ற இடத்திலுள்ள சங்கராச்சாரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இவரது **பனி நிலவு** நாவலின் மலையாள மொழிபெயர்ப்பின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு அடைந்த மகிழ்ச்சியினாலும் பெருமிதத்தாலும் இவரை இவ் விதழின் அட்டைப்பட அதிதியாக்கிச் சிறப்புச் செய்திருக்கிறோம்.

**பிறப்பு, கல்வி, குடும்பம்**

வவுனியா நகரின் அருகில் இருக்கும் குடியிருப்பு இவரின் பிறந்த ஊர். தந்தையார் புகையிரத நிலைய அதிபராகக் கடமை புரிந்த (STATION MASTER) ஸ்ரீஇராமகிருஷ்ணா. தாயார் கமல நாயகி. பிறந்த திகதி 29-04-1960.

மலையகத்து ஹட்டன் சென் ஜோன்ஸ் பொஸ்கோ, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், யாழ்ப்பாணத்து பரியோவான் கல்லூரி (St. John's College) ஆகியவற்றில் கல்வி கற்று மேற்படிப்புக்காக இலண்டன் சென்றார்.

அங்கு கணக்கியல் துறையில் பட்டம் பெற்று ஸ்கொட்லாந்து டன்டீ (UNIVERSITY OF DUNDEE) பல்கலைக் கழகத்தில் கணக்கியல் முதுமாணி (M.ACC)பட்டம் பெற்றார்.

அத்தோடு இங்கிலாந்து மான்செஸ்ரர் பல்கலைக் கழகத்தில் (UNIVERSITY OF MANSESTER) முகாமைத்துவ முதுமாணி பட்டம் (M.BA) பெற்றார். தற்பொழுது இலண்டனில் கைதொலைத் தொடர்பு நிறுவனத்தில் நிதிப் பணிப்பாளராகப் பணிபுரிகின்றார். இலண்டன் கிங்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் (UNIVERSITY OF KINGSTON) முகாமைத்துவத் துறையில் கலாநிதிப் பட்டத்திற்காக தனது ஆய்வை நடாத்தி வருகிறார்.

இவரின் மனைவி தயாளினி யாழ் பல்கலைக் கழக கலை (B.A)பட்டதாரி பிள்ளைகள் நிரோஷி, மதனன் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**எழுத்து**

ஐரோப்பிய நாட்டில் இலண்டனில் வாழ்ந்து வவுனியூர் என்ற தனது பிரதேசப் பெயரை உலகெங்கும் ஒலிக்கச் செய்து, வவுனியாவிற்கும் ஈழ மண்ணிற்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார் இவர்.

சிறந்த படைப்பாளியான இவர் சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய துறைகளில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

1979இல் தனது 19ஆவது வயதில் **அந்த இரண்டு பைத்தியங்கள்** என்ற சிறுகதை மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்தார்.

1984/85/86 காலப்பகுதியில் தினகரன் பத்திரிகையில் **ஒரு அத்தியாயம் முடிவடைகிறது. இடைவெளிகள்** ஆகிய இரண்டு நாவல்களைத் தொடர் நாவல்களாக எழுதிப் பலரதும் கவனத்தை ஈர்த்துப் பாராட்டுப் பெற்றார்.

**வீரகேசரி தினகரன்** பத்திரிகைகளில் பல சிறுகதைகளையும் எழுதினார். இலண்டனுக்குச் சென்ற பின்பும் அங்குள்ள **ஈழநாடு, இலண்டன் தமிழன், ஈழகேசரி, இலண்டன் புதினம்** ஆகிய பத்திரிகைகளில் எழுதினார்.

1988ல் இவரது **ஒரு வேங்கை இரை தேடுகிறது** என்ற நாவலும் 1990/91ல் இவரது **உதட்டுப் பூச்சுகள்** என்ற நாவலும் **இலண்டன் தமிழன்** பத்திரிகையில் வெளிவந்தன.

2009ல் இவரது நூல் அறுந்த பட்டங்கள் என்ற நாவலும் 2011ல் இவரது **சிறகொடிந்த வண்ணத்துப் பூச்சிகள்** என்ற நாவலும் **இலண்டன் புதினம்** பத்திரிகையில் வெளிவந்தன.





**அப்பா எப்போ வருவார் அம்மா** என்ற இவரது சிறுகதை மிகவும் பிரபலம் பெற்றது.

**நூல்களும் பரிசுகளும்**

தனது ஆக்கங்கள் யாவற்றையும் நூலுருவில் கொண்டுவர விரும்பிய இவருக்கு அருணா வெளியீட்டகம் கைகொடுத்தது. அருணா செல்லத்துரை அவர்கள் அழகாக நூல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

2008இல் **சுருதி பேதமடைகிறது, விதிவரைந்த பாதையிலே** ஆகிய நாவல்களை வெளியிட்டார். **விதிவரைந்த பாதையிலே** நாவல் 2008ற்கான சிறந்த நாவலுக்குரிய **இலங்கை தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப்** பெற்றது.

2009இல் **மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள்** சிறுகதைத் தொகுப்பையும், **நூல் அறுந்த பட்டங்கள்** நாவலையும் வெளியிட்டார்.

**நூல் அறுந்த பட்டங்கள்** நாவல் இந்தியத் தமிழ் நாடு கலைஇலக்கியப் பெருமன்றத்தின் உலகளாவிய சிறந்த தமிழ் நாவல் என்ற பரிசைப் பெற்றது.

2010 இல் இவரது பிற்போர் நாவலான **பனி நிலவு** வெளியிடப்பட்டது. **இந்நூல் கொழும்பு கொடகே நிறுவனத் தேசிய விருதையும் தமிழ்நாடு கு.சின்னப்ப பாரதி அறக்கட்டளை விருதையும்** பெற்றது **உயிர்க் காற்று** என்ற நாவலும் இதே ஆண்டில் வெளிவந்தது.

கலாநிதி முல்லை மணி அவர்களின் கவிதைகளை முல்லைமணியின் கவிதைகள் என்ற பெயரில் நூலுருவாக்க உதவிய இவர் பல எழுத்தாளர்களுக்கும், பல்வேறு உதவிகளையும் செய்து வருகிறார்.

வருடந்தோறும் சிறந்த **தமிழியல் அறிஞர்களுக்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்** வழங்கும் **தமிழியல் வித்தகர் விருதினை** தனது பெற்றோர் பெயரில் வழங்கி வருகிறார்.

வவுனியாவிலும், மலையகத்திலும் உள்ள ஏழை மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு உதவி வரும் வவுனியூர் இரா.உதயணன் இன்னும் சிறக்கவும் படைக்கவும் பணி தொடரவும் மாருதம் சஞ்சிகையூடாக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வாழ்த்துகிறது.


நன்றி


ஓ.கே.குணநாதன் (1998)
வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்.






















மாருதம் 13, 2012, சமூக, கல்வி, கலை இலக்கிய சஞ்சிகை








எழுத்தாளர் வவுனியூர் இரா.உதயணனின் நூல்கள்



# "கலாகீர்த்தி" பேராசிரியர் கலாநிதி.பொ.பூலோகசிங்கம்



மு.கௌரிகாந்தன், விரிவுரையாளர், யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி.

கொழும்பு,களனி,பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களிலே விரிவுரையாளராகப் பணியாற்றி தமிழ்த் துறைக்கு அரிய பல பங்களிப்பினை வழங்கித் தற்போது அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி நகரில் வாழும் பேராசிரியர் கலாநிதி பொ.பூலோகசிங்கம். அவரால் உருவாக்கப்பட்ட மாணவர்களாலும் தமிழ்க்கல்விமான்கள் முதலானோராலும் இலகுவில் மறக்கப்பட முடியாத பெருமைக்குரியவராகக் காணப்படுகின்றார். பவளவிழாக் காலத்தின் போதான இந்நன்னாளில் அவர் குடும்ப சேமத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்தும் பேற்றைப் பெற்றுள்ளோம்.

இலங்கை,அவுஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளிலும் வாழும் உரிமை பெற்ற பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்கள் உலகம் வாழ் தமிழ் அறிஞர்களாலும் நன்கு அறியப்பட்டவர். இவர் 1936ஆம் ஆண்டு சித்திரை முதலாந்திகதி வவுனியாவைச் சேர்ந்த பொன்னையா உடையார்- சோதிரத்தினம் தம்பதியருக்கு நான்காவது புத்திரராக செட்டிகுளத்தில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை செட்டிகுளம் அரசினர் தமிழ் வித்தியாலத்திலும், இடைநிலைக்கல்வியை யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்று சித்திபெற்று அங்கிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று அங்கே 1961ஆம் ஆண்டு தமிழில் முதலாம் வகுப்புச் சித்தியினைப் பெற்றார். பேராசிரியர்களான வி.செல்வநாயகம், ஆ.சதாசிவம்,ச.தனஞ்சயராசசிங்கம்,சு.வித்தியானந்தன் ஆகியோரின் மாணவர். 1963 தொடக்கம் 1965 வரை பிரித்தானிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பெயர் பெற்ற திராவிட மொழியியலறிஞர் பேராசிரியர் தோமஸ்பரோவின் கீழ் மொழியியல் ஆராய்ச்சி மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் பெற்றவர். 1965ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளராகச் சேர்ந்து தமது பணியை ஆற்றத்தொடங்கினார். இறுதியாக 1997ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து இணைப் பேராசிரியர் பதவியை விட்டு விலகி அவுஸ்திரேலியா சென்றார்.

இவர் தமிழிலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள், ஈழம் தந்த நாவலர், நாவலர் பண்பாடு, Poet Tambimuttu-A profile, சிலப்பதிகார யாத்திரை போன்ற நூல்களின் ஆசிரியர். இந்துக்கலைக்களஞ்சியம் பகுதி1 (1990) செய்தவர். அ.சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திரதீபகம் பகுதி1, பகுதி2 ஆகியவற்றை அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் பதிப்பித்தவர். கொழும்புத்தமிழ்ச்சங்கம் இந்த இரண்டு நூல்களையும் வெளியிட்டது.

நூல்கள் தவிர பல்வேறு மலர்கள், சஞ்சிகைகளிலே நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். இவை தமிழ் இலக்கியம் , ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு,சமயம,இலக்கணம் என்பன சார்ந்தவை. உலாப்பிரபந்தவளர்ச்சி, பண்டைத் தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள்நெறி, தத்தை விடுதூது, பதினெட்டாம் நூற்றாண்டு





வரையான ஈழத்துத் தமிழ் இலக்கியம், பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் வளர்ச்சி, ஈழத்துப் புராணங்கள், வன்னி நாட்டின் வரலாறு, கோணேசர் கல்வெட்டு, முருகவழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் இலக்கண விசாரம் என்பன குறிப்பிடத்தக்க சில கட்டுரைகளாகும். இவை மிக விரிவான தேடலுடன் கூடிய ஆய்வு நோக்கங்கொண்ட கனதியான கட்டுரைகள்.

ஆறுமுகநாவலர் மீது மிகுந்த மதிப்புடைய பேராசிரியர், நாவலர் தொடர்பான தமது எழுத்துக்கள் மூலம் ஆறுமுகநாவலர் பணிகள் தொடர்பான ஆய்வுகள் பல வெளிவரத் தூண்டுகோலாகத் திகழ்ந்தவர். ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்று முயற்சியில் பேராசிரியரின் பங்களிப்பு முதன்மை வாய்ந்ததாகப் பேசப்படுகிறது. ஈழத்து இலக்கிய வரலாறு தொடர்பாக இவரால் பல்வேறு சந்தர்ப்பங்களிலே எழுதப்பட்டவை தொகுத்து நோக்கப்படும்போதுதான் இவரின் ஆளுமை தமிழுலகிற்கு நன்கு தெரியவரும்.

∅

## வவுனியாவில் வெளிவந்த கவிதை நூலும் பூநகரி பிரதேச கலாசார மலரும்






# தும்பி விடு தூது!

**தத்துவக் கவிஞர் கலாபூஷணம் பொன் தவநாயகம்.**

காலையிலே பூமலரக் கானம் பாடும்
கருமைநிறத் தும்பியாரே காண வந்தேன்.
சோலையிலே மகரந்தச் சுகந்தம் பூசிச்
சுருதிநட மாடிநறை சுவைப்பாய்க் கூடும்
மாலையிலே ஓய்வுனக்கு மகிழ்வின் தூக்கம்
மங்கைதனைத் தேடுகிறேன் மனதி லேக்கம்
பாலையிலே சோலையவள் பார்வை யொன்றால்
பகலிரவாய்க் காத்திருப்பேன் பழகு மின்பம்.

பாவாடை தாவணியின் பருவம் நீங்கும்
பாவையவள் கிராமத்துப் பண்பி லான
தேவதையாம் அவள்புழக்கந் தெரியும் வண்ணம்
தெருவினிலே ஓரத்துத் திசையில் நிற்பேன்
தாவுநடை பயிலுமவள் தகைவி லென்னைத்
தரிசித்துக் கண்களினால் தழுவிச் செல்வாள்
நாவுதிரா வார்த்தைகளை நயத்த லின்பம்
நயமாகும் பார்வைதரும் நலந்தா னன்றோ!

இடியோசைக் குண்டுகளால் இலக்குத் தப்பும்
எறிகணையால் மக்களுயிர் இழக்குங் காலம்
மடிவூடே உயிர்தப்பும் மார்க்கந் தேடும்
மக்களெல்லாம் பரிதவிக்கும் மரணக் கோலம்
விடிவாலே பொழுதுபடும் விந்தை போல
விளங்காத உறவுநிலை விதியின் சாலம்
அடிபாடா லிடம்பெயர்ந்தாள் அறிய வந்தேன்
அயர்வதுபோ லுறவுநிலை அகத்தி னோலம்.

உரையாட அவளில்லை ஊரே யில்லை
ஓரிரவுத் தாக்குதலே உச்ச மென்னத்
தரையாடு மெறிக்கணையால் தகர்க்குங் குண்டால்
தரைமட்டம் வீடுமனை தவிப்போ ருள்ளே
திரையாடு மெழிலாளைத் தேடிக் காணேன்
தேடுதற்கு நீபொருத்தம் தேர்ந்த தூதன்
விரைவாக அவளிருப்பின் விளக்கந் தன்னை
விபரமுடன் தந்துவிட வேண்டு கின்றேன்.

தேனோடு சேர்த்தவளைத் தும்பி யாரே
தேடிடுவாய் கூர்விழிகள் தெரியச் செய்யும்
கானாடு மிடமிருப்பாள் கண்டு தூதாய்க்
கவலைவிடு விரைவினிலே காலம் மாறும்
வானாட நிலையுயரும் வாழ்ந்த ஊரும்
வரவேற்கு முனதன்பன் வருவான் என்று
கூனாத வுணர்வொன்றைக் கூட்டி யுள்ளம்
குளிராடி யவளின்பங் கொள்ளச் செய்வாய்!

∅





## வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரியின் 18வது ஆண்டு விழா 2012இல் இரண்டு நாள் நிகழ்வுகள்





**சிறுகதை**

# அவஸ்தை

மௌனிகா

விநாயகம் ஐயாவுக்கு வயசொண்டும் கனக்க இல்லை. இப்பதான் அறுபதுமுடிஞ்சு அறுபத்தொன்று தொடங்குது. மூன்று தலைமுறையைக் கண்ட அவர். ஒன்றும் சாதாரண ஆள் இல்லை. பெரிய வியாபாரி. ஒரு காலத்தில் புடவை வியாபாரத்தில் கொடிகட்டிப் பறந்தவர். எப்ப இந்த பித்தவாதம் தொடங்கிச்சோ அண்டையிலிருந்து மனுசன் அடிபட்ட பாம்புபோல தத்தளிச்சிட்டு இருக்கு.

இரண்டு பிள்ளையளைப் பெத்து வளர்த்து, படிப்பிச்சு, கல்யாணம் காட்சி எல்லாம் முடிந்சுது. அவையளுக்கு இப்ப தங்களைக்கவனிக்கவே நேரமில்லை பிறகெப்படி தகப்பனைப்பற்றி யோசிக்கிறது. காசும் பணமும் இருந்தென்ன! பசிச்சா சோறு போட பக்கத்தில ஒரு துணைவேண்டாமோ? தங்கம்மா, ஏனச்சி என்னைவிட்டிட்டு நீ நேரத்திற்கு போயிற்றாய் இந்தக் கிழவன் தனியா இருந்து என்ன செய்வான், என்று நீ யோசிச்சு பார்த்தியா? ஒரு வாய் கஞ்சி தர மனுசர் இல்லை. எதற்கும் கிறுங்காத ஆள் என்று அடிக்கடி சொல்வியே இப்ப நீ என்னைப் பாத்தா தாங்கமாட்டாயணை. அதுதான் கடவுள் உன்னை வேளைக்கு கூப்பிட்டிட்டான். நான் பாவி கிடந்து அல்லாடிறன். கால் என்ன இப்படி வலிக்கிறது ஷ்..ஷ... கொஞ்ச நேரம் திண்ணையில சரிவம். "அப்பப்பா... அச்சோ" என ஒருவாறு மெல்ல காலை நீட்டி அசதியைப் போக்க விநாயகர் ஐயா திண்ணையில் சரிந்துகொண்டார். வெளியில் யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

ஐயா.....ஐயா......

ஆர் மோனை கந்தனே! வா இப்படி இரு என்னையா இந்த நேரத்தில படுத்துக் கிடக்கிறீங்கள். ஏலாதே.

ஓம், கந்தா உடல் வலியிலும் மனசுவலிஅதிகமா இருக்கு. கடவுள் என்னைக் கூப்பிடுறான் இல்லையே. இந்தக் கட்டையிலிருந்து இனி என்ன செய்ய? எல்லாம் முடிஞ்சிது. என விநாயகம் ஐயா கண்கலங்கிய போது கந்தன் தானும் கண்கலங்குவதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலாதவனானான்.

ஐயா, உங்களிட்ட ஒரு 50ரூபா எடுக்கலாமே? ஏன் கந்தா, காசு வேணுமெண்டா முதலே கேக்காதையன் இந்தக்கிழட்டைப் பார்த்துக் கொண்டு பேசாம இருக்கிறியே! வீட்டில சமைக்கேல்லையே? பிள்ளையள் சாப்பிடல்லையே?

இடுப்பு முடிச்சால் 500ரூபாவை எடுத்த விநாயகம் ஐயா, இந்தா இதைக்கொண்டுபோய் முதல் பிள்ளையளுக்கு ஏதாவது வாங்கிக் கொடு. இல்லை ஐயா இவ்வளவு தேவையில்லை. அது இருக்கட்டும் நீ போ...

வேகவேகமாகக் காசைப் பெற்றுக் கொண்ட கந்தன் அதே கதியில் முத்தையா கடையில் போய் நின்றான்.





தம்பி எனக்கு ஒரு கிலோ அரிசியும் 1/4k பருப்பும் தா. ஒரு வெத்திலைச் சுருளும் மிகுதிக்காசையும் சாமானையும் வாங்கிக் கொண்ட கந்தன் விறுவிறு என நடந்து விநாயகம் ஐயா வீட்டை அடைந்தான்.

ஐயா..... ஐயா....... நித்திரையாயிருந்தீங்களே! படுத்திருங்கோ வாறன்.

தங்கம்மா ஆச்சிக்கு பிறகு அந்தக் குசினி கந்தனுக்குத்தான் அதிக அத்துப்படி. அரிசி, பருப்பு, வளவில் கிடந்த கத்தரிப்பிஞ்சு எல்லாவற்றையும் ஒன்றாய் அவியவிட்டான். சிறிது நேரத்தில் ருசியான அவியல் தயாரானது. இறக்கி ஒரு பாத்திரத்தில் ஆறவிட்டு விநாயகம் ஐயாவிற்கு பரிமாறுவதற்காகக் கொண்டு வந்தான்.

"எழும்புங்கோ, ஐயா சுடச்சுட அவியல் செய்திருக்கேன்"

பசியிலே சுருண்டு கிடந்த கிழவனுக்கு சாப்பாட்டு தட்டோடு நின்றிருந்த கந்தன், அந்தக் கதிர்காமக் கந்தனாகவே காட்சியளித்தான். அயலில் இருக்கேக்கை தாயாப் பிள்ளையாய் பழகினதை கந்தன் மறக்கேல்லை.

அவனும் என்ன செய்ய தனியாளா இருந்தா பிரச்சனை இல்லை, குடும்பம் குட்டியள் என்று அதுகளை யார் பார்க்கிறது. முன்னரை மாதிரி வீடும் பக்கம் இல்ல. கொஞ்சம் தொலைச்சுப்போச்சு. ஆனாலும் ஒரு நாளேனும் கந்தன் விநாயகம் ஐயாவைத் தரிசிக்காமல் இருந்ததில்லை.

அன்பிற்காக ஏங்கும் அந்த ஜீவனின் தனிமையைப் போக்குவது பிள்ளையள், பேரப்பிள்ளையள் இடைக்கிடை வந்து போவார்களா? விநாயகம் ஐயாவோ, அவர்கள் வருவார்கள் வருவார்கள் என நம்பிக்கையோடு கூறுகிறார். எப்போது வருவார்கள் என எண்ண எண்ண உயிர் உறைகிறது.

பிள்ளையளைப் பெத்து வளர்க்கிறது கடைசி காலத்தில் ஒருவாய் கஞ்சியென்றாலும் ஊத்துங்கள் என்றுதானே? ஏன் பிள்ளையள் அதை யோசிக்கேல்லை. ஏன் ஐயா தனியா இருக்கிறார். இன்றைக்கு வயிற்றுப்பசியை கந்தன் தீர்த்திட்டான் நாளைக்கு............?

∅



**கவிதைகள்**

# எது வறுமை

த.தனுஸ், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

நிதி இல்லை
நிலம் இல்லை
இது இல்லை வறுமை.
உண்மை இல்லை
உணர்வு இல்லை
உள்ளத்தில் உள்ளது வறுமை.

கணினியும் கைபேசியும்
காதலி ஆனதால்
உண்மையான உறவுகளில் வறுமை.

பயிற்சிக்கு வறுமை.
முயற்சிக்கு வறுமை.
சிந்திக்க வறுமை.
நேசிக்க வறுமை.

உழைப்போடும் களைப்பும்
படிப்போடு பணமும்
நடிப்போடு நம் வாழ்வும்.
சிரிப்போடு சினமும்
உள்ளத்தில் வறுமையை
சேர்த்ததால் சேர்ந்தது

∅

# தேர்தல்

**வேண்டும்**

விலை குறைப்புக்களால்
ஏழைகளின் வயிற்றுப்பசி
அப்போதுதான் இடைவேளை எடுக்கிறது.
மேடு பள்ள வீதிகள் அப்போதுதான்
அலங்கரிப்புச் செய்யப்படுகின்றன.
தலை நகரத்து தலைவர்களால்
கிராமத்துக் காற்று அப்போதுதான்
சுவாசிக்கப்படுகின்றது.
விரல்களுக்கும் அப்போதுதான்
விலை பேசப்படுகின்றது.
பட்டதாரிகள் பலருக்கு
அப்போதுதான் நிம்மதி கொடுக்கப்படுகின்றது

**வேண்டாம்**

பிரச்சாரம் என்ற பெயரில்
வீதிகள் கைதுசெய்யப்படுகின்றன.
விளம்பரம் என்ற பெயரில்
தொலைக்காட்சியில் தொடர் நாடகங்கள்
பகிஸ்கரிப்பு செய்யப்படுகின்றன.
விருந்து என்ற பெயரில்
குடிமகன்கள் உருவாக்கப்படுகின்றனர்.





# ஹைக்கூ கவிதைகள்

அ.சுஜானா - மன்னார்.

**அனுபவம்**

சுற்றங்களை அளக்கும்
அளவுகோல்
வறுமை

**ஏன்**

முதிர்கன்னிகளின் முகவரி
தெரிந்த உங்களுக்கு
அவர்கள் படும் அவஸ்தை
தெரிவதில்லை

**தோற்றுப்போன காதல்**

தடயங்கள் அழிந்தாலும்
நினைவுகள்
வாழ்ந்துகொண்டிருக்கும்
நடத்தை

**வாழ்க்கை**

பிறப்பின் அர்த்தங்களை
பிரசவிக்கும்
பாடத் திட்டம்

**பழைய டயரி**

கடந்த காலத்திற்கு
நமக்கு நாமே கொடுக்கும்
அடையாள அட்டை

**புகைப்படம்**

நிஜங்களுக்கான
நிழல் கொடுக்கும்
அத்தாட்சிப் பத்திரம்

**மாற்றம்**

புது உறவு பூப்பொழிந்ததால்
பெற்ற உறவுகள்
காய்ந்த சருகானதோ

∅



# உன்னை வெல்வாய்

**நந்தா**

மனமே மனமே சோராதே.
மழையோ புயலோ ஓடாதே.
மலையைப் பெயர்க்க - கைகளுண்டு.
மண்ணில் வாழ வழிகளுண்டு

ஓடி ஓடி ஒளியாதே
ஓட்டைப் பானையுள் தேடாதே.
ஆடிப்பாடி விளையாடு
அகிலம் எங்கும் உன்வீடு.

முடியாதென்று எதுவுமில்லை
முயன்றால் வாழ்வில் தோல்வியில்லை.
படியாதிருந்தால் பயனுமில்லை.
படித்தோர் மனதில் கபடமில்லை.

ஏற்ற இறக்கம் காணாமல்
இலாப நட்டம் வாராது.
இன்பம் துன்பம் இல்லையென்றால்
இல்லம் இன்பம் காணாது.

உன்னை நீயே நம்பாமல்
உலகம் உன்னை ஏற்றிடுமா?
கள்ளம் இல்லா வெள்ளையுள்ளம்
காண்பது இங்கே அரிதம்மா!
நல்லது செய்வாய் பூமகளே!
நானிலம் பயனுற வாழ்மகளே!

Ø

**வவுனியா ஆங்கில சங்கத்தின் கௌரவம் பெறும்**
**திரு.சு.பூபாலசிங்கம், திருமதி.பு.ஐயம்பிள்ளை**









# தாஜ்மகால்

**- ம.கமலதாஸ் -**

வாகனங்கள் வீதிகளில் வேகமாகச் சென்று கொண்டிருந்தன. மரங்கள் பின்னோக்கிப் போய்க்கொண்டிருந்தன. அதேபோல் அவனது கால்களும் நடந்து சென்றன. அவனது நினைவுகள் மட்டும் பின்னோக்கிச் சென்று கொண்டிருந்தன. எங்கு செல்வதென்று தெரியாமல் மரநிழலில் கையில் பூச்செண்டுடன் அமர்ந்து விட்டான்.

நினைவுகளுடன் காலங்களும் பின்நோக்கிச் சென்றன. அன்று அவன் உயர்தரம் படித்துக் கொண்டிருந்தான். அவனது குடும்பம் சிறிதாகவும் நாளாந்த உழைப்பிலும் சென்று கொண்டிருந்தது. ரமேஸ் மாலையில் வேலை செய்து தந்தைக்கு உதவியாக இருந்தான். நன்றாக படிப்பில் கவனம் செலுத்தினான், தாய் மீனாட்சி மிகவும் சிரமப்பட்டு குடும்பத்தை நடாத்தி வந்தாள்.

இறுதிப் பரீட்சைக்கு நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதித் திகதியும் நெருங்கிக் கொண்டிருந்தது. அவனது வாழ்க்கையும் நொருங்கிப் போகும் அளவுக்கு நிலை காணப்பட்டது. நாட்கள் மணித்தியாலயங்களாக குறைந்து கொண்டே சென்றன.

இறுதியாக சுந்தரம் கையில் பணத்துடனும் முகத்தில் புன்சிரிப்புடனும் வீட்டுக் கதவைத் தாண்டி உள்ளே வந்தார். அனைவர்முகத்திலும் சந்தோசம். ரமேஸ் வேகமாக ஓடிச் சென்று அந்த இரண்டாயிரம் ரூபா பணத்தை பரீட்சைக்கு பணமாக கட்டிவிட்டு வந்தான்.

விண்ணில் பறப்பது போன்ற உணர்வுடன் காணப்பட்டான், பரீட்சை நாட்கள் வந்தன, பரீட்சையை ஆவலுடன் எதிர்பார்த்து பாடசாலை சென்றான். முதல் நாள் நன்றாக எழுதினான். அருகில் கதிரை காலியாகவே இருந்தது. அதில் எவரும் அமரவில்லை. அது சுகந்தியின் இடம், பரீட்சை முடிந்தது. இறுதி நாள் பரீட்சை முடிந்த நிறைவுடன் தந்தையுடன் வேலை செய்யச் சென்றான்.

அப்போது அங்கே யாரோ, வந்து மிகுதி பணத்தையும் சுந்தரத்திடம் கொடுத்துவிட்டு நன்றி கூறி சென்றனர், ரமேஸ் அப்பாவை நோக்கி யார் என விசாரித்தான், நீ பரீட்சைக்கு முதல் நாள் நினைத்து கஷ்டப்பட்டாய் அல்லவா? அன்று இவர்கள் தான் என்னிடம் வந்து சவப் பெட்டியை வாங்கிச் சென்றனர். இன்று மிகுதி பணத்தை தந்து விட்டு செல்லுகின்றனர் எனக் கூறினார்.

கையில் இருந்த அரிவாளைப் போட்டு விட்டு நண்பியின் வீட்டுக்கு ஓடிச் சென்று சுகந்தி எங்கே என கேட்டான். சுகந்தி தூக்கிலே தொங்கி தற்கொலை செய்து கொண்டதாக அவள் கூறினாள், என்ன காரணம் என யாருமே கண்டுபிடிக்கவில்லை

எனவும் கூறினாள்.

மௌனமாக வீட்டிற்குச் சென்று அறையை மூடிவிட்டு ரமேஸ் அழுத் தொடங்கினான். சுகந்தி வேறு யாரும் அல்ல. அவனது வகுப்பில் கல்வி கற்றவள். அவள் ரமேஸிடம் அன்பாக பழகினாள். அவனது அன்பு, பொறுமை, திறமை என்பவற்றைக் கண்டு நட்பு காதலாக மாறியது. ஆனால் ரமேஸ் அவளது காதலை ஏற்கவில்லை அவள் பணக்கார வீட்டில் பிறந்தவள். ரமேஸ் மிகவும் ஏழை. இதனால் அவளது காதலை அவன் ஏற்கவில்லை.

அவளது ஞாபகமாக கல்லறை கூட இல்லை, அவள் ஒரு இந்து என்பதால் சாம்பலைக் கூட தண்ணீரில் கரைத்து விட்டார்கள்.

இவன் இன்று சிறிய வயதிலே மாவட்ட நீதிபதியாக கடமையாற்றுகின்றான். இன்றும் அவள் நினைவுடனேயே வாழ்ந்து கொண்டு இருக்கிறான். காதல் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. சாஜகானின் தாஜ்மகாலை விட சவப்பெட்டி புனிதமானது. காதலியின் நினைவுச் சின்னமாக அவனிடம் எதுவுமில்லை. வெறும் நினைவுகள் மட்டும் தான் நிஜங்களின் போலிகளை விட நிழல்களின் நினைவுகள் இனிமையானது.

Ø

*கருவறையில் இருந்து.........* எனும் நாடக நூலுக்காக இலங்கை அரசின் சாகித்திய விருது பெறும் திரு.கந்தையா ஸ்ரீகந்தவேள்








# நான்

ஜெ.அபிராம், வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி.

காலத்தின் ஓட்டத்தால்
தந்தையை நானிழந்தேன்.
காடையர்களின் ஆட்டத்தால்
தாயை நானிழந்தேன்.

உன் மீது கொண்ட நாட்டத்தால்
மனதை நானிழந்தேன்.
நீ போட்ட வேடத்தால்
கற்பை நானிழந்தேன்.

ஈற்றில் தனி மரமாய்
தவித்து நின்றேன்.
என் தனிமை கண்டு - தம்
இனிமை போக்க
கனியே என்றனர்.

வேறு வழியில்லை
என் வயிற்று பசி அகற்ற
அவர்கள் வயசுப் பசி அகற்றினேன்.
இன்று நானொரு விபசாரி!

சிலை மாதாய் இருந்த நான் இன்று
விலைமாதாய் ஆனது
யார் தவறு?

Ø




02.09.2012 அன்று வவுனியா சு.இ.இ.சங்க மண்டபத்தில் நடைபெற்ற "அம்மா" குறும்பட வெளியீட்டு விழாவின்போது.

# உன் பணி

வ.முஹம்மதுஅஸ்லம், வ.தே.க.கல்லூரி.

சுள்ளிப் பிரம்பு கொண்டு - கல்வியை
சொல்லிக் கொடுத்து - அறிவை
அள்ளி வழங்கினாலும்
எள்ளளவும் ஏறாதது - அந்த
கள்ளமில்லா பிள்ளை உள்ளத்தில்.

அவன் அறிவை எட்ட
தலையை குட்டி விட்டு
நீ கொட்டி விட்ட கல்வி
அவனை விட்டும்
புறந்து விடும் நூலறுத்த
பட்டம் போல்.

கொஞ்சம் அன்பைக் காட்டு.
அதனோடு கல்வியை ஊட்டு.
அவன் உள்ளத்தோடு
எழும் சோகங்களை
நீ அன்பாய் கூறும் வாக்கியங்களால்
ஓடி மறையும் பாக்கியம் கொடு.

நீ மட்டும் வாயசைக்க
உன் குரல் இசைக்கு
தலையசைக்கும் பொம்மையல்ல.
அவன் சந்தேகங்களையும்,
அவன் சந்தோசங்களையும் கேட்டு
சிந்தித்து கற்பித்திடு.

அறிவை அன்பால் காட்டு.
ஒழுக்கத்தைப் பண்பால் ஊட்டு.
அவன் உள்ளம் உன்பால் வந்து
கல்வியைத் தேன்போல் பருகுவான்.

∅

**முருகேசு கௌரிகாந்தனின் அம்பிகை பாகன் ஆளுமைத்தடம் மற்றும் கலைஞர் செபமாலை பாராட்டு மலர்**










# எங்கள் சீவிய சி.வியே!

சிறிகணேசன் நதீஸ்கர்.

அறிவின் கடலே
ஆங்கில இலக்கியனே!
கர்மபூமியில் இருந்த - மலையக
மக்களைக் காப்பாற்றியவனே!


சீவிச்சீவி அவர்களை
வெளிச்சப்படுத்தியனே!
வீடற்றவன் எனும்
நாவலில் வாழ்வை வரைந்தவனே!
தேயிலைத் தோட்டத்திலே
எனும் கவிதை வடித்தவனே
உன் அறிவுக்கு யார் நிகர்
எங்கள் சீவிய சி.வி.

இனிப்படமாட்டேன் என எழுதிய
மலையக கதாநாயகனே!
வரண்ட பாலைவனத்துக்கு - நீர்
கொடுத்தாற்போல
மலையகமக்களுக்கு
கருணை காட்டியவனே!


இவ்வுலகம் வாழும் வரை
நீ காப்பாற்றிய மலையகமக்களை
உன் போலக் காப்பாற்றுவோம் - என்று
வாக்களிக்கின்றோம்.
எங்கள் சீவிய சி.வி.எனும்
சி.வி.வேலுப்பிள்ளையயே!

∅

**யாழில் இருந்து வரும் சஞ்சிகை**




**வட்டத்தின் வெளியீடு**



# தமிழர் பண்பாடு

கலாநிதி அகளங்கன்

அது ஒரு திரு மண வைபவம். மணமகன், மணமகள் இருவருமே தமிழர்கள். திருமணம், மந்திரஒலி, தாலி, ஓமத்தீ, அம்மிமிதித்தல், அருந்ததி காட்டல், தீவலம் வருதல் என இந்து சமய முறைப்படி நடந்தேறியது. இது இந்துத் திருமணமா? தமிழ்த்திருமணமா? அதுவல்ல பிரச்சினை.

மணமகள் சேலை அணிந்திருந்தார். மணமகளின் தோழியும் சேலை அணிந்திருந்தாள். மணமகன் வேட்டி உடுத்திருக்கவில்லை. தோழனும் வேட்டி அணிந்திருக்கவில்லை.

ஷர்வாணி, குர்தா அணிந்து வட இந்தியராகக் காட்சியளித்தனர்.

மணமகள், பஞ்சாபி, சுடிதார், ஜீன்ஸ் அல்லது வேறு ஆடை ஏதாவது அணிந்து மணவறையில் அமர்ந்திருந்தால் எப்படியிருக்கும். தோழியும் அப்படியே அணிந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்.

இப்படி ஒரு நிலை வருமா? வராது என்று எப்படி எதிர்வு கூற முடியும். வரலாம். வராமற் தடுக்க வழி ஒன்று உண்டு. ஆண்கள் யாவரும் (மணமகன், தோழன்) வேட்டி உடுத்தால் வராமல் தடுக்கலாம்.

மணமகனுக்கு வேட்டி உடுப்பதில் உள்ள பிரச்சினையைத் தீர்த்தால் அவர் வேட்டி உடுப்பார். வேட்டி, வசதியற்ற ஆடை, உடுக்கவும், நடக்கவும், இருக்கவும் என அசௌகரியமானது என்பது பலரதும் கருத்து. வேட்டியை சௌகரியமான ஆடையாக மாற்றினால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம்.

சிறு பிள்ளைகளுக்கு இலாஸ்ரிக் வைத்துத் தைத்த பஞ்ச கச்சம் இருக்கிறதல்லவா. அதே போல இலாஸ்ரிக் வைத்த வேட்டி தயாரிக்கப்பட்டால் இந்தப் பிரச்சினை தீரும். பண்பாடு காப்பாற்றப்படும்.

ஆடை உற்பத்தியாளர்கள்தான் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும். வேறு வழியில்லை. எவ்வளவு காலத்துக்குத்தான் பெண்கள் பொறுமை காப்பார்கள். ஒரு புதுமைப் பெண் பட்டாடையை (சேலையை) கைவிட்டாலே பிரச்சினை பெரிதாகிவிடுமல்லவா.

Ø





# பாரதி பாரத் தீ

ப.எ.அன்ரன்

தமிழ்க்கவியே...!
தமிழ்த்தாயின் தவப்புதல்வா!

தமிழால் வணங்கி...
நீ ... வகுத்த பெண் விடுதலையில்
நீ பகன்றவை சிறிது கூற
முனைகின்றேன்.

மாதர்தம்மை இழிவு
செய்யும் மடமையைக்
கொளுத்தி...
வீட்டுக்குள் பெண்ணை
பூட்டிவைப்போரை
தட்டிக்கேட்டவன நீ.

எட்டய புரத்திலிருந்து
எட்டு திக்கும் அதிர
நின் தமிழ்க் கவியில்
பாமரம் பறந்திட
பாடல்கள் ஈந்தவனே...

தாய்க்குலம் போற்றி
தமிழ்க்குலம் தழைத்திட
பெண்விடுதலைக்கு
பாரதப் போரின்
பாஞ்சாலி சபதம் தந்தாய்!

பெண்ணின் மனதறிந்து
கண்ணம்மா.... உன்னில்
உதித்தாள்.
இன்று மலிவு விலையில்
காதல்...
இருதுருவம் இணைவதாய்
கண்ணம்மாவில்
மருவக் காதல் கண்டாய்!
பெண்ணுரிமை போற்றினாய்.

இலக்கிய நயம்
பேசும்... நீ பிறந்த
மண்ணின் எந்த
சஞ்சிகையில் இல்லை?
பெண் கவர்ச்சிப்பாவையாய்
முன் அட்டை
பின் அட்டையில்.

உன் கவிதனில்
பெண்ணின் சித்திரம்
பேசும்.... நம்
சிந்தை மயங்கிட.
ஆணாதிக்கத்தின்
அடிவருடிகள்
பெண்ணுரிமை பேசி
பெண்ணை பேதையாக்கி
போதைப் பொருளாக்கி
பார்த்தோருக்கும்
நீ வடித்தவை
வைர வரிகள்...!

வீரம் ஆணுக்குமட்டுமல்ல
பெண்ணுக்குள் ஈரமும்
வீரமும் வேண்டுமென
தீரமுடன் உரைத்தவன் நீ
பாரதி - பாரத் தீ.

Ø

# தாயின் கருவறை

ர.துர்க்கா, வ/கணேஸ்வரா ம.வி

கவலை இல்லை
கனவுகளும் இல்லை
கள்ளம் கபடம்
புரியவுமில்லை
உலகின் போலி வேஷம்
அறியவில்லை

நேற்றைய பொழுதுமில்லை
இன்றைய ரணங்களுமில்லை
நாளைய எதிர்பார்ப்பும் இல்லை
தாயின் கருவறையில் இருந்த
அந்த இனிமையான நாட்கள்
மீண்டும் வராதா?

**நிழல்கள்**

சூரிய நெருப்பு
சுடுகிற பாதத்தில்
ஒத்தடம் கொடுக்கும்
நிழல் எச்சங்கள்.

வெய்யில் தாங்காமல்
விரைந்து வரும்
காலுக்குச் சிறிது
நேரச் செருப்பு

மண்ணில் மச்சங்கள்
மரத்தின் எச்சங்கள்

**பூ**

செடியின் சிரிப்பு

**கருப்பை**

தொட்டில் மலர்களைத்
தரப்போகின்ற தோட்டம்.

**கடல்**

முத்துக்களின் பள்ளம்
சாம்பலின் சமவெளி
நதிகளின் கல்லறை

**தாஜ்மஹால்**

அழிந்த காதலரின்
அழியாத காதலுக்கு
அடையாள அழகு இது.

**காற்று**

வாய்பேசமுடியாத
மரக்கிளைகளின்
மாநாட்டுக்கு
துணைபுரியும்
தூதுவன்.

**இசை**

ஆத்மாவோடு
பேசுகின்ற
அந்தரங்கப்பாதை

**பசி**

சில வேளைகளில்
கரும்பலகைகளும்
பசிதீர்த்துக் கொள்கின்றன.
வெண்கட்டிகளைத் தின்று

∅





# செய்யுளிலக்கணம் - (யாப்பிலக்கணம்)

ந.பார்த்திபன், ஆசிரிய கல்வியியலாளர், வ.தே.க.கல்லூரி, வவுனியா.

காலத்தால் முந்தியது செய்யுள். சங்க காலத்திலிருந்து இன்று வரை தொடர்ந்து கொண்டிருப்பது கவிதை. இசையோடு பாடப்படுவதால் பாட்டு, பாடல், பா என்றும் செய்யுள் அழைக்கப்படுகின்றது. எழுதுவதற்குக் கடுமையான துறை கவிதை. இருப்பினும் இன்று பலராலும் எழுதப்படுவதும் கவிதையாகவே காணப்படுகின்றது. பாரதியின் வசன கவிதையின் வருகையோடு கவிதை பல்வேறு பரிமாணங்களையும் பெற்று மலிந்து விட்டதெனவும் கூறலாம் யாரும் எழுத முடியும். எப்படியும் எழுதலாம் என்ற நினைப்பு பலருக்கும் ஏற்பட்டதனால் கவிதை பற்றிய தெளிவு கவிதை இலக்கணம் தொடர்பான அறிவு எதுவுமே இல்லாத எல்லோரும் கம்பனாகவும் இளங்கோவாகவும் உருவெடுத்து நினைப்பதை எல்லாம் எழுதிக் குவிக்கிறார்கள். மரபுக் கவிதை, புதுக்கவிதை, உரைவீச்சு, ஹக்கூ கவிதை, மணிக்கவிதை எனப் பல்வேறு நாமங்களைச் சூட்டி புதுக்கவிதை என்று புதுக்க விதை போடுகிறார்கள். இறுதியில் கவிதை என்று தேறியது எத்தனை?

யாப்பிலக்கணம் தெரியாமல் மரபுக்கவிதைப் பரிச்சயம் இல்லாமல் புதுக்கவிதை எழுதும் துணிச்சல் புற்றீசல் போல பறந்து ஆயுளையும் விரைவாக முடித்து அகால மரணமாகின்றன. அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள், அப்பனும் நோக்கினான் அடித்து நொருக்கினான், எனப் புதுக்கவிதை எழுதும் நிலைக்கு கவிஞர்கள் தள்ளப்பட்டுள்ளனர். செய்யுளின் அமைப்புகளைக் கூறும் யாப்பிலக்கணத்தைத் தெரிந்து கொள்ளாமல் கவிதை எழுத முற்படுகின்றார்கள். செய்யுளின் உறுப்புகளின் இலக்கணங்களைக் கூறும் உறுப்பியல் பற்றியும் அவ்வுறுப்புகளான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன பற்றியும் தெரிந்து கொள்ளாமல் கவிதை எழுதத் தொடங்குகிறார்கள். இதுவே இன்றைய கவிதைகளின் தரத்தை நிர்ணயிப்பதில், உள்ளடக்கத்தில் புதுமையையும் உருவத்தில் சிறப்பையும் காட்டுவதில் தவறினை ஏற்படுத்துகின்றது.

இக்கட்டுரை செய்யுள் இலக்கணம் பற்றி கூற முற்படுகிறது. தமிழ் இலக்கணத்தில் எழுத்துக்களை உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என நான்காகப் பிரிப்பர். செய்யுள் இலக்கணத்தில் எழுத்து, குறில், நெடில், ஒற்று என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் உயிரெழுத்துக்களில் அ,இ,உ,எ,ஒ என்ற ஐந்தும் இவ்வைந்தினால் பதினெட்டு மெய்யுடன் உருவாக்கப்பட்ட தொண்ணூறு எழுத்துக்களும் (உ-ம் க,கி,ச,சு) குறில் எனலாம் அடுத்து ஆ.ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ என்ற ஏழும் இவ்வேழினால் பதினெட்டு மெய்யுடன் உருவாக்கப்பட்ட நூற்றிருபத்தாறு எழுத்துக்களும் நெடில் எழுத்துகளாயும், மெய்யெழுத்துகள் அல்லது குற்றெழுத்துகள் பதினெட்டும் ஆய்தமும் சேர்ந்து ஒற்று எழுத்துக்களெனவும் கருதப்படுகின்றது. யாப்பிலக்கணப்படி உயிர் எழுத்துக்களை குறுகிய ஓசை உடையவை, நீண்ட ஓசை உடையவை என்று குறிப்பிட்டு மெய்யெழுத்துக்களை வல்லினம், மெல்லினம், இடையினம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

அடுத்து, அசை என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் செய்யுளில் ஓரெழுத்தோ பல எழுத்தோ அசைவதால் உண்டாவது அசை எனக் குறிப்பிட்டு இது நேரசை, நிரையசை என இரு பிரிவாகக் குறிப்பிடப்படுகிறது. இங்கு நேரசையானது தனிக்குறில் தனிநெடில், குறிலொற்று, நெடிலொற்று என்றும் நிரையாசையானது குறிலிணை, குறில்நெடில், குறிலிணை ஒற்று, குறில் நெடில் ஒற்று என்றும் அழைக்கப்படுகிறது. நேரசை என்னும் போது நேர் என்ற சொல்லில் ஓர் உயிர் மட்டுமே உள்ளது. நே என்பது ந் + ஏ என்ற வகையில் ஏ என்ற ஓர் உயிர் மட்டுமே உள்ளதால் ஓர் உயிர் உள்ள அசைகளை நேரசை என அழைக்கும் வழக்கம் உள்ளது. உதாரணமாக கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி என்ற செய்யுள் வரியை எடுத்துக் கொள்வோ மாயின் கா - ஒரு நெடில் மட்டும் ஓர் அசையாகவும், ன - ஒரு குறில் மட்டும் ஓர் அசையாகவும் உள்ளது. இதே போல் கண் - என்பதில் ஒரு குறில் தனக் கடுத்த ஒற்றைப் பெற்று வர, வான் - என்பதில் ஒரு நெடில் தனக்கடுத்த ஒற்றைப் பெற்று வந்துள்ளது. நிரையசை எனும் போது இரண்டு உயிர்கள் வந்து ஈருயிர் அசையாக இருக்கும். நிரை என்ற சொல்லில் ந் + "இ" + ர் + "ஐ" என் ஈருயிர் உள்ள நிலையில் இது நிரையசை என அழைக்கப்படும்.

**கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி**
**தானு மதுவாகப் பாவித்துத் - தானுந்தன்**
**பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி. (மூதுரை - 14)**

இங்கு மயி - இரு குறில்கள் இணைந்து ஓரசையாக உள்ளது. லுமே - ஒரு குறிலும் ஒரு நெடிலும் இணைந்து ஓரசையாக உள்ளது. விரித் இரு குறில்கள் இணைந்து ஒற்றடுத்து ஓரசையாக உள்ளது.

குறிப்பு :

1. மயிலாடக் என்ற சீரின் முதலில் உள்ள "ம" என்ற குறில் தனியாக ஓரசையாகவில்லை ஆனால் இச் சீரின் இறுதியில் தனித்து நின்ற த என்ற ஒரு குறில் நேரசை ஆயிற்று. எனவே சீரின் முதலிலும் இடையிலும் தனிக்குறில் நேரசை ஆகாது. இறுதியில் மட்டுமே அவ்வாறு ஆகின்றது.

2. மிகா என்பது குறில் நெடில் என்றமைந்துள்ள ஒரு நிரையசை. இதன் எழுத்துக்களே முன்பின்னாக காமி என்று நின்றால் இரண்டு அசையாகும். கா- நெடில் நேரோசை,மி-தனிக்குறில் நேரசை.

3. சீர்களில் அசை பிரிக்கும் போது அடுத்து நிற்கும் ஒற்றையும்(வாழ்க் என்பது போல் இரண்டு ஒற்று இருந்தாலும்) அசையின் இறுதியில் சேர்த்துக் கொள்ள வேண்டும். சீரின் முதலில் ஒற்று வராது.

4. ஐ கார வரிசை எழுத்துகள் சீரின் தொடக்கத்தில் மட்டும் நெடிலாகக் கொள்ளப்படும். இடையிலும் இறுதியிலும் அவை குறிலாகக் கொள்ளப்படும்.





இனி, சீர் என்ற விடயத்தை எடுத்து நோக்குவோம். அசைகளில் ஒன்றோ பலவோ நின்று சீர் ஆகும் எனப்படுகிறது. இது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர் என்றெல்லாம் பிரித்து நோக்கப்படும்.

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

இங்கு வார் என்பது நேரசை. இது இங்கு ஒரு சீராக நிற்பதால் இதனை ஓரசைச்சீர் எனலாம். பொதுவாக நாள் என்ற சொல் ஒரு நேரசையாக இருப்பதால் இவ்வாறான நேரசையான ஓரசைச்சீர் 'நாள் சீர்' என்று அழைக்கப்படும். இதே போல் ஓரசைச்சீரானது நிரையசையாக இருப்பின் அது 'மலர்ச்சீர்' என்று அழைக்கப்படும். நிற்க அதற்குத் தக என்பதில் தக என்பது ஈருயிர்கள் கொண்ட ஒரு நிரையசையாகக் காணப்படுகிறது. இந்நிலையில் வார் என்பது நெடிலொற்றாக நேரசையாகவும் தக என்பது குறிலிணையாக நிரையசையாகவும் வந்துள்ளதோடு ஒருயிர் அசை, ஈருயிர் அசையாக வந்ததோடு ஓரசைச் சீர்களாகவே வந்துள்ளதால் அவற்றை வேறுபடுத்த நாள் சீர், மலர்ச்சீர் என விளக்கப்படுகின்றது.

மேலும் செய்யுளில் ஈரசைச் சீர்கள் தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை முறையே நேர் நேர் எனில் தேமா என்றும், நிரை நேர் எனில் புளிமா என்றும், நிரை நிரை எனில் கருவிளம் என்றும் நேர் நிரை எனில் கூவிளம் என்றும் குறிப்பிடலாம்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

என்ற குறளில் கற் -க என்ற சீரன் அசைகள் நேர் நேர் என்னும் தேமா, அதற் - குத் என்ற சீரின் அசைகள் நிரை நேர் என்றும் புளிமா, கச - டறக் என்ற சீரின் அசைகள் நிரை நிரை என்னும் கருவிளம், கற் - பவை என்ற சீரின் அசைகள் நேர் நிரை என்னும் கூவிளம் என நாம் விளங்கிக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக பின்வரும் குறளைக் கூறலாம்

**அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்**
**(புளிமா கருவிளம் கூவிளம் தேமா)**

**புறத்த புகழு மில**
**(புளிமா புளிமா மலர்)**

இவ்வாறே மூவசைச் சீரகளும் சில செய்யுள்களில் காணப்படுகின்றன. அவ்வாறு வருமிடத்து மூன்றாவது சீர் நேரசையாய் இருப்பின் காய் என்றும். நிரையசையாய் இருப்பின் கனி என்றும் கூறப்படும். முன் குறிப்பிட்ட நேர் நேர் தேமா எனில் நேர் நேர் நேர் என்பது தேமாங்காய் என்றும், நிரை நேர் புளிமா எனில் நிரை நேர் நேர் என்பது புளிமாங்காய் என்றும் நிரை நிரை கருவிளம் எனில் நிரை நிரை நேர் என்பது கருவிளங்காய் என்றும், நேர் நிரை கூவிளம் எனில் நேர் நிரை நேர் என்பது கூவிளங்காய் என்றும் அழைக்கப்படும். இவற்றில் முறையே இறுதியில் நிரையசை வருமாயின் தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி எனவும் அழைக்கப்படும்.

தளை என்பதை அடுத்துப் பார்ப்போம். மேற்கூறிய சீரகளுக்கிடையே உள்ள உறவுகளை தளை என்பர். இத்தகைய உறவுகள் ஏழு வகைப்படுகின்றன. அவையாவன நேர் ஒன்று ஆசிரியத்தளை, நிரை ஒன்று ஆசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை. இங்கு தேமா, புளிமா என்ற சீரகளை மா என்று குறிப்பிடுவதும் கருவிளம், கூவிளம்என்ற சீர்களை விளம் என்று குறிப்பிடுவதும் ஏனையவற்றை காய் கனி என்று குறிப்பிடுவதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை என்ற வரியை எடுத்துக் கொண்டால் அன்பும் - நேர்நேர் தேமா, அறனும் நிரை நேர் புளிமா, உடைத்தாயின - நிரை நேர் நேர் - புளிமாங்காய், இல்வாழ்க்கை - நேர் நேர் நேர் - தேமாங்காய் என்று அமைகின்றது. இங்கு அன்பும் என்ற முதல் சீரக்கும் அறனும் என்ற அடுத்து வரும் சீரக்கும் உள்ள உறவு மா முன் நிரை என்றாகும். இதே போல் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை என்ற சீர்கள் காய் முன்நேராக உறவு கொண்டுள்ளன. இந் நிலையில் சீரகளுக்கிடையேயுள்ள உறவுகள் தளை என அழைக்கப்படுவதால் இவை பின்வருமாறு அமைந்து பெயர் பெற்றுக்கொள்ளும்.

1. மா முன் நேர் - நேர் ஒன்று ஆசிரியத்தளை
2. விளம் முன் நிரை - நிரை ஒன்று ஆசிரியத்தளை
3. மா முன் நிரை
   விளம் முன் நேர் இயற்சீர் வெண்டளை. இவை இரண்டும் ஒரே
பெயர் கொண்டு அழைக்கப்படும்.
4. காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை
5. காய் முன் நிரை - கலித்தளை
6. கனி முன் நிரை - ஒன்றிய வஞ்சித்தளை
7. கனி முன்நேர் - ஒன்றாத வஞ்சித்தளை

குறிப்பு :-ஆசிரியத்தளை 2வகையானது - இது ஆசிரியப்பாவுக்குரியது.
வெண்டளை 3வகையாக வெண்பாவுக்குப் பயன்படும்.
வஞ்சித்தளை 2 வகையானது - இது வஞ்சிப்பாவுக்குரியது.

இவற்றுள் வெண்பாவில் வெண்டளைகள் மட்டுமே வரும். ஏனைய பாக்களில் எல்லாத் தளைகளும் வரலாம்.

* வெண்டளை இலக்கணத் தெளிவு அவசியம்.

5. அடி: சீர் பல கொண்டது அடி. இது ஐந்து வகைப்படும். அவையாவன இரு சீரடி - குறளடி, முச்சீரடி - சிந்தடி, நாற்சீரடி - அளவடி, நேரடி, ஐஞ்சீரடி - நெடிலடி, ஐஞ்சீருக்கு மேற்பட்டவை கழிநெடிலடி எனப்படும். சீர்கள் பல சேர்ந்து அடி என்ற வகையில் கருவார் கச்சி என்பதில் இரு சீர்கள் உள்ளன. எனவே இது இருசீரடி எனப்படும். நாட்டிற் பிறந்த நாள்முதலாய் மூன்று சீர்கள் முச்சீரடி, உலகம் யாவையும் தாமுள வாக்கலும் நாற்சீரடி, குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும் ஐஞ்சீரடி, பொங்கரில் நுழைந்து வாவி புகுந்துபங் கயம்து ழாவி என்பது ஆறு சீர்கள் கொண்டதால் அறுசீர்க்கழிநெடிலடி எனப்பட்டாலும். இவ்வாறு ஆறு, ஏழு, எட்டு சீர்கள் அமைவனவெல்லாம் பொதுவாக கழிநெடிலடி எனப்படும்.





6. தொடை: யாப்பிலக்கண உறுப்பில் ஆறாவதாக இது குறிப்பிடப்படுகிறது. இது மோனை, எதுகை, முரண், இயைபு.அளபெடை என ஐந்து பிரிவாகப் பிரித்து விளக்கப்படுகிறது.

6.1 மோனை : முதலெழுத்து ஒத்து வருவது மோனை எனப்படும். ஒரு வரியில் அமைகின்ற சொற்களின் முதலெழுத்துக்கள், உதாரணமாக க, கா அல்லது ம,மா என்று அமையுமாயில் மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் என்ற அடியில் சீரின் முதலெழுத்து ம,மா என்று வந்துள்ளதால் இது மோனை எனப்படும் இந்த மோனை எழுத்துக்களுக்கான பட்டியல் பின்வருமாறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அ,ஆ,ஐ,ஔ | 2. | க,கா,கை,கௌ | 3. | ப,பா,பை,பௌ |
| 4. | கி,கீ,கெ,கே | 5. | பி,பீ,பெ,பே | 6. | உ,ஊ,ஒ,ஓ |
| 7. | கு,கூ,கொ,கோ | 8. | பு,பூ,பொ,போ | 9. | மு,மூ,மொ,மோ |
| 10. | இ,ஈ,எ,ஏ,யா | 11. | ந,நா,நை,நௌ,ஞ,ஞா | | |
| 12. | நி,நீ,நெ,நே,ஞெ | 13. | நு,நூ,நொ,நோ,ஞொ | | |
| 14. | ச,சா,சை,சௌ,த,தா,தை,தௌ | | | | |
| 15. | ம,மா,மை,மௌ,வ,வா,வை,வௌ | | | | |
| 16. | சி,சீ,செ,சே,தி,தீ,தெ,தே | | | | |
| 17. | மி,மீ,மெ,மே,வி,வீ,வெ,வே | | | | |
| 18. | சு,சூ,சொ,சோ,து,தூ,தொ,தோ | | | | |

உதாரணமாக சிறுமி என்ற சீர்க்குப் பின்வரும் சீரகளில் மோனை அமையும் செல்வம், சேவகி, திருடி, தீமை, தெரு, தேள்

6.2 எதுகை : அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு ஒரு அடியிலுள்ள இரண்டாம் எழுத்தும் அடுத்த அடியிலுள்ள இரண்டாம் எழுத்தும் ஒத்துவருவது எதுகை.

மேலும் முதலெழுத்துக்கள் அ,ப என குறில்களாகவே வந்துள்ளன. குறிலுக்குக் குறில், நெடிலுக்கு நெடில் என்று அளவு ஒத்திருக்க வேண்டும்.

இரண்டாம் எழுத்து ஒத்திருந்தால் போதும். எதிலும் பல எழுத்துக்கள் ஒத்திருப்பதும் விரும்பத்தக்கது. எவ்வளவு எழுத்துக்கள் அதிகம் ஒத்திருக்கின்றனவோ அவ்வளவுக்கு அது சிறந்த எதுகையாக அமையும். உதாரணம் சுற்றத்தால் - பெற்றத்தால் பூத்திருந்து - காத்திருந்து, உன்னைச்சொல்லி - என்னைச்சொல்லி.

6.3 முரண், சொல்லாலும் பொருளாலும் முரண்பட்ட சொற்களால் தொடுப்பது முரண் தொடை எனப்படும். உதாரணமாக சுருங்கிய இடையும் அகன்ற விழிகளும், செந்தமிழில் வெண்பாச் செய்து கொடுத்தவன்,சிரிப்புப் பாதி அழுகை பாதி.

6.4 இயைபு, பாடல் அடிகளின் அல்லது அரையடிகளின் இறுதிச்சீர் ஒலியால் ஒத்து வருவது இயைபு எனப்படும். உதாரணமாக நந்தவனத்திலோர் ஆண்டி-அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி, கொண்டுவந் தானொரு தோண்டி-மெத்தக் கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத் தாண்டி - இங்கு பாடலின் இறுதி அடியில் ஒலியால் ஒத்து வந்துள்ளது. இவ்வாறே துடிக்குள் அடங்கி ஒரு பிடிக்குள் அடங்கும் சின்ன

இடையினாள் - காமத், துட்டன், அரண்மனைக்குக் கட்டும்காதலிவாழைத் தொடையினாள், அடுக்குவன்னச்சேலை எடுத்துநெறிபிடித்த உடையினாள் - மட அன்னந டையில் ஒரு சின்னந டையயிலும் நடையினாள்.

6.5 அளபெடை, அளபெடையுடன் கூடிய சீர்கள் ஒன்றிவரத் தொடுப்பது அளபெடைத் தொடையாகும். உதாரணமாக ஆ,அ என அலறி ஓ ஒ எனத் துடித்து இதில் ஆ,அ, ஓ,ஒ என்பன அளபெடுத்த சீர்கள். அவை தம்முள் ஒலி ஒற்றுமை இருப்பதால் ஒருவகைத் தொடையாயின.


*குறிப்பு :- முரணில், சொல் முரண் செந்தமிழில் வெண்பாச் செய்து கொடுத்தலின் என்பதில் செம்மை, வெண்மை என்பன சொல்லளவில் தான் முரண்.


சிரிப்புப் பாதி அழுகை பாதி என்பதில் பொருள் முரண்

மீண்டும் மீண்டும் ஆழமாகக் கருத்தூன்றிப் படித்தால் இச் செய்யுள் இலக்கணத்தை நன்கு புரிந்து கொள்ளலாம். புலவன், கவிஞன் என்று பெயரெடுத்தவர்கள். இச் செய்யுள் இலக்கணத்தைத் துறைபோகக் கற்றுத் தேறியவர்களே. இந்நிலையில் புதுக்கவிதையோ மரபுக்கவிதையோ எழுத விரும்புபவர்கள் கவிதை இலக்கணத்தைக் கவனமாகக் கற்றுத் தேறி கவிதை படைப்பது சாலச்சிறந்தது.

Ø

வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி மாணவர்களின் ஆங்கில நூலும் கவிஞர் சேரனின் ஆங்கில கவிதைத் தொகுப்பும்







**நாடகம்**

# ஆரொடு நோகேன் (நாடகம்)

குழந்தை ம.சண்முகலிங்கம்,
"தாயகம்" திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

நாடக மாந்தர்

குடும்பம் ஒன்று - மத்தியதர (உயர்) வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ரஞ்சித்குமார் | தகப்பன் | 50 வயது |
| 2. | சுபத்திரா | தாய் | 45 வயது |
| 3. | ஷங்கரி | மகள் | 15 வயது |

குடும்பம் இரண்டு - மத்தியதர (உயர்) வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 4. | ராஜ்குமார் | தகப்பன் | 60 வயது |
| 5. | செல்வராணி | தாய் | 51 வயது |
| 6. | ரஜீவ் | மகன் | 18 வயது |
| 7. | ஷீலா | மகள் | 15 வயது |

குடும்பம் மூன்று - மத்தியதர (சாதாரண) வர்க்கம்

| | | | |
|---|---|---|---|
| 8. | இராஜதுரை | தகப்பன் | 60 வயது |
| 9. | சரோஜினி | தாய் | 55 வயது |
| 10. | ஆரணி | மகள் | 25 வயது |
| 11. | அம்பிகை | மகள் | 15 வயது |

பாடும் குழு
ஐந்து முதல் பதினைந்து வரை தொகை இருக்கலாம்.

முன்திரை விலகும் போது பின்வரும் பகுதி ஒருவரால் பேசப்படலாம். அல்லது பாடப் படலாம். மேடையில் ஏறி நின்று இதனைச் செய்யலாம்.

தாய்மடி அல்லவோ தரணியின் தொட்டிலாம்
தொட்டிலை ஆட்டுமோ தந்தையின் இரு கரம்?
இருகரம் நீட்டுமோ! கால்களை ஆட்டுமே!
ஆட்டுமக் குழந்தையோ, மனிதனின் தந்தையாம்.

மனிதனின் தந்தையாய்த் தாயுமாய் உதித்தவர்
மனிதனின் குழந்தையாய் என்றுமே கிடப்பரோ?
மனிதனாய் வளர்ந்திடத் தாய்மடி விலகுவார்,
மனிதனாய் வாழ்ந்திடக் குதித்தெழுந்தோடுவார்.

இதனை அடுத்து முன்திரை விலக ஆரம்பிக்கும் வேளையில் பாடும் குழுவினர் கூட்டமாக உரியதொரு மிடற்றிசையை எழுப்புவர். மேடையில் மூன்று குடும்பங்கள் என உணர்த்துமாறு உரியவர் நிற்பர். 1. ரஞ்சித் - சுபத்திரா - ஷங்கரி குடும்பம் - சுபத்திரா தன் மகள் ஷங்கரிக்கு உணவு ஊட்டுவார். ஷங்கரி அடம் பிடிப்பாள். தந்தை

மகளுக்கு தலைக்கு எண்ணெய் தடவுவார். வாரி விடுவார். பாவம் ஷங்கரி அன்பின் துயரம் அவளுக்கு. 2. ராஸ்குமார் - செல்வராணி - ரஜீவ் - ஷீலா குடும்பம். பிள்ளைகள் உண்பதைக் கையில் தடியோடு நின்று கடும் மேற்பார்வை செய்வார் தந்தை. பிள்ளைகளின் அவலத்தை தாய் தீர்க்க முடியாது நின்று சங்கடப்படுவார். 3. இராஜதுரை - சறோஜினி, ஆரணி, அம்பிகை குடும்பம், தாயும் சின்னவளும், அக்கையும் தங்கையும் கடும் வாக்கு வாதத்தில் ஈடுபடுவர். தந்தை எதையோ படித்தபடி இருப்பார். அனைத்தும் ஒலியின்றி நிகழ பின்வரும் பகுதி பாடப்படும்

| | |
|---|---|
| அம்புலி மாமா! | அழகழ சொக்கா! |
| எங்கை போறாய்? | காட்டை போறேன்! |
| காட்டை ஏன்? | கம்பு வெட்ட! |
| கம்பு ஏன்! | மாடு சாய்க்க! |
| மாடு ஏன்! | சாணி போட! |
| சாணி ஏன்? | வீடு மெழுக! |
| வீடு ஏன்? | பிள்ளை வளர! |
| பிள்ளை ஏன்? | பள்ளி போக! |
| பள்ளி ஏன்? | பாடம் படிக்க! |
| பாடம் ஏன்? | பட்டம் வாங்க! |
| பட்டம் ஏன்? | பதவி வாங்க! |
| பதவி ஏன்? | நடப்புக் காட்ட! |
| நடப்பு ஏன்? | பெருமைக் காக! |
| பெருமை ஏன்? | பெருமைக் காக! |
| பெருமை ஏன்? | பெருமைக் காக! |
| பெருமை ஏன்? | பெருமைக் காக! |
| சுக்குப் புக்கு! | ரப்பர் தோட்டம்! |
| சுத்திச் சுத்திச்! | சுப்பர் கொல்லை! |

குறித்தவொரு கட்டத்தில் பாடும் குழுவினரும் மேடையிலிருந்த குடும்பங்களும் இணைந்து முன் மேடையில், சிறுவர் புகைவண்டி விளையாடும் முறைமையில், அசைவுகளைச் செய்து கொண்டிருப்பர். அவ்வேளையில் முதலாம் குடும்பத்துக்கான காட்சி ஒழுங்கு மேடையில் செய்யப்படும். காட்சி ஒழுங்கு முடிவடைய பாடகர் குழு தமது இடத்துக்குச் செல்ல முதலாம் குடும்பம் மேடையில் உரிய இடங்களுக்குச் செல்ல மற்றும் இரு குடும்பங்களும் உள்ளே சென்று மறையும், தந்தை ரஞ்சித்தும், ஷங்கரியும் எதையோ எழுதுவதில் தீவிரமாக ஈடுபட்டிருப்பர். தாய் சுபத்திரா ஒரு சீருடையைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு

சுபத் : ஷங்கரி

ஷங்க : என்னம்மா?

சுபத் : புது யூனிபோம்! இண்டைக்கு அதைப் போடுவம்!

ஷங்க : அம்மா! யூனிபோம், நீங்களுமா போடப் போறீங்கள்?!

சுபத் : ஏன் குஞ்சு!

ஷங்க : “போடுவம்” எண்டு சொன்னீங்கள் (சிரிக்கிறாள்)

றஞ்சி : ‘கிளவர் கேர்ள்’! கெட்டிக்காரி

சுபத் : ரெண்டு பேரும் “எஸ்சே” (Essay) யை சுறுக்கா எழுதி முடியுங்கோ. ஆற்றை “எஸ்சே” (Essay) நல்லமெண்டு பாப்பம்.

ஷங்க : நான் போட்டிக்கு எழுத இல்லை!

றஞ்சி : நான் பிள்ளைக்கு நல்ல ‘எஸ்சே’ (Essay) எழுதித் தருவன்.

சுபத் : ஓம் குஞ்சு நீங்கள் அதை வடிவா “கொப்பி” பண்ணிக் கொண்டுபோய் “ட்டீச்சரிட்டை காட்டுங்கோ”!





றஞ்சி : அதை வாசிச்சிட்டு “ட்டீச்சர் கிளாசிலை” எல்லாப் பிள்ளையளுக்கும் முன்னாலை “ஷங்கரி இஸ் ஏ கிளெவர் கேர்ள்” எண்டு சொல்லுவா!

சுபத் : அது உங்களுக்குப் பெருமை தானே?!

ஷங்க : ஓம் ட்டீச்சர் போனாப்பிறகு ‘ஸ்ருடன்ட்ஸ்’ சொல்லுவினம்

றஞ்சி : என்னண்டு?!

ஷங்க : “ஷங்கரிஸ் பார்தர் இஸ் ஏ கிளெவர் கேர்ள் ” எண்டு. அதுவும் எனக்குப் பெருமை தானே!

சுபத் : ஷங்கரி! நீங்கள் இப்ப முந்தியைப் போல இல்லை!

றஞ்சி : சரியான வித்தியாசமா வாறீங்கள்!

ஷங்க : எனக்கு அடுத்த பேர்த்டேக்கு எத்தினை “கன்டில்ஸ்” வாயாலை ஊதி நூக்கச் சொல்லுவீங்கள்.

சுபத் : பதினாறு!

றஞ்சி : “சுவிட் சிக்ஸ்டீன்” டார்ளிங்!

ஷங்க : அப்ப நான் இன்னமும் குழந்தை இல்லைத் தானே!

சுபத் : நீங்கள் எப்பவும் எங்களுக்கு “பேபி”தான்.

ஷங்க : அப்ப, நான் எப்ப அம்மா, நானாகத் தனிச்சு என்ர கால்லை நிற்கிறது?

றஞ்சி : இப்படிக் கதைக்காதையுங்கோ குஞ்சு (தலையைத் தடவுதல்)

சுபத் : நீங்கள்! ஷங்கரி! ஐயோ! இப்படிக் கதைக்காதையுங்கோ (அவளைக் கட்டி அணைத்து அழுகிறார்)

ஷங்க : சரி! சரி! நான் எழுதின “எஸ்சே!யை வாசிக்கிறன்.”

சுபத் : சங்கரி! அப்பா எழுதினதை முதல்லை வாசிக்கட்டன்.

ஷங்க : “எஸ்சே” எழுதிறது என்ரை “ஹோம்வேர்க்” தானே!

சுபத் : ஏன் ஷங்கரி இப்பிடி பிரிச்சுப் பிரிச்சுக் கதைக்கிறீங்கள்?

றஞ்சி : உங்கடை “ஹோம் வேர்க்” எண்டால் எங்கடை “ஹோம் வேர்க்” தானே அதுகும். (கெஞ்சுவது போல)

ஷங்க : அப்ப ரெண்டு பேரும் எனக்காக “யூனிபோம்” போட்டுக் கொண்டு ஸ்கூலுக்குப் போங்கோவன்.

சுபத் : ஐயோ! குஞ்சு! ஷங்கரி! ஏன் இப்படி அம்மா அப்பாவோடை போட்டியாக் கதைக்கிறீங்கள்?!

ஷங்க : இப்ப “எஸ்சே” வாசிக்க வேண்டாமோ?!

றஞ்சி : வாசியுங்கோ ராசா!

சுபத் : இப்படிச் செய்வமா குஞ்சு?

ஷங்க : எப்படி?

சுபத் : அப்பா ஒரு வசனம், நீங்கள் ஒரு வசனம், மாறி மாறி வாசிப்பம்!

ஷங்க : (திடீர் உற்சாகத்தோடு) ஆ!!... நைஸ் ஐடியா! இது ஒரு புது விளையாட்டாக இருக்கும்!! அப்பா! துவங்குங்கோ!

றஞ்சி : “எஸ்சே” யின்ரை தலையங்கம் “இலட்சியக் குடும்பம்”

ஷங்க : சரி “இலட்சியக் குடும்பம்” அதுதான் “ஹெடிங்”

றஞ்சி : என்ரை முதல் வசனம் இது தான் “நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்” என்று அறிஞர் கூறுவர்.

சுபத் : குட்! ஷங்கரி! உங்கடையை வாசியுங்கோ!

ஷங்க : “இலட்சியக் குடும்பமென்றால் அங்கு பிள்ளைகளுக்கு அன்பின் இனிய சோகம் இருக்காது. சுதந்திரச் சூழல் இருக்கும்.”

சுபத் : ஷங்கரி! உங்களுக்கு வீட்டிலை சுதந்திர மில்லையா?

றஞ்சி : எங்கட அன்பு உங்களுக்குத் துக்கத்தையா தருகுது!!

சுபத் : உங்களுக்காகத்தானே நாங்கள் எல்லாம் செய்யிறம்.

றஞ்சி : எங்கடை சொத்து, சுதந்திரம், சந்தோஷம் எல்லாம் நீங்கள் தானே

குஞ்சு.

சுபத் : (அழுது கொண்டு) நீங்கள் இல்லையெண்டால் எங்களுக்கு ஒண்டும் இல்லையே ஷங்கரி!

ஷங்க : சரி! சரி! அப்பா வின்ரை "எஸ்சே" யைத் தாங்கோ! வடிவாக் கொப்பி பண்ணிக் கொண்டு போய்க் காட்டிறன்.

றஞ்சி : அச்சாக் குஞ்சு! இந்தாங்கோ! பாத்து வடிவா உங்கடை கையெழுத்தில எழுதுங்கோ.

ஷங்கரி ஒரு புன்னகையோடு அதனை வாங்கி எழுத ஆரம்பிக்கும் போது, ஒரு சிரிப்போடு-

ஷங்க : சேய்க்கு வரும் நோய்க்கு, தாய் மருந்துண்பது போல்!

சுபத் : என்ன குஞ்சு சொல்லுறீங்கள்?

ஷங்க : கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும் நல்லுணவே தந்து காக்கும் தயாளன்..."

றஞ்சி : என்ன மகள்?! என்ன சொல்லுறீங்கள்?! நான் அப்படி ஒண்டும் எழுதித்தர இல்லையே.

ஷங்க : சும்மா பாடினனான் அப்பா!

சுபத் : இந்தமுறை 'ஓ எல்' எக்சாம் வருகுது. நீங்கள் இனி "மியூசிக்" படிக்கிறதை நிப்பாட்ட வேணும்!

ஷங்க : "ஓ எல்" லுக்கும் 'மியூசிக்' படிக்கிறதுக்கும் என்ன தொடர்பம்மா?

றஞ்சி : இனிக் கவனம் முழுக்க 'ஸ்டடிசிலை' தான் இருக்கவேணும்.

ஷங்க : இதுவரை இருந்த ஒரே ஒரு சந்தோசமும் அதோடை முடிஞ்சுது!

சுபத் : ஷங்கரி!! என்னம்மா சொல்லுறீங்கள்?!

ஷங்க : நான் அம்மா இல்லை! உங்கடை பெட்! பேபிடொள் அவ்வளவுந்தான்!

தாய் அவளை அணைத்து அழுதுபடி-

சுபத் : நீங்கள் உப்பிடிக் கதைச்சு எங்களை எவ்வளவு துன்பப்படுத்திறீங்கள்?! ஏன் குஞ்சு இப்பிடிச் செய்யிறீங்கள்?!

ஷங்க : நான் "எஸ்சே" கொப்பி பண்ண வேணும்!

றஞ்சி : நீங்கள் எழுதுங்கோ குஞ்சு!... சுபா நீங்கள் வாங்கோ.. நாங்கள் ஷங்கரிக்கு குளிக்க வாக்க ஆய்த்தம் செய்வம்.

ஷங்க : ஐயோ! அப்பா! பிளீஸ்!!

சுபத் : (திடுக்குற்று) என்ன மகள்!!?

ஷங்க : என்னை, என்ர பாட்டுக்கு என்ர விருப்பத்துக்கு தனிய குளிக்க விடுங்கோம்மா! அதையாவது என்னைச் செய்ய விடுங்கோப்பா!

றஞ்சி : அப்பிடிச் சொல்லாதையுங்கோ மகள்!

சுபத் : எவ்வளவு குளிக்கிறது, எப்பிடிக் குளிக்கிறது எண்டு உங்களுக்கு தெரியாது 'டார்லிங்'!

அவர்கள் இருவரும் உள்ளே செல்கின்றனர்-

ஷங்க : உங்கடை 'டார்லிங்' நாய்க்குட்டிக்கு குளிக்க வாத்து, ஈரம் துடைச்சு விடுங்கோ!

அவர்கள் நின்று திரும்பிப் பார்க்கின்றனர். தாய் ஏதோ சொல்ல முற்பட தந்தை அமைதியாக்கி அழைத்துச் செல்கிறார். அவர்கள் சென்ற பின்னர் பாடும் குழுவில் உள்ளவர்கள் மேடைக்கு வந்து வலது இடமாகவரிசையில் நிற்கின்றனர். ஒருவர் தோள்மீது மற்றவர் கைகளைப் போட்டபடி ஷங்கரி எழுந்து வந்து அவர்களுக்கு





இடையால் நுழைந்து வெளிவந்து நேரே பார்த்தபடி

ஷங்க : அம்மையே! அப்பா!
உங்கள்
அன்பினில் விளைந்த
ஆரமுதம் நான் என்பதை
மறுக்கவில்லை.
உங்கள்
ஒப்பிலா மணியும் நான்
என்பதை ஏற்கிறேன்.
உங்கள் இருவரதும்
அத்வைத சங்கமத்தின்
புனிதப் பேறுதான் நான்
இல்லையென்று சொல்லவில்லை.
நீவிர் இருவீரும்
நடுவே நானும்
இதுவரை நாள்
திருவேணி சங்கமமாய்க்
கிடந்தோம்.
ஆனால்...
இன்று அது...
சங்கடமாய்க் கிடக்கிறது.
இந்த நதி தீரத்தின்
நடுவே
ஒரு கற்பாறை,
மணல் திடல்
முளைத்து விட்டது.
பரந்து, பெருத்து வருகிறது,
இச்சிறுநதி
இனிக் கிளை பிரித்தோட
விளைகிறது
அது,
ஆயிரம் அருவிகள்,
குளம், குட்டை, ஏரிகள்
கால்வாய்கள்.
வேறு பெரு நதிகள்
யாவற்றோடும்
கலந்து,
பின் பிரிந்து,
பின் இணைந்து,
விரைந்தோடிப் பவனிவர
விளைகிறது.

ஷங்கரி வரிசையாய் நிற்பவர்களுக்கு இடையால், வந்தவாறு திரும்பிச் சென்று உள்ளே மறைந்து விடுகிறாள். பாடகர் குழுவில் நின்றவர்களில்

ஒருவர் : ஷங்கரி!
நீ மட்டும் தான்

வீட்டின் வாசற்படியல்ல!

அனைவரும் : வீட்டுக்கு வீடு
வாசற்படிகள் உண்டு

மற்றொரு : அவை
அளவில், வர்ணத்தில்
நீள அகலத்தில்
தன்மையில்
வேறுபடலாம்.

இன்னொ : ஆயினும்
அனைத்துமே
வாசற்படிகள்.

அனைவரு : வீட்டுக்கு வீடு
வாசற்படிகள்!

பிறிதொரு : அவற்றைக்
கூட்டியும் துடைத்தும்
தேய்த்துக் கழுவியும்
விடத்தான் வேண்டும்.

வேறொரு : ஆயினும்
முற்றத்து மணலும்
வீதிப் புழுதியும்
செருப்பின் சுவடும்
அவற்றில்
படியவுந்தான் வேண்டும்

வேலுமொ : கட்டில் தலையணைக்கு
உறைபோடலாம்
வீட்டின் படிக்கட்டுக்கு
உறைபோட்டுக் கட்டுவதில்லையே?

அனைவரு : ஆயினும்
வீட்டுக்கு வீடு வாசற்படி

-இதனை அடுத்து அவர்கள் உரிய கோலங்களில் பின்வரும் பாடல் விரிகளைப் பாடியவாறு கைகொட்டி ஆடுவர்-

வீட்டுக்கு! வீட்டுக்கு!
வாசற்படி வேணும்!
கூத்துக்கு! கூத்துக்கு!
தாளஜதி வேணும்!

- இவர்கள் இவ்வாறு முன்மேடையில் பாடியாடி நிற்கையில், மேடையில் காட்சி மாற்றங்கள் நிகழ்ந்தமை புலனாகிறது. இரண்டாவது குடும்பம் அது. மகன் ரஜீவ் படிப்பதை விடுத்து இவர்களது ஆட்டத்தை அவதானிக்கிறான். ஷீலாவும் அவ்வாறே தாயும் பின்புறத்தில் ஏதும் அலுவலில் ஈடுபட்டிருப்பாள். தந்தை பின்புறமிருந்து வந்து மேற்படி பாடல் ஆடல்களில் ஈடுபட்டிருப்பவர்களைக் கண்டு ஆத்திரம் கொண்டு, மகன் ரஜீவின் தலையில் ஓங்கி ஒரு குட்டு விடுகிறார். ஆடிப்பாடுவோரைப் பார்த்து-

ராஜ்கு : "ஷட்அப்!!" ஓடுங்கோ அங்காலை!! (அவர்கள் ஓடிவிடுவர்) கெட்ட சூழல்லை வாழுறம்! கெதியிலை இந்த வீட்டை வித்துப் போட்டு நல்லதொரு அயல் இருக்கிற இடத்திலை வீடு கட்ட வேணும்.





- அவர் சென்று முன் வலது மேடையில் ஆசனத்தில் அமர்ந்து கொள்கிறார். சிறிது நேரத்தில் -

ராஜ்கு : ரஜீவ்!

ரஜீவ் : ..... (அவன் படிப்பில் தன்னை மறந்துவிட்டானோ? தெரியவில்லை)

ராஜ்கு : (கோபமாக உரத்து) ரஜீவ்!!

ரஜீவ் : (திடுக்குற்று) அ!!... ஓமப்பா!!!

- ஷீலாவும் பயந்து நிமிர்ந்து பார்க்கிறாள், தாயும் பதட்டத்தோடு சற்று முன்னுக்கு வருகிறார்.

ராஜ்கு : என்ர 'பெட்ரூமிலை, ட்ரெசிங் டேபிள்ளை, சிகரெட் பக்கட்டும், பொக்ஸ் ஒவ் மச்சசும்' இருக்கு எடுத்துவா.

- ரஜீவ் எரிச்சலோடு தாயைப் பார்த்தபடி எழுந்து நிற்க, தாய் ஓடிச் சென்று, அவற்றை எடுத்துவந்து அவன் கையில் கொடுக்க, அவன் தந்தையிடம் கொண்டு சென்று கொடுக்க-

ராஜ்கு : ஒருக்காக் கூப்பிட்டால் காது கேட்காதோ?!... படிப்பு மேசையில் இருந்து கொண்டு கனாக் காண்கின்றீரோ?!

ரஜீவ் : கணக்குச் செய்து கொண்டு இருந்தனான்.

ராஜ்கு : கணக்குச் செய்தால், கூப்பிட்டதேன் கேக்க இல்லை?!

செல்வ : ரஜீவ், கணக்குத்தான் செய்து கொண்டிருந்தவன். அதாலை தான் படிப்பில கவனமாய் இருந்ததால தான், அவனுக்கு கேக்கேல்லை.

ராஜ்கு : ராணி! உம்மடை "சைக்கோலொஜி லெக்ஷரை" 'ட்ரெய்னிங் கொலிஜோட்' வச்சுக் கொள்ளும்.

செல்வ : இதில ஒரு 'சைக்கோலொஜி' யும் இல்லை.

ராஜ்கு : இது வீடு, பிள்ளையளின்ர நன்மைக்குத்தான் தகப்பன், எல்லாம் செய்யிறதும், சொல்லுறதும்!

செல்வ : ரஜீவ்! நீங்கள் போய் செய்த கணக்கை செய்து முடியுங்கோ

- ரஜீவ் செல்கிறான் -

ராஸ்கு : நீர், பிள்ளையளைத் திருத்த விடமாட்டீர்!

செல்வ : பூந்தோட்டக்காரன் பூமரங்களை வடிவா வளரவிடத்தான் முயற்சி செய்வான், அதுகளை மொட்டையா வெட்டமாட்டான்.

ராஜ்கு : ராணி! உம்மடை 'லெக்ஷரை ட்ரெய்னிங் கொளிஜலை' வச்சுக் கொள்ளும்... ஷீலா!

ஷீலா : ஓம்!

ராஜ்கு : இஞ்ச வாரும்!

- அவள் வந்து தாயின் அருகே நிற்கிறாள் -

ராஜ்கு : ஷீலா! நீர் நான் சொன்னபடி கவனமாய் படிச்சதாலை 'ஓஎல்' லிலை 'செவண் டீ வண் சீ' யோட பாஸ் பண்ணினீர். நான் சொன்னதை வடிவாக் கேட்டிருந்தா 'சயன்சும் டீ' வந்திருக்கும்.

செல்வ : இந்தமுறை 'சயன்ஸ்' கஸ்டம்!

ராஜ்கு : படிக்காத ஆக்களுக்கு இந்த முறை மட்டுமல்ல, எந்த முறையும் கஷ்டம் தான்... சரி, போனது போகட்டும். 'ஏ எல்லு'க்கு என்ன படிக்கப் போறீர, சொல்லும்...

ஷீலா : 'கொமேர்ஸ்' படிக்கத்தான் விருப்பமப்பா!

ராஜ்கு : என்னது?!!!!..... 'கொமேர்சா?!!!' நான் முந்திச் சொன்னது மறந்து போச்சுதோ?!

செல்வ : ஷீலா விரும்பியதைப் படிக்கட்டன்.

ராஜ்கு : விரும்பிறது, விரும்பாதது என்ன? 'சயன்ஸ்' கூட 'கொமர்ஸ்' குறைவு எண்டு நான் மற்றவையைப் போல சொல்லமாட்டன். படிக்கிற பிள்ளைக்கு எல்லாப் பாடமும் ஒண்டுதான்.

செல்வ : அப்ப ஷீலா விரும்பிறதைப் படிக்க விடலாம் தானே?

ராஜ்கு : எனக்குத் தெரியும், என்ர பிள்ளையள் என்ன, என்ன படிக்க வேணும்! எப்பிடி, எப்பிடிப் படிக்க வேணுமெண்டு!

செல்வ : எனக்கும் பிள்ளையள் தானே!

ராஜ்கு : நிச்சயமாக!.... ஆ, ஷீலா!

ஷீலா : ஓம்!

ராஜ்கு : உம்மட பெரியண்ணை 'எக்கவுண்டன்' டா இருக்கிறான்! அதால, இனி ஒரு 'கொமேர்ஸ்' என்ர வீட்டுக்கு தேவை இல்லை. அக்கா, 'மெடிசின் என்ர' பண்ணாமல விட்டதாலை 'சுவோளொஜி ஸ்பெஷல்' செய்யிறா. ரஜீவ் 'என்ஜினியறிங் என்ர' பண்ண 'மத்ஸ்' செய்யிறான். ஆன படியால் இந்த வீட்டுக்கு இப்ப ஒரு 'டொக்டர்' தான் தேவை.

செல்வ : போற போக்கைப் பார்த்தால் இந்த வீட்டுக்கு கெதியில தேவைப்பட போறது ஒரு 'சைக்கியாட்றிக் டொக்டர்' தான்

ராஜ்கு : ராணி! உம்மட 'சைக்கியாட்றியையும், சைக்கொலோஜி' யையும் 'ட்ரெயினிங் கொளிஜோ' ட வைச்சுக் கொள்ளும்...! ஷீலா

ஷீலா : ஓம்

ராஜ்கு : நான் சொல்றது விளங்கிச்சுதா?

ஷீலா : ஓம்

ராஜ்கு : என்ன விளங்கிச்சுது?

ஷீலா : நான் 'ஏ எல்' லிலை 'பயோ சயன்ஸ்' செய்ய வேணும்.

ராஜ்கு : 'பயோ சயன்ஸ்' செய்தால் மட்டும் போதாது, என்ன விளங்கிச்சுதா?

ஷீலா : ஓம்

ராஜ்கு : என்ன விளங்கிச்சுது?

ஷீலா : 'பயோ சயன்ஸ்' செய்தால் மட்டும் போதாது.

ராஜ்கு : அடச்சீ! அதா மறுமொழி!! 'மெடிசின் என்ர' பண்ண வேணும். ஒரு 'ஷொட்' ல 'மெடிக்கல் பகல்டி' கட்டாயம் 'என்ர' பண்ண வேணும் - விளங்கிச்சுதா?

ஷீலா : ஓம்

ராஜ்கு : என்ன விளங்கிச்சுது?!

ஷீலா : கட்டாயம் 'என்ர' பண் வேணும்.

ராஜ்கு : அடச்சீ!... பண்ணுறது பெரிய வேலையா? 'மெடிசின் என்ர' பண்ண வேணும். ஓம்! விளங்கிச்சுதா?

ஷீலா : என்ன விளங்கிச்சுது?

செல்வ : இதென்னப்பா இது?! எத்தினை தரம் 'விளங்கிச்சுதா' 'விளங்கிச்சுதா' எண்டு கேட்டுக் கொண்டு!

ராஜ்கு : ராணி! நீர் உம்மட அலுவலைப்பாரும்! என்ர அலுவல் எனக்குத் தெரியும்! விளங்கிச்சுதா? ஷீலா! விளங்கிச்சுதா!

ஷீலா : ஓம்





ராஜ்கு : என்ன விளங்கிச்சுது!

ஷீலா : என்ர அலுவல் எனக்குத் தெரியும்

ராஜ்கு : என்னது?!!! (ஆத்திரத்தோடு எழுந்து கை ஓங்கியபடி) என்ன சொன்னனீ?!!!

ஷீலா : அம்மா!!! (என்று குழறியபடி தாயைக் கட்டிக் கொள்கிறாள்)

செல்வ : என்னப்பா இது?! வளந்த பிள்ளைக்கு அடிக்கக் கை ஓங்கிக்கொண்டு - உங்களுக்கு வெக்கமாயில்லையே?!

ராஜ்கு : 'என்ர அலுவல் எனக்குத் தெரியும்' எண்டு எனக்குச் சொல்ற அளவுக்கு வளந்திட்டாவோ?!!! 'இடியட்'!

செல்வ : அப்பா! நீங்கள் 'என்ர அலுவல் எனக்குத் தெரியும் 'எண்டு எனக்குச் சொல்லிப்போட்டு 'விளங்கிச்சுதோ' எண்டால், ஷீலா ஓமெண்டா. 'என்ன விளங்கிச்சுது' எண்டு கேக்க, எனக்குச் சொன்னதைத்தான் கேக்கிறிங்களாக்கு மெண்டு போட்டு

ராஜ்கு : "என்ர அலுவல் எனக்குத் தெரியும்" எண்டா சொல்றது?!

செல்வ : நீங்கள் சொன்னதைத்தான் ஷீலா சொன்னவ!

ராஜ்கு : இந்தப் பிள்ளையளை நல்லபடியா வளக்க நீர் கடைசிவரை விடமாட்டீர!! ஷீலா... இங்காலை வாரும்.

செல்வ : அப்பா! என்னத்துக்கு?

ராஜ்கு : நான் அடிக்க இல்லை!... ஷீலா.... இங்காலை வாரும்!...

- அவள் தாயைவிட்டு விலகிச் சற்று முன்னேறி நிற்கிறாள் -

ராஜ்கு : என்ர பிள்ளையள், நான் நினைச்சபடி படிச்சு வர வேணும். ஒராள் இப்ப 'எக்கவுண்டன்', அதுசரி! மற்றாள் 'என்ஜினியர்' அடுத்தாள் 'டொக்டர்', ஒவ்வொரு பிள்ளையளும் ஒவ்வொண்டா இருந்து எங்கடை குடும்பத்தை வீட்டை அலங்காரம் செய்ய வேணும்.

செல்வ : வடிவான படங்கள். சுவருக்குச் சுவர் தொங்கிறது போல பிள்ளையள் மூலைக் மூலை இருந்து அலங்கரிக்க வேணும். வீட்டை! உங்களுக்கு கிடைக்கிற 'கப்பும்' 'ஷீல்டும்' 'மெடலுமா' த்தான் நீங்கள் பிள்ளையளைப் பாக்கிறிங்கள்!

ராஜ்கு : நீர் உம்மட அலுவலைப் பாரும்! ... ஷீலா!....

ஷீலா : ஓம்

ராஜ்கு : நீர் நிச்சயமா, 'டொக்டராத்தான் வாறீர்! ஒவ்வொரு பாடத்திலையும், ஒவ்வொரு 'ஷெக்ஷ'னுக்கு பேர்போன ஆக்களை வீட்டை கூப்பிட்டு 'டியூசன்' தருவன். படிக்க வேணும். 'நைண்டிபைவ் ஒகஸ்ட்' நாளைக்கு வந்திடும்.. சரி போய்ப் படியும்... ராணி! நான் ஜங்சனுக்குப் போய் பேப்பரையும் 'பிறெட்'டையும் வாங்கி வாறன்.

செல்வ : 'ஜாம்' போத்திலொண்டும் வேண்டி வாருங்கோ!

ராஜ்கு : 'ஜாமி'லை பிரயோசனமில்லை, வளர்ர பிள்ளையளுக்கு 'மாமைட்' தான் நல்லது.

- தந்தை காணாதவாறு ஷீலா ஓங்காளிப்பாள் -

செல்வ : (அதைப் பார்த்து சிரித்தபடி) மாமைட் இருக்கு வேண்டினது.

ராஜ்கு : ராணி ஏன் சிரிக்கிறீர?

செல்வ : இல்லை...

ராஜ்கு : ஷீலா! படியும் 'நைண்டிபைவ் ஒகஸ்ட்' நாளைக்கு வந்திடும்.

- அவர் வெளியேறுகிறார் -

ஷீலா : அம்மா! எங்கட அப்பா, தேவர்களுக்கு அப்பாற்பட்ட தேவர்.
செல்வ : ஏன்?
ஷீலா : எங்களுக்கு ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒருநாள் எண்டு சொல்றவை
செல்வ : அதுக்கென்ன?
ஷீலா : அப்பாவுக்கு ரெண்டு வருஷம் ஒருநாள்!
செல்வ : என்னண்டு?
ஷீலா : அவர் 'டபிள்' தேவர்! ஆனபடியால்தான் 'நைண்டிபைவ் ஓகஸ்ட்' நாளைக்கு வருகுதென்றார்!
செல்வ : நீங்கள் நல்லாப் படிக்கவேணும் எண்டுதான் அப்பா....
ரஜீவ் : அப்பாவைக் கடைசி வரையும் ஆராலையும் திருத்த ஏலா?
செல்வ : மகன்! அப்பிடிக் கதையாதையும், அப்பாவைத் திருத்தப் பிள்ளையள் வெளிக்கிடாதையுங்கோ!
ரஜீவ் : நாங்கள் வெளிக்கிட இல்லை, அவரைக் காணவே கால் நடுங்குது!
செல்வ : நீங்கள் நல்லா வரவேணுமெண்டுதானே ரஜீவ்...
ரஜீவ் : எனக்கு இன்னும் வயது அஞ்சில்லை! பதினெட்டு! நான் 'அப்ளைட் மத்ஸ்' செய்யிறன். 'நயின்டி, நயின்டி பைவ்வுக்கு குறையாமல் மாக்ஸ் எடுக்கிறன். ஆனால் என்ர சொந்த அலுவல் எதிலையும் எதையும் நான் விரும்பிறபடி 'அப்ளை' பண்ணிப் பாக்க வழியில்லாமல் இருக்கிறன். சர்வாதிகாரம் நாட்டிலை மட்டுமில்ல வீட்டிலையும் கூடாது.
ஷீலா : அம்மா! நான் 'கொமேர்ஸ்' செய்ய ஏலாதே?!!!
ரஜீவ் : ஏய்! வாயைப் பொத்திக் கொண்டு கொஞ்சநேரம் இரு! நான் அம்மாவோட கதைச்சுக் கொண்டு இருக்கிறது தெரியவில்லையே?
செல்வ : ரஜீவ்! ஷீலா பாவமல்லே! அவவுக்கும் வயது பதினைஞ்சு முடியப் போகுது.
ரஜீவ் : இந்த வீட்டில எல்லாம் முடியத்தான் போகுது!

- சொல்லிவிட்டு எழுந்து ஆத்திரத்தோடு உள்ளே செல்கிறான். தாய் மிகவும் அதிர்ச்சியோடும் வேதனையோடும் பார்க்கிறாள். பின்னர் ஷீலாவிடம் சென்று -

செல்வ : ஷீலாக்குஞ்சு! அண்ணாவும் பாவம், கோவிக்கிறார்... நான் அண்ணாவைப் பாத்திட்டு வாறன். என்ன ஷீலா?
ஷீலா : ஓமம்மா!

- தாய் உள்ளே செல்ல, ஷலா எழுந்து நிலைக் கண்ணாடியின் முன் சென்றுநின்று, தன்னைத்தானே முதன் முறையாகப் பார்ப்பது போன்று பார்த்து நிற்கிறாள். அவ்வேளை பாடும் குழுவைச் சேர்ந்தவர்கள் சென்று அவளையும் கண்ணாடியையும் சூழ நிற்கின்றனர். கை கோர்த்தபடி ஷீலா அவர்களுக்கு இடையால வெளியே வந்து, முன் மேடைக்கு வந்து, நேரே பார்த்தபடி நிற்கிறாள். பாடும் குழுவினரும். வந்து முன்மேடையில் வலது இடதாகக் கை கோர்த்து நிற்கிறார்கள் -

ஒருவர் : பாம்பின் கால்
பாம்பறியுமம்மா!
நொடியொன்று போல
வினாவொன்று கேட்பேன்!
அனைவரு : கேளுங்கள்! கேளுங்கள்!





கேளுங்கள் தரப்படும்!
மற்றொரு : அம்மை அப்பனே
கைலாயம்
என வளைய வந்தது ஒரு பிள்ளை!
இன்னொரு : உலகம் முற்றுமே
கைலாயம் எனக்
கண்டறிந்தது
ஒரு பிள்ளை
பிறிதொரு : ஷங்கரனுக்கு
இரு பிள்ளைகள்
இரண்டும் ஆண்
மூத்தவன் உலகென்று நம்பி
ஓமென்று சொல்லி
அம்மை அப்பனை
வலம் வந்தான்
வேறொரு : இளையவனோ
பந்தயத்தைச் சாக்காக வைத்து
அம்மை அப்பனை விட்டு
உலகம் பார்க்கப் புறப்பட்டான்
மேலுமொரு : அவனுக்கு
உலகம் பிடிபட்டு விட்டது
கோபம் போட்டாள்
வீட்டைவிட்டு
வெளியேறிவிட்டான்!
ஒருவர் : ஆண்டி மகன்
ஆண்டியாகிக்
குன்றேறிக் குந்திவிட்டான்
படைவீடு ஆறு கண்டான்!
மற்றொரு : குறத்தியைக் கட்டிக் கொண்டான்
அப்பனுக்கே அப்பனானான்
அப்பன் சுவாமியானான்!
இன்னொரு : கைலாயத்தின் கதையே
இதுவாயின்,
எங்கள் கதையைக்
கூறவும் வேண்டுமோ?
அனைவர் : கூறவே வேண்டும்!
கூறத்தான் வேண்டும்.
ஷீலா : அப்பா!
உங்கள் உதிரம் நான்:
உங்கள் உள்ளத்தையும்
அம்மா ஊடாக
எனக்குத் தந்துவிட்டீர்கள்
ஆயினும்... அது
உங்களுக்குத்
தெரியும் போல் தெரியவில்லை
உங்கள் உதிரத்தை மட்டுமே
அம்மாவிடம்
ஆண்டொன்றுக்கு வைப்புச் செய்து

வட்டியும் குட்டியும் முதலுமாக,
உங்கள் சொத்தாக
அசையும் சொத்தாக
என்னைப்
பெற்றுக் கொண்டதாகவே
நீங்கள்
எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்.
ஆனால்... அப்பா!
உங்களின் இந்த அசையும் சொத்து
தசையும் தோலும்
எலும்பும் நரம்பும்,
குடலும் குருதியும்,
உடலும் உள்ளமும் உள்ள
ஜீவன் நிறைந்ததொரு
சடப் பொருள்!
இதை மறந்து விடாதீர்கள்!
இதை நினைத்துப் பாருங்கள்'
நினைத்துப் பார்த்தால்
உங்கள்
பாசத் தொல்லைகள்
கரும்பாகும்
இல்லையேல்
கரும்பும் கசக்கும்!

ஷீலா உள்ளே செல்வாள்: அதற்கிடையில் ரஜீவ் வேகமாக வந்து முன்மேடையில் நின்று, நேரே நின்று ஆத்திரத்தோடு

ரஜீவ் : பிள்ளையின் கழுத்தில்
ஒரு தலைப் பட்சமான
சட்ட நுகத்தடிகளைப் பூட்டிச்
சவாரி செய்யும்
வண்டிச் சவாரிக்காரரே
அப்பனுக்கு அன்னையும்!
அவர்களுக்கு
மாடுகளில் அக்கறை இல்லை!
விருதுக்
கேடையத்தில் தான் கண்,
குதிரையல்ல
குதிரையின் சவாரி!
சவாரியின் வெற்றி!
வெற்றியின் விருது!
விருதே
அவர்கள் விருந்து!

- வந்தது போல் வேகமாகத் திரும்பியும் உள்ளே சென்ற விடுகிறான். பாடும் குழுவினர் 'வீட்டுக்கு வீடு வாசற்படி வேணும்' என்ற பாடலைப் பாடி ஆடியவாறு நிற்க, இராஜதுரையும் வந்து அவர்களோடு ஆடிப்பாடுகிறார். இதைக் கண்ட அவர் மனைவி -





சறோஜி : அதுதான் சரி!! உங்களுக்கு வெக்கமில்லையேப்பா?! பிள்ளையள் ஆடுதெண்டிட்டு, நீங்களும் ஆடிற வயதே?! போய் உங்கட அலுவலைப் பாருங்கோவன்!

- அவர் சென்று தனது ஆசனத்தில் அமர்கிறார். ஆடியபிள்ளைகள் அனைவரும் கலைந்து செல்கின்றனர், மேடையில் மூன்றாவது குடும்பம் தெரிகிறது. இது இராஜதுரை - சறோஜினி - ஆரணி - அம்பிகை குடும்பம், தந்தை எதையோ எழுதுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். தாய் அவதியாகச் சீருடை ஒன்றினைத் தையல் யந்திரத்தில் சீர் செய்து கொண்டிருக்கிறார். ஆரணி கூட்டித் துடைப்பதிலும், அம்பிகை கண்ணாடி முன் நின்று தன்னை மறந்த நிலையில் தலை வாருவதிலும் ஈடுபட்டுள்ளனர் -

சறோஜி : அம்பிகா!.... அம்பிகா!!!
அம்பி : ..... (அவள் இவ்வுலகில் இல்லை போலும்)
சறோஜி : ஆரணி!
ஆரணி : என்னம்மா?
சறோஜினி : அம்பிகை எங்கை?
ஆரணி : கண்ணாடிக்கு முன்னாலை!
சறோஜி : அட நான் தொண்டை கிழியக் கத்திறன்! அவ கண்ணாடி பாக்கிறாவோ?!
ஆரணி : அம்பிகா!! அம்மா கூப்பிட்டது கேக் இல்லையே?!
அம்பி : என்னம்மா?
சறோஜி : அரை மணித்தியாலமா உங்கை என்ன செய்யிறா?!
அம்பி : தலை இழுக்கிறன்!
சறோஜி : மணித்தியாலக் கணக்காயோ?!
அம்பி : அஞ்சு நிமிஷமாத்தான்
ஆரணி : அஞ்சு நிமிஷமோ? நான் கூட்டத் துவங்கேக்கை துவங்கினனி! நான் கூட்டி முடிஞ்சுது?
அம்பி : நீர் உம்மட அலுவலைப் பாத்துக் கொண்டு இரும்!!
ஆரணி : என்ர அலுவலைத் தான் பாக்கிறன்!
சறோஜி : வாய்க்கு வாய் காட்டத்தான் தெரியும்! ஒரு அலுவல் சுறுக்காகச் செய்யத் தெரியாது.
அம்பி : சுறுக்காகத் தான் செய்யிறன்! ஒருக்கா இழுத்துவிட மாட்டன் எண்டிட்டு ரெண்டு பேரும்! இப்ப கதைக்கினை! கனக்க...!
சறோஜி : வாயை மூடிக் கொண்டு செய்யிறதைச் செய்!!
ஆரணி : கூட்டிப் போட்டு வாறன் தலை இழுக்க எண்டுதானே சொன்னனான்.
அம்பி : நீர் கூட்டும் மட்டும் நான் காவலே?!
சறோஜி : வாயைப் பொத்திக் கொண்டிரு!..... வந்தனெண்டால்!!,.
அம்பி : ஏன் எனக்கு மட்டும் ஏசிறீங்கள்!! அவவுக்கும் ஏசுங்கோவன். அவவுக்கெண்டா ஒண்டும் சொல்ல மாட்டீங்கள்! என்னைத் தான் நெடுக ஏசுவீங்கள்!! (அழுதுகொண்டு) என்னைத் தான் ஒருத்தருக்கும் இங்க பிடிக்காது!!.. எப்பவும் ஏசிக் கொண்டு!
சறோஜி : ஓ! உன்னைத்தான் எங்களுக்குப் பிடிக்காது. எப்பவும் புறணி சொல்லற பழக்கம்!!
அம்பி நான் செய்யிற ஒண்டும் தானே உங்களுக்குப் பிடிக்காது!
ஆரணி : என்ன செய்தனி விடிய எழும்பி?!
அம்பி : நீர் உம்மட அலுவலைப் பாரும்! நான் உம்மோட கதைக்க இல்லை! வந்திடுவா எல்லாத்துக்கையும்!

சறோஜி : அம்பிகா!! பொத்து வாயை!!

அம்பி : (அழுகையோடும் ஆத்திரத்தோடும்) என்னை மட்டும் ஏன் பொத்தச் சொல்றீங்கள்!? அவவைப் பொத்தச் சொல்லுங்கோவன்!!

ஆரணி : நல்லா அழுதமுது வாய் காட்டி வெல்லப் பாக்கிறா?

அம்பி : நீ பொத்து வாயை!! அம்மா பாருங்கோ அக்காவை!!!

சறோஜி : நீ முதல்ல வாயை மூடு?

அம்பி : அவவை மூடச் செல்லுங்கோவன்?!! அம்மா!!!

சறோஜி : அக்கா உனக்குப் பத்து வயதுக்கு மூத்தவள்!!!

அம்பி : பத்து வயதுக்கு மூப்பெண்டாப் போல அவ என்னைப் பேசலாமோ?

சறோஜி : ஓம் பேசலாம்!!

அம்பி : அப்ப நான் திருப்பிப் பேசுவன்!!

சறோஜி : இண்டைக்கு அழுது கொண்டு போகப்போறா, பள்ளிக்கூடம்!!

அம்பி : எனக்குத் தான் அடியுங்கோ!! பேசுங்கோ!! உங்களுக்கு நான் பிள்ளை இல்லைத்தானே?!

சறோஜி : என்னப்பா?! உங்களுக்குக் காது அடைச்சுப் போட்டுதே? இவளின்ர அட்டகாசம் கேக்க இல்லையே?!

இராஜ : எல்லாரும் போடுற அட்டகாசம் போதாதெண்டு நானும் போடட்டே?!!

சறோஜி : அவளின்ர அலுவல்களை இனி நீங்கள் தான் பாருங்கோ! என்னால இனி ஏலா? மூத்த பிள்ளையள் சின்னல்லை இப்படியே நிண்டுதுகள்?! என்ன அமைதியா, அடக்க ஒடுக்கமா இருந்து, சொன்ன வேலைகளைச் செய்து கொண்டு, அன்பா ஆதரவா இருந்ததுகள்! இவள் மட்டும் ஏன் இப்படி வந்தாள்?

இராஜ : மூத்ததுகள் சின்னப்பிள்ளையளா இருந்த காலத்திலை ஊருலகம் வேறை விதமாக இருந்திது இப்ப..

சறோஜி : இப்ப உலகம் தலைகீழாப் போயிட்டுதாக்கும்!!

இராஜ : உலகம் ஒரு நாளும் தலைகீழாப் போறதில்லை, காலத்துக்கு காலம் மாறிக் கொண்டு போம். அதோட அப்ப எங்களுக்கும் பிள்ளையளுக்கும் இடையில இருந்த வயது வித்தியாசம் இருவத்தைஞ்சு, முப்பது. இப்ப நாப்பத்தைஞ்சு ஐம்பது. இதுகளை நாங்கள் விளங்கிக் கொண்டால் கரைச்சல் குறையும்.

சறோஜி : எல்லாத்தையும் விளங்கின நீங்கள், அவளின்ர அலுவலைப் பாருங்கோ! எனக்கு இந்தக் கரைச்சல் வேண்டாம்.

அம்பி : அக்கா!.. நேரம் போகுது! ஒருக்காப் பின்னி விடுங்கோவன்!

ஆரணி : இவ்வளவு நேரமும் வாயைப் பிளந்தா! இப்ப வாறா கெஞ்சிக் கொண்டு!

அம்பி : நான் ஒண்டும் கெஞ்ச இல்லை! நேரம் போகுதக்கா! கெதியா வாரும்!

சறோஜி : செய்த வேலையைப் பொத்தெண்டு போட்டிட்டு வர ஏலுமே?!

அம்பி : நீங்க் இருங்கோ! அக்கா வாங்கோ!!

ஆரணி : (வந்து தலை வாரத் தொடங்கி) உம்மட அலுவல் தான் எல்லாரும் பாக்க வேணும், இஞ்ச!

அம்பி : அக்கா மெல்லச் சீவுங்கோவன்!! ஆத்திரத்திலை இழுத்து மயிரெல்லாம் அறுகுது!!

ஆரணி : மெல்லத்தான் சீவிறன்!!

அம்பி : மெல்லவோ?? அம்மா!... ட்றிங்க் பொட்டிள்ளை தண்ணி நிரப்பி விடுங்கோ!

சறோஜி : நீ வந்து நிரப்பு! நேற்றைச் சாப்பாட்டு பெட்டி, இன்னும் கழுவேல்ல! நாறுது! வாய் மட்டும் வங்காளம் போகுது!





அம்பி : அம்மா! சாப்பாடு தீத்தி விடுங்கோ! நேரம் போகுது குழைச்சுச் சாப்பிட!

ஆரணி : ஓ! குட்டி பபாவுக்கு குழைச்சுக் குடுங்கோ! அப்பதான், இன்னும் வடிவா வாய் காட்டுவா!

அம்பி : ஆ! நீர உம்மட அலுவலைப் பாரும்!

ஆரணி : அப்பச்சரி! இந்தாசீப்பு!!

அம்பி : அம்மா!!! அக்காவைப் பாருங்கோ (தமக்கையின் கைகளைப் பிடித்து) அக்கா! அச்சாப் பிள்ளையல்லே! சீவி விடுங்கோ!!

ஆரணி : விடு... கையை...

அம்பி : சீவி விடுங்கோ!!

ஆரணி : இஞ்ச பாருங்கோம்மா?!

சறோஜி : நான் ஒண்டும் பாக்க வர இல்ல! ரெண்டும் ஒரு வயதுப் பிள்ளையள் போல நிக்குதுகள்!! பத்து வயது வித்தியாசம்!!

அம்பி : அக்கா! அச்சா அக்கா எல்லே! சீவி விடுங்கோ! என்ரை அக்கா'

ஆரணி : நீ ஒரு உலுத்தி! வெக்கமில்ல உனக்கு!!

அம்பி : உமக்குத்தான் வெக்கமில்லை!!... அம்மா சாப்பாட்டைக் குழையுங்கோ...!!

சறோஜி : புட்டும் சம்பலும்தான். குழைக்க ஏலா. போட்டு வச்சிருக்கு வந்து சாப்பிடு.

அம்பி : எனக்குப் பசிக்க இல்லை! சாப்பாடு வேண்டாம்!

சறோஜி : அப்பா! உங்களுக்கு ஒண்டும் கேக்குதில்லையே! நெடுகப் புத்தகத்துக்கை தலையைப் புதைச்சுப் போட்டுக் கிடவுங்கோ!

இராஜ : என்னப்பா? என்ன அலுவல்?!

சறோஜி : இஞ்ச அவள் சாப்பாடு வேண்டாமாம்!

இராஜ : அம்பிகை!!

அம்பி : ஓம்!

இராஜ : சாப்பிடாட்டி பள்ளிக்கூடம் போக வேண்டாம்!... தெரிஞ்சுதோ?..

அம்பி : (அழுகை, ஆத்திரம் அடங்கிய குரலில்) ஓம்! எனக்கு ஒண்டும் செய்து தர மாட்டினம்!... நான் என்ன கேட்டாலும் செய்யாயினை! இனி ஒண்டும் கேக்கிறது இல்லை.. உங்களுக்கு என்னில விருப்பமில்லை!...

இராஜ : என்ன புறுபுறுப்புங்கை???!

சறோஜி : அழுகையும் சண்டையும், புறுபுறுப்புந்தானே எப்பவும்! இவதான் ஒரு புதுவிதமான பிள்ளையா எங்களுக்கு வந்திருக்கிறா! இந்தப் பிள்ளை ஏன் இப்படி வந்துதோ!!

- எழுந்து உள்ளே செல்கிறார். அழுது கொண்டு செல்வது போல உள்ளது.

ஆரணி : உனக்கு அம்மாவோட என்ன கதைக்கிறது எண்டு தெரியாதே? ஆக வரவர குழந்தையாட்டம்.

அம்பி : நீர் தான் குழந்தையாட்டம்! நானில்லை - உங்கள் ஒருத்தருக்கும் என்னில விருப்பமில்லை!

ஆரணி : ஓ! விருப்பமில்லை! -

- ஆரணியும் ஆத்திரத்தோடு எழுந்து உள்ளே சென்றுவிடுகிறாள். -

அம்பி : ஆ... பாத்தீங்களே உங்களுக்கு என்னிலை விருப்பமில்லை!!

- தந்தை அம்பிகையிடம் வந்து -

இராஜ : அம்பிகை! நேரம் போகுது கெதியாச் சாப்பிட்டிட்டு ஸ்கூலுக்கு

போங்கோ.

- அவரும் உள்ளே போய் விடுகிறார். அம்பிகை பின் மேடைக்குச் சென்று புட்டுக் கோப்பையை எடுத்துக் கொண்டு அதையே பார்த்தவாறு நிற்க, பாடும் குழுவினர், விரைந்தோடி அவளைச் சூழ்ந்து கொள்கின்றனர். அம்பிகை அவர்களை விலக்கிக் கொண்டு முன் மேடைக்கு வந்து நிமிர்ந்து நிற்கிறாள். பாடும் குழுவினரும் முன் மேடையில் பரவி நிற்கின்றனர்.

அம்பி : அம்மா!
நீங்களே என் தாய்!
தாயினும் நல்ல தாய்!
என்
எல்லாமும் நீங்களே!
தாயே!
தந்தையின் ஒழுக்கத்து
அணுவின் அணுவைத்
தங்களுள் ஏந்தி,
பத்துத் திங்கள்,
ஊனாய், உள்ளமாய்,
உயிராய், உணர்வாய்,
குணங்குறி அனைத்துமாய்
என்னைச் சமைத்து,
சுமந்து
உலகுக்கு அளித்தீர்!
அம்மா!
பிறக்கும் போதே
எனக்குச் சிறகிருந்தது
அடிக்கத் தெரியவில்லை!
உங்கள் மடியில் கிடந்தேன்!
இன்று
எனக்குச் சிறகடிக்க முடிகிறது.
உங்கள்
மடியின் இதமும் இனிக்கிறது!
கூட்டை விட்டுப்
பறந்து பார்க்கத் தோன்றுகிறது!
பக்கத்துக் கிளையில்
பறந்து போய்க் குந்த
விளைகிறது மனம்
அடுத்த மரத்துக்கும்
தாவத் துணிகிறேன்.
தோப்பெங்கும் பறக்கவும்
ஆசை!
கூட்டின் இதமும் இனிக்கிறது!
கூட்டுக்கு
நிச்சயம் வந்துதான் போவேன்,
பறந்து தான் வருவேன்.
பறந்தே போவேன்.
பறப்பு





என் பிறவிப்பயன்!
அம்மா!
உங்கள் குட்டிப் புறா!
குஞ்சுப் புறா!
இன்று
சிறகடிக்கத் தெரிந்த
சின்னஞ் சிறியதொரு பெரியபுறா!
குப்பை கூட்டிக் குந்த வைத்துக்
குளியல் நடந்தும்
ஆண்டொன்றாகிறதே!
நீங்கள்,
வந்த பாதைதானே
எனது பாதையும்!
வயது போனால்
இதையுமா மறப்பது?!

- அம்பிகை திரும்பி உள்ளே சென்று மறைய பாடும் குழுவினர் வீட்டுக்கு வீடு வாசற்படி வேணும். எனும் பாடலோடு சென்று தமது இடங்களை அடைகின்றனர். மேடை ஒரு புதுப் பொலிவு பெற்றுள்ளது. முதலாவது குடும்பத்தினர் வீட்டில் ஏதோ ஒரு விசேஷமான தினம் இன்று எனத் தெரிகிறது. மேடையின் பிற்பகுதியில் ஒரு மேடையும் இருக்கிறது. அதில் இரண்டு கதிரைகள் முன் மேடையில் நிறைகுடம். ஷங்கரிதான் கையில் சந்தனக் கும்பாவோடு மேடைக்கு வருகிறாள்.-

ஷங்க : அப்பா! அம்மா! நாலுமணிக்கு ஒரு நிமிஷம் இருக்கு! வாங்கோ! ஆக்களெல்லாம் வரத்துவங்கப் போகினம்!

- அன்னையும் அப்பனும் புது மாப்பிள்ளை பொம்பிள்ளை போல ஆடை அணிபுனைந்து வருகின்றனர்-

சுபத் : என்ன ஷங்கரி! உங்களுக்காக இதெல்லாம் செய்யிறம்! எவ்வளவு வெக்கமாயிருக்கு!

ஷங்க : உங்கட கலியாண வீட்டண்டைக்கு நீங்கள் எவ்வளவு வெட்கப்பட்டிருப்பீங்கள் எண்டு எனக்குப் பாக்கக் கிடைக்க இல்லையே இப்பதானே பாக்கிறன்.

ரஞ்சி : ஒவ்வொரு வருஷமும் போல சிம்பிளா செய்திருக்கலாம்! ஷங்கரி! நீங்கள் விடமாட்ட எண்டிட்டீங்கள்!.

ஷங்க : அப்பா! பேசாமல் இருங்கோ!... அங்கை ஆக்கள் வருகினம்!

- ஷங்கரி சென்று சந்தனத்தை வழங்க, ராஜ்குமார், செல்வராணி, ரஜீவ், ஷீலா, தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டு வர -

ராஜ்கு : கொங்கிறாஜூலேஷன்ஸ் மெனி ஹப்பி றிட்டேர்ண்ஸ் ஒவ் த டே!! (கை குலுக்கி தழுவி)

ரஞ்சி : தாங்கியூ! தங்கியூ! (நாணத்தால் குறுகி)

செல்வ : வாழ்த்துக்கள்! இந்த மகிழ்வான நாள் பல்லாண்டு பல்லாண்டு வரட்டும்!!

சுபத் : தங்க்யூ றாணி! ஷங்கரிதான் இந்தக் கூத்தெல்லாம் காட்டிக்கொண்டு!.... எங்களுக்கு இது, விருப்பமேயில்லை!!

செல்வ : ஷங்கரி கெட்டிக்காரி!

ஷங்க : நான் இன்னமும் குழந்தை இல்லை! அப்பா, அம்மாவின்ரை கலியாண வீட்டையே என்னால நடத்த முடியும் எண்டு அவைக்குக் காட்டத்தான் ஆண்டி இது!

செல்வ : அப்படியா! நல்லது! நல்லது!

- இராஜதுரை, சறோஜினி, ஆரணி, அம்பிகை வருகின்றனர் -

சறோஜி : சுபத்திரா! உங்கடை இருவதாவது கலியாணத்துக்கு எங்கட வாழ்த்துக்கள்!

சுபத் : ஐயோ! நான் வெக்கத்திலேயே செத்துப் போவன் போல இருக்கு.

(பாடும் குழுவினரும் வசதியாயின் வரலாம்)

ஷங்க : வரவேண்டிய ஆக்கள் எல்லாரும் வந்தாச்சு! அம்மா! அப்பா! போய் உங்கடை இடங்களில் இருங்கோ!.. சரி! எனது தாய் தந்தையரின் இருபதாவது விவாக தினத்துக்கு எனது அழைப்பை ஏற்று வருகை தந்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றி உரியது. திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் என்பார்கள். திருமணம் நிச்சயிக்கப்படும் இடமெல்லாம் சொர்க்கமென்றால், எனது பெற்றோரின் சொர்க்கம் சுப்ரமணியம் பூங்கா. அதுதான் அவர்கள் கைப்பிடிக்க முடிவெடுத்த இடம்.

சுபத் : ச்சீ!! ஷங்கரி!! உங்களுக்கு ஆர் இதெல்லாம் சொன்னது?

ஷங்க : உங்கள் இருவரதும் நண்பர்களின் பிள்ளைகளும், உங்கள் உறவினர்களும்.

ராஜ்கு : கெட்ட சனங்கள்!!

ஷங்க : அங்கிள் உங்கடை வாலிபக்காலம் பற்றி உங்கடை பிள்ளையளுக்கு ஓரளவு தெரியும்! இல்லையா ஷீலா?

ஷீலா : ஓம் தெரியும்

ராஜ்கு : ஆர் சொன்னது?

ஷீலா : ஷங்கரி

ஷங்க : அப்பா அம்மா எத்தினையோதரம் கதைக்கேக்கை நான் கேட்டிருக்கிறன்.

சுபத் : பாத்திங்களே அப்பா! நீங்கள் தான் சொல்லச் சொல்ல பிலத்துக் கதைக்கிறது.

இராஜ : சரி சரி இண்டைக்கு திருமண நாள்! சந்தோசமா இருக்க வேணும்.

செல்வ : ஷங்கரி!

ஷங்க : ஓம் ஆண்டி!

செல்வ : உங்களுக்குத் தமிழ்ப் பேச்சு நல்லா வருகுது. தமிழ் எஸ்சேக்கு நல்ல மாக்ஸ் எடுப்பீங்களே?

ஷங்க : இல்லை ஆண்டி!

செல்வ : ஏன்?!

ஷங்க : ஸ்கூல் ஹோம்வேக் எல்லாம் அப்பா தான் செய்யிறவர்.

செல்வ : நீங்கள் செய்ய வேணும் ஷங்கரி.

ஷங்க : ஓமோம்.. தயவு செய்து எல்லோரும் ஒருக்காக் கவனியுங்கோ இம், நன்றி நாங்கள் சின்னாக்கள் எல்லாரும் சேர்ந்து உங்களுக்கு, பெரியாக்களுக்கு ஒரு நாடகம் நடிச்சுக்காட்ட விரும்பிறம் அதுக்கு நீங்கள் அனுமதி தர வேணும்.

இராஜ : அனுமதி என்ன அனுமதி! கட்டாயம் நடியுங்கோ!

செல்வ : நாடகத்துக்கு பேர் என்ன?





ஷங்க : கனவு!

செல்வ : நல்லது, உங்களுக்கு வயது பதினைஞ்சு பதினாறு!

இராஜ : இனிய பதினாறின் கனவு!

ராஜ்கு : (தனக்குள்) கண்டிறியாத கனவும், நாடகமும்!

ஷங்க : அப்பாவும் அம்மாவும் இங்கை வந்திருங்கோ!

- நாடகத்திற்கு ஏற்றவாறு மேடையில் சில ஒழுங்குகள் செய்யப்படுகின்றன - ரஜீவ் அப்பாவாக ஷங்கரி மகளாக, அம்பிகை தாயாக, ஷீலா மகனாக நடிக்க ஆரம்பிக்கின்றனர்-

மகன் : அப்பா!

தந்தை : என்ன மகன்?

மகன் : நான் இண்டைக்கு ஸ்கூலாலை வர லேட்டாகும்.

தந்தை : ஏன் மகன்?

மகன் : கிறிகெட் பிரக்டிஸ் இருக்கு

தந்தை : சரி, இரவுபட முந்தி வாரும்.

மகன் : ஆறரைக்குத் தான் வருவன்

தந்தை : என்ன, உங்கடை டீம், இந்தமுறையாவது பிக் மச்சி லை வெல்லுமோ?

மகன் : என்னப்பா நீங்கள்? இவ்வளவு வயது வந்தும் எங்கடை அப்பா மாதிரி...

தந்தை : என்ன? என்ன? என்னைவிட உமக்கு வேற ஒரு அப்பாவும் இருக்கோ!

மகன் : இப்ப நீங்கள் தான்!

தந்தை : அதுதானே கேட்டன்! அதென்ன வயது வந்ததும் உங்கடை அப்பா மாதிரி எண்டனீர்?

மகன் : எல்லாத்திலும், தான் நினைக்கிற மாதிரி மகனுக்கு வெற்றிவர வேணும் எண்டு பிடிவாதம் பிடிக்கிறது.

ராஜ்கு : ஷீலா! ஸ்டொப் தட் டோட்டி கேம்!! (Game)

செல்வ : அப்பா! அம்மா இருங்கோ! ஆக்களுக்கு முன்னாலை...

ராஜ்கு : வீட்டுக்கு வரட்டும்!!

மகன் : அதைப் போல தான் நீங்களும்!

தந்தை : ஏன் மகன்? உங்கடை டீம் வெண்டால் எனக்குச் சந்தோசம் தானே!

மகன் : கேம் எண்டா ரெண்டு டீம் அதிலை ஒண்டுதானே வெல்லும்!! இல்லையெண்டால் ட்றோ ஆகும்.

தந்தை : சரி சரி ஐ ஆம் சொறி

மகன் : பரவாயில்லை அப்பா நான் விளையாடிற டீம் வெண்டால் உங்களுக்கும் புழுகம் தானே!

தந்தை : வெண்டால் நூறு ரூபா ஐஸ்கிறீமுக்கு

மகள் : அப்பா! நான் ஏ எல்லுக்கு என்ன பாடம் படிக்க?

தாய் : ஏன், அப்பாவே படிக்கப் போறார்?

தந்தை : ஓம்! மகள்! படிக்கிறது நீர். பாடங்களைத் தீர்மானிக்கிறதும் நீர்!

ராஜ்கு : நொன்சென்ஸ்!!

செல்வ : அப்பா!!..

தாய் : தேவையான நேரம் புத்தி சொல்றதுக்கும் கைட் பண்றதுக்கும் தான் நாங்கள்.

தந்தை : உங்களுக்கு இப்ப பதினாறு வயதாகிறது.

சுபத் : பாவம் ஷங்கரி! சின்னப்பிள்ளை!

ரஞ்சி : ஓமப்பா! அவ பாடங்களை டிசைட் பண்ணுவாவா?!

தந்தை : ஏ எல்லுக்கு வந்தாப் பிறகாவது பிள்ளையள் நீங்கள் விரும்பிற

பாடங்களைப் படிக்கத் துவங்க வேணும்.

தாய் : இப்ப கன பிள்ளைகளுக்கு யூனிவசிட்டியிலையும் அப்பா, அம்மா தானே பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டி இருக்கு!

மகன் : உமக்கு என்ன செய்ய விருப்பம்.

மகள் : எனக்கு மத்ஸ் செய்யத்தான் விருப்பம்.

தந்தை : செய்யும் நல்லா

மகள் : மியூசிக்கையும் விடாமல் படிக்க விருப்பம். அது என்ர படிப்பைக் குழப்பாது தானே அப்பா!

தந்தை : குழப்புறதல்ல உதவி செய்யும்

மகள் : எப்பிடி அப்பா

தந்தை : இந்த வயதுதான் எதையும் படைக்கிற திறன் இருக்கிற வயது. அதோடை ஏஎல் பாடங்களைப் படிச்சு போர் அடிக்கிற நேரங்கள்ளை, ஒரு சந்தோஷத்துக்காக பாடலாம்.

தாய் : வீணை வாசிக்கலாம்.

மகள் : விளையாடலாம்

தந்தை : ஓம், படிப்பிலை, கவனமிருந்தால் போதும், அதை விட்டிட்டு மாட்டை நுகத்திலை கட்டிப்போட்டு ஹெய் எண்டு துவரந்தடியாலை அடிக்கிற வண்டில் காறன் போல இருக்கக் கூடாது!! பெரியவை.

ராஜ்கு : ரஜீவ்!! ஷீலா!! இனி நாடகம் நடிச்சது போதும்!! போகலாம் வீட்டுக்கு!! இம்!!

- அவர்கள் போகவில்லை தாயைப் பார்க்கிறார்கள் சங்கடத்தை உணர்ந்த தாய் -

செல்வ : அப்பா! ஆக்களுக்கு முன்னாலை.. வயது வந்த பிள்ளையள் கவனம்!..

ஷங்க : சரி, அங்கிளிக்குப் பிடிக்க இல்லை எண்டால் எங்கட நாடகத்தை இதோட முடிப்பம்.

சுபத் : ஓம்! ஷங்கரி இனிப் போதும்!

சறோஜி : அம்பிகை! நேரம் போகுது, இனி நடிச்சது போதும்.

இராஜ : நல்ல நாடகம்! ஷங்கரி! குட்!!

ஷங்க : தயவு செய்து ஒருத்தரும் போகாதையுங்கோ! நிண்டு சாப்பிட்டிட்டு போங்கோ!

செல்வ : நிண்டு சாப்பிடிறதோ?

ஷங்க : இல்லை ஆண்டி இருந்து சாப்பிட்டிட்டுப் போங்கோ!

ராஜ்கு : கண்டறியாத சாப்பாடும் நாடகமும்! அடங்காத பிள்ளையள்

ஷங்க : ஆண்டி அங்கிள் என்னவாம்?

செல்வ : எல்லாருமா நிண்டு சாப்பிட்டிட்டுப் போவம் எண்டு சொல்லிறார்.. அப்பா! தயது செய்து.. எனக்காக இண்டைக்கு மட்டும் பிளீஸ் பொறுமையா இருங்கோ.. வளந்த பிள்ளையள்!...

ராஜ்கு : சரி! சரி!

ஷங்க : ஆ! சரி, சரி!

பிள்ளை : ஷங்கரி! சரி! சரி!

பாடும் குழு : ஷங்கரி! சரி! சரி!

அனைவரும் : ஷங்கரி! சரி! சரி!

- இது பல தடவை தொடரும். வேண்டுமானால் சபை வணக்கம் செய்யலாம். இல்லையேல் திரை மூடிக் கொள்ளும். -

Ø





**சிறுகதை**

# உடைந்த ஏணி

- மு.நந்தகுமார் -

சிவகுமார் கையிலுள்ள சஞ்சிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான். ஆனாலும் அவனுடைய மனம் சஞ்சிகையில் இல்லை. அது பல்வேறு சிந்தனைகளில் மூழ்கிக்கிடந்தது. அவனுடைய தாயார் இரவுச்சாப்பாட்டுக்காக அவனை அழைத்தார். அப்போதும் அவன் எதனையோ சிந்தித்தவாறு சஞ்சிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான். மீண்டும் அவனுடைய தாயார் அழைக்கவே சாப்பிடுவதற்காக எழுந்து சென்றான்.

மேசையில் கோதுமை மா பிட்டும் கத்தரிக்காய்ப் பொரித்த குழம்பும் மத்தியானச் சாப்பாட்டுக்காக வைத்திருந்த புடோலங்காய் வறையும் இருந்தன. அவனுடைய தாயாரே அவனுக்கான உணவைக் கோப்பையில் போட்டார். சிவகுமார் உண்ண ஆரம்பித்தான். ஆனால் கழுத்துக்குக் கீழே உணவு செல்ல மறுத்தது. உணவைப் பிசைந்தபடியே இருந்தான்.

"என்ன தம்பி சாப்பிடன். உனக்குப் பிடிக்கு மெண்டுதான் கோதுமை மா பிட்டும் கத்தரிக்காய் குழம்பும் வச்சனான்" இவ்வாறு அவனுடைய தாயார் கூறினார். "உம் சாப்பிடுறன்" என்று பதிலுக்குச் சிவகுமார் கூறினான்.

அவனுடன் சாப்பிட உட்காந்த அவனுடைய தாயாரும் சாப்பிட ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் அவரும் சாப்பிட்டு முடித்துவிட்டார். ஆனால் சிவகுமார் ஒப்புக்காக ஓரிரு வாய்கள் சாப்பிட்டுவிட்டு தட்டிலுள்ள உணவைப் பிசைந்தபடி மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான்.

இண்டைக்கென்னவோ உனக்குச்சாப்பாடு இறங்கேல்லை. என்னவோ யோசிச்சுக்கொண்டு இருக்கிறாய். பள்ளிக்கூடத்திலை ஏதும் பிரச்சினையே.

இவ்வாறு அம்மா கேட்க "சீ, ஒண்டுமில்லை" என்று அவன் மழுப்பினான்.

"அப்ப ஏன் சாப்பாடு இறங்குதில்லை"

"பின்னேரம் சபேசன் வீட்டுக்குப்போனனான். அங்கை அவை வடை சுட்டவை அதைச் சாப்பிட்டதாலை தான் பசியில்லை" என்று ஒரு பொய்யைக்கூறி தனது தாயாரிடமிருந்து சிவகுமார் தப்பிக்கொண்டான். அட வீணாக அம்மாவுக்குப் பொய் சொல்கிறோமே என்று மனம் ஒரு கணம் எண்ணியது. இருந்தாலும் 'வாய்மை எனப்படுவதி யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்' என்று வள்ளுவரே சொல்லியிருக்கிறார்தானே என்று மறுகணம் எண்ணிச் சமாதானமடைந்தான்.

"சரி அப்பு பசியில்லையெண்டா போய் வீமாக்குப் போட்டிட்டு கையைக் கழுவு"

அவனும் எழுந்து பின்பக்கக் கதவால் வீமாவிடம் செல்கிறான். வீமா அவனைக்கண்டதும் எழுந்து வாலை ஆட்டுகிறது. இவன் கோப்பையில் உள்ள பிட்டைக்

கறிகளுடன் குழைத்து வீமாவின் தட்டில் போடுகிறான். வீமா வாலை ஆட்டிக்கொண்டு உண்ணுகிறது. அவன்தான் அந்த நாய்க்கு வீமா என்று பெயர் வைத்தான்.

சிறிய வயதில் அவன் படித்த சோமசுந்தரப் புலவரின் வீமா வீமா ஓடிவா? என்ற பாடலின் பாதிப்பினாலேயே அதற்கு வீமா எனப் பெயரிட்டான். வழமையாக வீமாவின் செய்கைகளை இரசிக்கும் அவன் அன்று அதை இரசிக்காது வீட்டுக்குள் வந்தான். உடலும் உள்ளமும் அவனுக்குச் சோர்ந்திருந்தது. இதனால் அவன் போய்க் கட்டிலில் சாய்ந்தான்.

அவனுக்குத் தூக்கம் வரவில்லை அன்று நடந்த சம்பவங்கள் அடுக்கடுக்காக அவன் முன் தோன்றின. அன்று காலை அவன் வகுப்பொன்றில் பாடம் படிப்பிடித்துக் கொண்டிருக்கும் போது அதிபரின் அலுவலகப் பணியாள் வந்து, அதிபர் உடனடியாகத் தனது அலுவலகத்துக்கு அவனை வரும்படி கூறியதாக அவனுக்குத் தகவல் சொல்லிவிட்டுச் சென்றான். அதிபர் உடனடியாக வரச் சென்னபடியால் சிவகுமார் பாடத்தை இடைநிறுத்திவிட்டு அதிபரின் அலுவலகத்துக்குச் சென்றான். அதிபரின் அலுவலகம் பாடசாலை வாசலுக்கு அண்மையில் இருந்தது. அதிபர் எதற்காக இப்படித் திடீரென அழைக்கிறார் என்று எண்ணியவாறு அதிபரைச் சந்திக்க விரைந்து சென்றான்.

அதிபர் அலுவலகத்தில் அதிபருக்கு முன்னால் இரண்டுபேர் அமர்ந்திருந்தார்கள். நடுத்தர வயதுடைய அவர்களின் கைகளிலே கோப்புகளும் இருந்தன. அவர்கள் ஏதோ ஓர் அலுவலகத்திலிருந்து வந்தவர்கள் போல் தோன்றினார்கள். அவன் உள்ளே வந்ததும் அதிபர் சொன்னார். “வாங்கோ சிவகுமார் இவை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலையிருந்து வந்திருக்கினம் அவைக்கு உங்களைப்பற்றியொரு கொம்பிளைன் போயிருக்கு” கொம்பிளைன் என்றதுமே சிவகுமாருக்குத் திக்கென்றது. இருந்தாலும் அவனைப்பொறுத்தவரை இதை அவன் எதிர்பார்த்திருந்தான். இரண்டு நாட்களுக்கு முன் நடந்த சம்பவமே அவனை விசாரிப்பதற்கு வழிகோரியது.

அன்றைய தினம் க.பொ.த (உ-த) வகுப்புக்கு கற்பித்துக் கொண்டிருந்தான் முதல் நாள் வகுப்பில் படிப்பித்த விடயமொன்றைப் பற்றி முன்வரிசையிலிருந்து மதுமதி என்ற மாணவியிடம் கேட்டான். அதற்கு அவள் அளித்த பதில் அவனுக்குத் திருப்தியளிக்கவில்லை. மதுமதி அளித்த பதில் தவறாக இருந்ததுடன் அதனை அவள் அலட்சிய பாவத்துடன் கூறியதாகவும் சிவகுமாருக்குத் தோன்றியது. மதுமதி படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. க.பொ.த (சா-த) பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்றவள். க.பொ.த (உ-த) இல் விஞ்ஞானப் பிரிவில் படித்துக் கொண்டிருக்கிறாள். அவள் தான் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்ற எண்ணத்திலேயே விஞ்ஞானப் பிரிவில் சேர்ந்தாள்.

அவள் ஒரு நாள், வகுப்பில் சிவகுமார் அப்பியாசப் புத்தகங்களைத் திருத்திக் கொண்டிருக்கும் போது தனது நண்பியான அபிராமியிடம் கூறினாள், “என்ரை ஒரே இலட்சியம் டொக்டர் ஆகிறது. தான் என்னாலை சோக்கட்டி பிடிச்செல்லாம் படிப்பிக்க ஏலாது. ரெதஸ்கோப்பைத்தான் பிடிக்கேலும்”

அவள் இப்படிக்கூறியது சிவகுமார் காதிலும் விழுந்தது. அன்று மாலை அவன் வீட்டுக்குச் சென்றபின்னும் மதுமதியின் வார்த்தைகள் அவன் காதுக்குள் ஒலித்தன.





நானும் ஒரு காலத்திலை டொக்டராய் வரவேணுமெண்டு நினைச்சன் ஆனால் ஒரு கொஞ்ச மாக்சிலை தட்டுப்பட்டுப்போனன். என்னோடை படிச்ச நிரஞ்சன், சரவணன் எல்லாம் டொக்டராகி இண்டைக்குப் பெரிய கொன்சல்டன்ற்றாக இருக்கிறாங்கள். அவங்கடை பதவியென்ன, காரென்ன இப்பவும் சரவணன் பெமிட்டுக்கு ‘மிற்சுபிஷி மொண்டரோ’ எண்டு பெரிய கார் வேண்டியிருக்கிறான். நான் உந்த பழைய மோட்டார் சைக்கிளைத்தான் ஓட்ட வேண்டிக்கிடக்கு. சின்னவயதிலை நான் நிரஞ்சன், சரவணனை விட எவ்வளவு கெட்டிக்காரன். ஆனா ஏ.எல்லிலை அவங்கள் அடிச்சிட்டாங்கள். என்ரை தலைவிதி இப்பிடியாப் போச்சுது. அதாலை இண்டைக்கும் சோக்கட்டியைப் பிடிக்க வேண்டிக்கிடக்கு. சரி சோக்கட்டியைத்தான் பிடிச்சாலும் இந்தப் பிள்ளையள்தான் நன்றி சொல்லுங்களே எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிப்பிக்கிறம். தன்னாலை ரெதஸ்கோப்தான் பிடிக்கலாம் சோக்கட்டி பிடிக்கேலாது எண்டு எவ்வளவு ஆணவமாய் பேசுறாள். அவளுக்கு அவ்வளவு கொழுப்புத்தானே. நாங்கள் ஏணியாய் நிண்டு இவையளை ஏத்திவிடவேணும் இவை ஏறிப்போட்டு எட்டி உதைவினம் ஏணிக்கு உயர்ச்சியில்லை சீ என்ன தொழிலிது.

இவ்வாறு அவனுடைய உள்ளம் ஊமையாய் அழுதது. மதுமதியின் வார்த்தைகள் காரணமாக அவளின் மீதும் வெறுப்பும் கோபமும் ஏற்பட்டன. இதனால் அவனுடைய கேள்விக்கு அவள் சொன்ன பதில் தவறானது என்பதைவிட அலட்சியமானதாக இருந்ததாக அவனுக்குத் தோன்றியது. இது அவள்மேல் அவனுக்கு இருந்த கோபத்தை பன்மடங்காக அதிகரிக்கச் செய்தது. உடனே அவளை எழுந்து நிற்கச் சொன்னான். அவளும் பயத்துடன் எழுந்துநின்றாள். அவன் கையிலிருந்த பிரம்பினால் அவளுடைய முதுகிலும் மார்பிலும் ஆறேழு தடவைகள் மூர்க்கத்தனமாக ஓங்கி ஓங்கி அடித்தான். அவனுடைய கோபாக்கினி, வடிகால் ஒன்றைத் தேடிக்கொண்டதானால் அணைந்துவிட்டது. இதன்பின் அவன் வகுப்பை விட்டு வெளியேறி விட்டான்.

சிவகுமாரின் மூர்க்கத்தாமான வன்முறையால் வெள்ளைச் சீருடையில் உற்சாகமாகச் சிரித்துக் கொண்டு அல்லி மலர் போல் இருந்த மதுமதி நிலைகுலைந்து போனாள். அவளுடைய பூந்தளிர் போன்ற மேனியெங்கும் காயங்கள். அவள் முகத்தை மூடிக் கொண்டு மேசையில் குப்புறக்கிடந்து அழுதாள். சமத்துவமற்ற சமூக ஏற்றத்தாழ்வுகளை தொழில், கல்வி என எல்லாத்துறைகளிலும் கொண்டுள்ள ஒரு பாழ்பட்ட சமூக அமைப்பு ஒரு மனிதனின் மனத்தைக்காயப்படுத்தியது மனக்காயத்துக்குள்ளான அவன் அவளின் உடலைக் காயப்படுத்தினான்.

மதுமதி உள்ளஞ் சோர்ந்து உடல் புண்ணாகி முகம் இருண்டு வீட்டுக்குப்போனாள். அவள் தனக்கு நேர்ந்ததை தன்னுடைய பெற்றோருக்கு ஆரம்பத்தில் சொல்லவில்லை. எனினும் அவளுடைய தாயார் அவளுடைய முகக்குறிப்பையறிந்து வற்புறுத்திக் கேட்கவே அவள் நடந்தவையாவற்றையுஞ் சொல்லிக் கேவிக்கேவி அழுதாள் இதனை அறிந்த அவளுடைய தந்தை கொதித்துப்போனார். உடனடியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறையிட்டார். அவருடைய முறைப்பாட்டை விசாரிக்கவே இப்போது சிவகுமார் அதிபர் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தான்.

“சிவகுமார் நீங்கள் மதுமதி என்ட மாணவிக்கு அடிச்சது உண்மையா?” என்று அதிபர் கேட்டார்.

சிவகுமார் தலைகுனிந்தபடி, "உண்மைதான் சேர்" என்றான். அப்போது அங்கே வந்திருந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த உத்தியோகத்தர் பின்வருமாறு அவனைக் கேட்டார்.

"உங்களுக்குப் பிள்ளையளுக்கு அடிக்கக்கூடாதெண்டு தெரியாதா? ஒரு குமர்ப்பிள்ளைக்குப் போட்டு இந்த அடி அடிச்சிருக்கிறீங்கள். இப்படி உங்கடை தங்கச்சிக்கு யாரும் அடிச்சால் விடுவீங்களா! ஏன் தான் சேர் இப்பிடியெல்லாம் நடக்கிறீங்களோ"

உடனே மற்ற உத்தியோகத்தர் கூறினார். "நீங்கள் செய்த வேலைக்கு உங்களைக் கைது செய்து விசாரிக்க ஏலும். இது ஒரு நல்ல பள்ளிக்கூடம். பள்ளிக்கூடத்திண்டை பேரைப் பழுதாக்கக்கூடாதெண்டு பாக்கிறன். எங்கடை பிள்ளையளும் இஞ்சைதான் படிக்கினம்"

"ஆர் ஆற்றை கோபத்தையெல்லாம் பிள்ளையள்ளை காட்டாதைங்கோ உங்களை யெல்லாம் நம்பித்தான் பெற்றோர் பிள்ளையளை இஞ்சை அனுப்பீனம்"

"கொஞ்சம் கடவுளுக்கும் பயந்து நடவுங்கோ"

இவ்வாறு வந்திருந்த இருவரும் கூறியதற்கு சிவகுமார், "தயவு செய்து என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ" என்றான். உடனே அதிபர் வந்திருந்தவர்களிடம், "இந்த முறை இவரை மன்னிச்சு விடுங்கோ இதுதான் முதலும் கடைசியும்" என்றார்.

"சேர் உங்களுக்காக விடுறம். பிள்ளையைக் கொண்டுபோய் டொக்டரிட்டைக் காட்டினது. நல்லவேளையா ஒண்டுமில்லை. வெறும் உடம்பு நோத்தான். அதாலை தப்பிச்சியள் இனிமேலாவது ஒழுங்கா இருங்கோ."

அவர்களிருவரும் இவ்வாறு கூறிவிட்டு அங்கிருந்து சென்றனர். அவர்கள் சென்றதும் அதிபர் அவனிடம், "உங்களைப்பற்றி எவ்வளவு உயர்வா நினைச்சன். ஆனா நீங்கள் என்ரை மானத்தை வாங்கீட்டியள்" என்றார்.

சிவகுமார் மீண்டும் அவரிடம் தன்னை மன்னிக்கும்படி கூறினான். அதிபர் அவனிடம் "ஆசிரியர் எண்டு சொல்லப்படுபவர் தந்தைக்குச்சமானம். இதை உணர்ந்து இனியாவது ஒழுங்கா நடவுங்கோ" என்று கூறினார். இதன்பின் அவன் அங்கிருந்து கிளம்பி விட்டான். கிளம்பும் போது அதிபரின் அறையில் மாட்டப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் உருவப்படம் அவன் கண்ணில் பட்டது. கம்பீரமும் சாந்தமும் கருணையும் அந்த முகத்தில் தவழ்ந்தன. அப்படத்தின் அடியில் 'மனிதனாக இரு' என்று எழுதப்பட்டிருந்தது.

அந்த வாசகம் இப்போது அவனுடைய ஞாபகத்துக்கு வர, தூக்கமின்றிக் கட்டிலில் தவித்துக் கொண்டிருந்த அவன், 'தான் மனிதனாக நடந்து கொள்ளவில்லையே' என்று தன்னை நொந்து கொண்டான். இரவிரவாகச் சிந்தித்து அவன் நேரே அவனுடைய பாடசாலை அதிபரிடஞ்சென்று தனது பதவிவிலகல் கடிதத்தை அவரிடம் கொடுத்தான். அதிபர் அவனை விநோதமாக பார்த்தார். ஆனால் அவன் அவருடைய எந்தக் கேள்விகளுக்கும் காத்திராமல் அங்கிருந்து கிளம்பினார். அவனைப் பொறுத்தவரை அவனுடைய காயம்பட்ட மனத்துடன் அவன் இனிமேல் மாணவர்களுக்கு உடைந்த ஏணியாய் இருக்கப் போவதில்லை. அவனுடைய மனக்காயம் தணிய அவனுக்கும் நல்ல ஏணிகள் தேவைப்படு கின்றன. ∅





# கவிதைச் சிதறல்கள்

- மாணிக்கம் ஜெகன் -

**மீள் குடியேற்றம்**

பலவந்தமாக
சொந்த இடத்தை
விட்டு வெளியேற்றி
மீண்டும்
நிர்ப்பந்தமாக
வெவ்வேறு இடங்களில்
குடியேற்றுவதே
மீள்குடியேற்றம்
ஏற்றுக் கொண்டால்
நிவாரணம்

**ஓரினம்**

முகிலினம் போலவே
தமிழினம்
முகவரி
தேடி அலைவதில்
ஓரினம்


**வேகம்**

அதிவேக
நெடுஞ்சாலையில்
வேகமாக போவது
வாகனங்கள்
மட்டுமல்ல!
மனித
உயிர்களும் தான்.


**தீர்ப்பு**

செய்யாத
குற்றத்திற்கு
தண்டனை
குற்றம்!
நிருபிக்கப்பட்டது
வீட்டுப்பாடம்
செய்யவில்லை
என்று..

∅



வவுனியாவில் வெளி வந்த இளைஞர்களின் படைப்புக்கள்



# சிவத்தமிழ்ச் செல்வி

சிவநெறிப்புரவலர் சி.ஏ.இராமஸ்வாமி

சிவத் தமிழ்ச்செல்வி செந்தமிழ் அரசி
சீரிய பணியினைப் போற்றிடுவோம்.
அவத் தினிலேதமிழ்ச் சைவர்க ளானோர்
அழிந்து போகாமல் காக்கவந்தார்
தவத் துணைகொண்டு தானே பிறந்தார்.
தமிழீழ மண்ணாம் யாழ்ப்பாணத்தில்
பவத் தினைக்களைந்து பரமனை அடையப்
பாடுபட் டார்பகல் இரவுன.

ஏழை எளியவர் தமையும் அணைத்து
இயல்பாய் வாழவழி காட்டியவர்.
பாளைச் சிரிப்புடைப் பெண்பிள் ளைகளைப்
பாதுகாத்து அவர் தாயுமானார்
வேளைக்கு வேளை நாள் தோறும்.
வேண்டிய உடையொடு உணவளித்தார்.
நாளைக்கு நல்ல கதிதனை அடைய
நல்லதோர் வழியினைக் காட்டிநின்றார்.

ஆன்மீக சாதனை தனைப் புரிந்தார்
அமைப்பென ஒன்றையும் நிறுவிவைத்தார்.
தானறி வழியிலே தரணி செல்ல
தக்கவர் தம்மையும் வளர்த்துவிட்டார்.
ஊனுடல் தன்னை ஒழித்து அந்த
ஒருவனை அடைந்த நாளுமிதாம்.
வான்புகழ் கொண்டவர் தனை நினைத்து
வாழ்த்தியும் ஆசியைப் பெற்றிடுவோம்.

∅





# பாடசாலை மாணவிகளின் சீருடை

கலாநிதி அகளங்கன்

பாடத் திட்டங்கள் காலத்துக்குக் காலம் மாற்றப்படுகின்றன. கற்பித்தற் கோட்பாடுகளும் காலத்துக்குக் காலம் மாற்றம் பெறுகின்றன.

கற்பித்தல் முறைகளில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன. கல்விக் கொள்கைகள் கூட காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டே வருகின்றன.

நீண்ட காலமாக எமது நாட்டில் மாற்றம் அடையாமல் இருந்து வருவது பெண்பிள்ளைகளின் சீருடைதான்.

இந்தக் கட்டுரை பெண்பிள்ளைகளின் சீருடை பற்றியே எழுதப்படுகின்றது.

பாடசாலைகளில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் பால்வேறுபாடு கருதி வெவ்வேறு வகையான சீருடைகளை அரசு அறிமுகப்படுத்தியது.

சீருடைக்குரிய துணிகளை வாங்க வசதியற்ற ஏழைமாணவர்களுக்காக சீருடைத் துணிகளை அரசு வழங்குகிறது.

இலவசச் சீருடைத் துணி வழங்கும் அரசின் திட்டம் நன்றியோடு பாராட்டப்பட வேண்டியதே.

எமது நாட்டில் கல்வி கற்கின்ற அனைத்து மாணவர்களும் தத்தமது குடும்ப பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் காட்ட முடியாதபடி ஒரே வகையான. ஒரே தரமான சீருடைகளை அணிந்து கொண்டு பாடசாலைக்குச் செல்லவேண்டுமென்ற அரசின் கொள்கை குறைகூற முடியாத உயர்ந்த கொள்கையே.

சாதி, சமய, இன, மொழி, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை மாணவர்களிடம் இல்லா தொழித்து மாணவர் என்ற ஒரே சம தகுதியை யாவருக்கும் வழங்குகின்ற வகையில் சீருடைத் திட்டம் எமது நாட்டில் நல்ல முறையில் அமுல்படுத்தப்படுகிறது.

இருப்பினும் பாடசாலைகளின் தரங்களை மாற்றியும், சமயரீதியான பாடசாலைகளை உருவாக்கியும், பால் ரீதியான பாடசாலைகளை அனுமதித்தும், மொழிரீதியான பாடசாலைகளை உருவாக்கியும், தனியார் பாடசாலைகளை அங்கீகரித்தும் மாணவ சமூகத்தில் ஏற்றத் தாழ்வையும், வேறுபாட்டையும் விதைத்து வளர்த்து விட்டது.

இந்த ஏற்றத் தாழ்வினால், வேறுபாட்டினால் சீருடைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது.

குறிப்பாக முஸ்லிம் மாணவிகளின் சீருடை ஏனைய மாணவிகளின் சீருடைபோல இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் மாணவிகள் பலர் முஸ்லிம் பாடசாலையல்லாத வேறு

பாடசாலைகளில் கற்கும் போது ஏனைய மாணவிகளைப் போல சீருடை அணிந்து செல்லும் வழக்கமும் உண்டு என்பது மறுக்க முடியாதது.

தமிழ் சிங்கள மாணவிகளின் சீருடைகள் ஒரே மாதிரியாக இருந்தாலும் தையல் முறையில் வேறுபாடுகளைக் காணக் கூடியதாகவே இருக்கிறது.

சில பெரிய பாடசாலைகளில் (இந்தப்பாகுபாடே தேவையில்லை) குறிப்பாக பெண்கள் பாடசாலைகளில் (இந்தப் பாகுபாடும் அர்த்தமற்றது) மேற் சட்டைக்கு மேல் கோட்டுப் போடுகின்ற வழக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுவும் பல நிறங்களில்.

பணக்கார வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே படிக்கின்ற அல்லது படிக்கக்கூடிய இப்பாடசாலைகளில் பெண்பிள்ளைகள் அணியும் கோட்டின் பெறுமதி சீருடையின் பெறுமதியை விட மிகமிக அதிகம் என்பது மிகவும் வருந்தத் தக்க உண்மையாகும்.

கிறிஸ்தவப் பெண்கள் பாடசாலைகள் பல (கொன்வென்ற்) இத்தகைய சீருடைகளை (சீரற்ற உடைகளை) வேறு வேறு நிறங்களில் தங்கள் மாணவிகளை அணிந்து வரும்படி வற்புறுத்தி நடைமுறைப்படுத்துகின்றன.

இது மாணவர்களிடையே வேறு பாட்டை, ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தவல்லது. ஏழைப் பிள்ளைகளின் மனதைப் பெரிதும் புண்படுத்துவது.

சமத்துவமற்ற சமூகத்தைப் பாடசாலைகளிலேயே உருவாக்குகின்ற இந்த நடைமுறை எமது நாட்டுக்குப் பெரும் நாசத்தையே விளைவிக்கும்.

தனியார் பாடசாலைகளும் (இத்திட்டமே தவறு) கிறிஸ்தவப் பாடசாலைகளும், பணக்காரப் பெற்றோரையும், மாணவர்களையும் கவர்வதற்காகச் செய்கின்ற இக்காரியத்தை இதுவரை எந்த ஆட்சியாளரும் கண்டுகொள்ளவில்லை.

மாறாக இனாம் என்ற பெயரில் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றோரிடம் கொள்ளையடிக்கின்ற இத்தகைய பாடசாலைகளுக்குச் சார்பாகவே அரசுகள் செயற்படுகின்றமை வேதனைக்குரியது.

ஏனெனில் அந்தப் பிள்ளைகளுக்கும் இலவசச் சீருடைத் துணிகளையும் இலவசப் பாடப்புத்தகங்களையும் அரசே வழங்கி வருகின்றது.

இத்தகைய பாடசாலைகளுக்கு அரசு வழங்கி வருகின்ற சீருடைத் துணிகளையும், பாடப்புத்தகங்களையும் நிறுத்தினால் அந்தப் பணத்தில் எத்தனையோ ஏழைமாணவர்களுக்கு கைகொடுத்து உதவலாம், என்ற உண்மையை ஏனோ அரசினரும் அறிஞர்களும் கருத மறுக்கின்றனர்.

இஸ்லாமியப் பாடசாலைகளில் கற்கும் இஸ்லாமியப் பெண்கள் அணிகின்ற சீருடை மிகவும் நல்ல வகையிலேதான் இருக்கின்றது.

ஆனால் மாணவிகள் என்ற பொதுத் தன்மையிலிருந்து இஸ்லாமிய மாணவிகள் என்ற தனித்தன்மையை, பிரிவுணர்ச்சியை மாணவரிடையேயும் சமூகத்திலும் வளர்த்து விடுகின்றது என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.





பண்பாட்டு ரீதியான உடை என்ற அளவில் நோக்கும்போது யாழ்ப்பாணத்து மருதனா மடத்தில் இயங்குகின்ற இராமநாதன் பெண்கள் கல்லூரியில் ஒரு காலத்தில் (1980 இற்கு முன்) பெண் பிள்ளைகள் பருவமாற்றத்திற்கேற்ப, முழுப்பாவாடை, துண்டுத் தாவணி, சேலை என உடுத்த காலம் இருந்தது.

அந்தக் காலத்தில் அந்தப் பாடசாலைக்குப் பெரிய பெயரும் இருந்தது.

சேர் பொன் இராமநாதன் அவர்களின் கல்விக் கொள்கையின் படி சைவப் பிள்ளைகள் சைவப் பண்பாடு சிதையாமல் கல்வியைப் பெறவேண்டும் என்ற வகையில் இராமநாதன் மகளிர் கல்லூரியையும், ஆண்பிள்ளைகளுக்காக திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியையும் நடத்தினார்கள்.

பரமேஸ்வராக் கல்லூரி பின் யாழ்ப்பாண வளாகத்திற்காக எடுக்கப்பட்டு விட்டது. இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆயிற்று.

பெண்களின் ஆடையில்தான் ஆண்கள் தங்கள் பண்பாட்டைக் கலாசாரத்தைக் காட்ட வேண்டுமா என்ற பெண்ணிலை வாதக் கருத்துப்படி பார்த்தால் சில சிக்கல்கள் ஏற்படும்.

இருப்பினும் இஸ்லாமிய ஆண் பிள்ளைகள் இஸ்லாமியப் பாடசாலைகளில் தொப்பி அணிந்து செல்வதையும் மறுப்பதற்கில்லை.

கலாச்சார அடையாளங்கள் வேறுபாட்டை வளர்க்கின்றன என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கன.

**தமிழ்ப் பெண் பிள்ளைகளின் சீருடை :**

தரம் 10இல் கல்வி கற்கும் 14,15 வயது ஆண்பிள்ளைகள் தமது கால்களை முற்றாக மறைக்கின்ற ஜீன்ஸ் (முழுக்காற்சட்டை) அணிந்து பாடசாலைக்குச் செல்ல, தரம் 13 இல் கற்கின்ற 18,19 வயதுப் பருவப் பெண்பிள்ளைகள் முழங்கால் வரை மட்டும் (அதுவும் சில பாடசாலைகளில் மேலே ஏறிவிடுகிறது) சட்டை அணிவது எந்த வகையில் பொருத்தமானது என்பதுதான் எனது கேள்வி.

தரம் 1முதல் தரம் 9 முடியும்வரை அரைக்காற்சட்டை அணிந்த ஆண்பிள்ளைகளுக்கு தரம் 10 இற்குச் செல்லும் போது பருவமும் உருவமும் வந்துவிட, பெண்பிள்ளைகளுக்கு மட்டும் தரம் 1 இலிருந்து தரம் 13, அதன் பின்னான திரும்பப் பரீட்சை எடுக்கும் (Repeat) 20 வயது மாணவிவரை பருவமும் உருவமும் வராமலா இருக்கின்றது.

இவர்களது ஆடையில் எந்த மாற்றமும் செய்யப்பட வில்லையே.

சில பெண்பிள்ளைகள் தரம் 6 இலேயே தோற்றப் பொலிவைப் பெற்றுவிடுகிறார்கள் என்பது வேடிக்கையான உண்மையல்ல.

தங்களது தோற்றப் பொலிவு சக மாணவர்களுக்கும், ஏன் ஆசிரியர்கள்

(ஆண்) அதிபர்கள் (ஆண்) மற்றும் ஊழியர்களுக்கும் கூட சலனத்தை ஏற்படுத்துவதை பாவம் அந்த அப்பாவிப் பெண்பிள்ளைகள் அறிய மாட்டார்கள்.

அவர்களது ஆடை அவர்கள்மேல் பலரும் கெட்ட பார்வையை வீச வைத்து விடுகிறது என்பதையும் அவர்கள் அறியார்கள்.

பத்திரிகைச் செய்திகளில் அடிக்கடி வரும் செய்தி ஆசிரியர் மாணவி, அதிபர் மாணவி பற்றிய கெட்ட செய்திகள் தான் என்பது வேதனை மிகுவிக்கும் உண்மைச் செய்திகளே என்பதை மறுக்க முடியாது.

இன்றைய இந்தச் சீருடையை அணிந்து தெருவிலே நடந்து செல்ல முடியவில்லை.

காற்றுக் காலத்தில் சட்டையைக் காற்று மேலே உயர்த்தாமல் பாதுகாப்பதற்காக, பிரத்தியேகமாக இன்னொரு கை எமது பிள்ளைகளுக்குத் தேவைப்படுவதை ஏன் கல்வியியலாளர்கள் கண்டு கொள்ளவில்லை.

காலைப் பிரார்த்தனை வேளையிலும் கூட காற்றடிக்கும் போது பிள்ளைகள் கும்பிட முடியாமல் கையால் ஆடையை அழுத்திப் பிடிப்பதைப் பார்க்கும் போது பரிதாபமாக இருக்கின்றது. உங்களுக்கு அப்படி இருக்கவில்லையா.

இன்று சைக்கிளிலும் நடந்தும் தான் ஏழைப் பெண்பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.

இன்றைய இந்தச் சீருடை சைக்கிள் ஓட்டப் பொருத்தமான சீருடை தானா என சிந்தித்துப் பாருங்கள்.

காமுகர்களின் பார்வைக்கு விருந்தளிக்கும் வகையிலா எங்கள் தமிழ்ப் பெண்பிள்ளைகளின் சீருடைகள் இருக்க வேண்டும்.

பணக்காரப் பிள்ளைகள் ஓட்டோக்களிலும் வான்களிலும் பாடசாலைக்கு ஒய்யாரமாகச் செல்கின்றனர்.

பெரிய உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் அரசாங்க வாகனங்களில் பாடசாலைக்குச் செல்கின்றனர்.

நடுத்தரக் குடும்பத்தோர் தாமே தமது வாகனங்களில் (மோட்டார் சயிக்கிள்) தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கொண்டு செல்கின்றனர்.

ஏழைப் பிள்ளைகள் தான் பஸ் வண்டியிலும், சயிக்கிளிலும், நடந்தும் பாடசாலைக்குச் செல்கிறார்கள்.

இவர்கள் தான் சீருடைப் பிரச்சனைகளில் சீரழிகிறார்கள்.

இந்தியாவில் பல பாடசாலைகளில் சுடிதார், பஞ்சாபி போன்ற ஆடைகளை அறிமுகப்படுத்தி விட்டார்கள். ஏன் நாமும் அத்தகைய ஆடைகளை அறிமுகப்படுத்தக் கூடாது.





முழுப்பாவாடையோ, துண்டுத் தாவணியோ, சேலையோ கட்ட வேண்டுமென்று நான் சொல்ல வில்லை. அவையும் பொருத்தமற்றவையே.

சுடிதார் போன்ற உடைகள் அல்லது இஸ்லாமியப் பெண்கள் அணிவது போன்ற உடைகளை ஏன் அறிமுகப் படுத்தக்கூடாது.

இஸ்லாம் பெண்கள் அணிகின்ற ஆடையில் தலையில் அணிவதை மட்டும் மாற்றினால் யாவருக்கும் பொருந்தி விடுமே.


இஸ்லாமியப் பெண் பிள்ளைகள் அணிகின்ற ஆடையை தமிழ்ப் பெண்பிள்ளைகள் எப்படி அணிய முடியும் என்று சில பண்பாட்டு வாதிகள் யோசிக்கலாம். என்னைக் கோபிக்கலாம்.


ஆனால் தமிழ்ப் பெண்பிள்ளைகள் இன்று அணிகின்ற சீருடை மட்டுமென்ன தமிழருடைய பண்பாட்டுச் சீருடையா? இல்லையே. அது வெள்ளைக்காரர் அறிமுகப்படுத்தியதுதானே.

சுடிதார், பஞ்சாபி முதலானவையும் நம்முடையனவல்லவே. எனவே கல்வியியலாளர்கள், ஆட்சி அதிகாரத்திலிருப்போர். பெண்பிள்ளைகளின் சீருடை மாற்றம் பற்றி யோசிக்க வேண்டும்.

பெண்ணிய வாதிகள் இந்த விடயத்திலும் கவனம் செலுத்தி எங்கள் பெண்பிள்ளைகளின் மானத்தைக் காப்பாற்றக் கூடிய நல்ல பொருத்தமான, ஏழைகளுக்கும் ஏற்ற சீருடையை தெரிவு செய்ய வேண்டும் என விநயமாக வேண்டுகிறேன்.

## வவுனியாவில் இருந்து வெளியாகிய நாவல் மற்றும் சஞ்சிகை



# பாடல்

பாடல் : த.பிரதாபன்
இசை : கந்தப்பு ஜெயந்தன்

வவுனியா மண்ணே!
எங்களின் கண்ணே!
வந்தவரை வாழவைக்கும்
வன்னித் தாயவளே!

பண்டார வன்னியன் ஆண்ட பூமி - இது
பண்பாடு கொண்ட தமிழர் வணங்கும் சாமி
கண்ணான கலைகளும், நல்ல தமிழ் கதைகளும்
பொன்னான தேசம் எங்கும், பூமழை பொழிந்திடும்...
(வவுனியா .... மண்ணே...)

மணிக் கூட்டுக் கோபுரமது உங்களை வரவேற்கும்
பஸ்ராண்டு வீதி எங்கும், மக்கள் கூட்டம் அலைமோதும்.
கந்தசாமி ஆலயமோ கைகூப்பித் தொழவைக்கும்
கந்தஷட்டி வந்ததுமே, சூரன் போரும் வலம் வரும்,
வசந்தித் தியேட்டரில, மக்கள் வெள்ளம் அலைமோத,
இளைய தளபதியின், புதுப் படம் ரிலீஸாகும்,
நகரசபை மைதானம் மின் ஒளியில் களைகட்டும்,
மாபெரும் நிகழ்ச்சிகளும் அங்குதானே அரங்கேறும்,
வாண வேடிக்கைகள், வானம் எங்கும் அதிரந்திடும்
கோஷ்டி மோதல்களும், குத்துச் சண்டை வீரர்களும்,
அப்பப்பா... அப்பப்பா... அடிதடி வேண்டாமப்பா...
ஏனப்பா... ஏனப்பா... போதுமடா, நிறுத்தப்பா.....
(வவுனியா... மண்ணே...)

வைரவபுளியங்குளம் உன்னை அழைக்கும்
குளக்கட்டுப் பிள்ளையாரின், அருள் கிடைக்கும்,
குருமன் காட்டுச் சந்தி எங்கும், பசங்க கூட்டமடா,
கும்மாளம் அடிக்கின்ற, வாலிபர்வட்டமடா,
கொம்பியூட்டர் படிக்கப் போகும், பெண்களின் பின்னாலே
காதல் வலை வீசுகின்ற மன்மதக் கூட்டமடா
பண்டாரிகுளம் வவுனியா அழகைச் சொல்லும் - எங்கள்
வயல் வெளி அம்மன் கோவில் நிறைவு தரும்.
பண்பான தமிழர்கள் வாழும் இடம்டா - இது





பண்பாடு நிறைந்த தமிழ் பேசும் இடம்டா.....

அந்திமாலை வேளையிலே கிறிக்கற்று விளையாட்டு
சந்தி எங்கும் வீதி உலா வண்ண வண்ணக் கோலமடா..
உக்குளாங் குளம் எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும்,
சின்னச் சின்னக் காதலடா சின்னவர்கள் லீலையடா.
முறுக்கு மீசை வைச்ச சிங்கங்கள் - அது
கூமாங்குளம் வாழும் தங்கங்கள்.
பண்போடு வாழும் எங்கள் தமிழரடா - இது
வந்தவரை வாழவைக்கும் பூமியடா.
மாசி மாதம் சிவராத்திரி வந்துவிட்டால்.
மாறி மாறி பக்தர் கூட்டம் படையெடுக்கும்
கோவில் குளம் சிவன் பெயர்தான் உரைக்கும்.
கண்ணன் கோவில் கோவில்குளம் புகழைச் சேர்க்கும்
கல்வாரி மலைவாழும் ஆண்டவரின் கருணை
கிடைத்திட நாங்கள் ஜெபம் செய்வோம்...
(வவுனியா.....)

கெல்மெற்றுப் போடாத மோட்ட சைக்கிள் பசங்களும்
சவுண்டு வைச்சுப் பாட்டுப் போடும் ஆட்டோக்களும் அதிகமடா.
வாகன நெரிசல் புகை தாங்கலையே - எங்கள்
இலுப்பையடிச் சந்தி வீதி தூங்கலையே.
எட்டுத் திக்கும் எங்கள் புகழ் பாடுங்கடா...
கொட்டு மேளம் கொட்டி நீங்கள் ஆடுங்கடா...
சுற்றி வரும் பூமியை சுற்றி வருவோம் - எங்கள்
ஒற்றுமையை உலகுக்கு ஓங்கி உரைப்போம்.

பட்டாணிச் சூர் அல்லாவை தினம் தொழுதால்
பட்டதுன்பம் எல்லாமே பறந்து விடும்.
புத்த பெருமானின் அருள் கிடைக்க
பன்சாலைக்குச் செல்வோம் வணங்கிடுவோம்.
அப்பப்பா.. அப்பப்பா.. எத்தனை ஊரப்பா
அத்தனையும் பாட இங்கு வரிகளும் இல்லையப்பா...
யாழ் தேவி இசைத் தொகுப்பில் இருந்து...
வவுனியா கலைஞர்களின் படைப்பு (வவுனியா....)

# கல்லும் கலையும்

- அருட்கலை வாரிதி, ஸ்தபதி சு.சண்முகவடிவேல் -
அபிராமி சிற்ப நிலையம் 61, 1ஆம் குறுக்குத்தெரு, வவுனியா.

இப் பூவுலகின் தோற்றத்தின் மூலப்பொருள் கல்லாகும். இதனால்த்தான் கல் தோன்றி மண் தோன்றாக் காலம் என்ற முதுமொழி இன்றும் வழங்கி வருகிறது.

கற்கால நாகரிகம், நதிக்கரை நாகரிகம், சமவெளி நாகரிகம் என வளர்ச்சியடைந்த நாகர்கங்களுடன் கருங்கல் நாகரிகமும் சேர்ந்தே வளர்ந்து வந்திருக்கின்றது.

பண்டைக் காலம் முதல் தற்காலம் வரை மனித நாகரிக வளர்ச்சியை, பண்பாட்டை கற்களின் மூலம் சிற்பிகள் வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

சிற்பக் கலையின் மேன்மை, அதன் கருங்கல் கலைப் படைப்புக்களிலேயே தங்கியிருக்கின்றது. காலத்தை வென்று நிற்கும் கோவில்களும், கோபுரங்களும், பண்டிகைகளும், பிராகாரங்களும், தூண்களும், போதிகைகளும், கோமுகைகளும், விக்கிரகங்களும் கற்களிலேயே செதுக்கப்பட்டு இன்றளவும் எம்மை மகிழ்வித்து வருகின்றன.

இத்தகைய சிறப்புப் பெற்ற கற்கள் பல வகைப்படும். கருங்கற்கள், வெள்ளைக்கற்கள், மஞ்சற் கற்கள், பச்சைக்கற்கள், பளிங்குக்கற்கள், மாக்கற்கள் என விரிவடைந்துகொண்டே செல்லும்.

பண்டைய சிற்பிகள் எல்லாவகையான கற்களையும் நன்கு ஆராய்ந்தார்கள். பரிசோதனை செய்து பார்த்தார்கள் எல்லாவற்றிலும் கருங்கல்லே மிகச் சிறந்தது என்னும் முடிவுக்கு வந்தார்கள்.

கருங்கற்கள் உறுதியுடையவை, சிதைவில்லாத தன்மை கொண்டவை. நிறமாறுபாடு அடையாதவை. குளிர்ச்சியும் வெப்பமும் உடையவை. என்றும் அழிவில்லாதவை.

எனவே, சிற்பக் கலைஞர்கள் வழிபாட்டிற்குரிய விக்கிரகங்களை கருங்கற்களிலே செதுக்கினார்கள். இறைவன் உறைகின்ற ஆலயங்களை கற்களால் கட்டி கலைக் கோவில்களாக்கினார்கள். காலத்தை வென்றுநிற்கும் அதியற்புதமான கருங்கல் கலைப்படைப்புக்களைத் தந்தார்கள். இன்றும் தந்துகொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் நாடே சிற்பக்கலைக் களஞ்சியமாகும். மாமல்லபுரத்து குடைவரைக் கோவில்களும், தஞ்சை பெரிய கோவிலும், மதுரை மீனாட்சியம்மன் சுந்தரேசுவரர் கோவில் சிற்பங்களும், சுசீந்தரம் இசைத் தூண்களும், திருவண்ணாமலை ராஜ கோபுரமும் காணக் கிடைக்காத அரிய சிற்பக் கருவூலங்களாகும்.

இலங்கையில், கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், யாழ் வண்ணார் பண்ணை கதிரேசன் கோவிலின் கர்ப்பக்கிரக,





அர்த்த மண்டப, மகாமண்டப கருங்கல் சிற்ப வேலைப்பாடுகள் மிகச் சிறந்தவையாகும்.

கருங்கற்கள் வெப்பமும், குளிர்ச்சியும் உடையவை என முன்னர் கண்டோம். சற்று விரிவாகப் பார்ப்போம்.

தொடர்ந்து வெப்பமான சூழலில் இருக்குமானால் கருங்கற்கள் வெப்பத்தையே தந்துகொண்டிருக்கும். தொடர்ந்து குளிர்மையான சூழலில் இருக்குமானால் குளிர்ச்சியையே தந்து கொண்டிருக்கும். இதனால்த் தான் கருங்கல் விக்கிரகங்களுக்கு எண்ணெய்க் காப்பு செய்கிறோம். பால், தயிர், இளநீர், நீர் கொண்டு தொடர்ந்து அபிஷேகம் செய்கின்றோம். இதனால் கருங்கல் விக்கிரகங்கள் குளிர்ச்சி அடைகின்றன. வழிபடும் அடியவர்களையும் குளிர்ச்சியடையச் செய்கின்றன.

இத்தகைய பெரும் சிறப்பு கருங்கற்களுக்கு இருப்பதனால்தான், மூல விக்கிரகங்களை கருங்கல்லில் செதுக்கி வைத்து வழிபாடு செய்கிறோம்.

கருங்கற்களில் ஈரம் இருப்பதனால்தான் தேரையும் வாழ்கின்றது. இது நம்ப முடியாத உண்மையாகும். பண்டைய சிற்பக் கலைஞர்களின் வரலாறுகள் மூலம் இதை அறியலாம். மண்ணிலுள்ள கருங்கற்படுகைகளை ஒட்டியபடி தேரைகள் வாழ்வதை இன்றும் காணலாம்.

கற்களில் **ஆண், பெண், அலி** என்ற பால் வேறுபாடுகளும் இருக்கின்றன. ஆண் விக்கிரகங்களை ஆண் கல்லிலும், பெண் விக்கிரகங்களை பெண் கல்லிலும், பீடம் என்னும் ஆசனங்களை அலிக்கல்லிலும் செதுக்க வேண்டுமென சிற்ப நூல்கள் கூறுகின்றன.

சிவலிங்கம் எனப்படுவது இரண்டு பாகங்களை உடையது. கீழ்ப்பாகம் ஆவுடையார் எனப்படும் பெண்பாகமாகும் இதை, பெண்கல்லில் வடித்தல் வேண்டும். மேல்ப்பாகம் தண்டு என்னும் லிங்கமாகும். இதை ஆண்கல்லில் வடித்தல் வேண்டும் இவற்றிற்குரிய பீடக் கல்லை அலிக்கல்லில் வடித்தல் வேண்டும்.

கருங்கற்களில் இன்னும் சிறப்பான பல அம்சங்கள் உண்டு. பொன்நிறமான ரேகைகள், வெண்மையான ரேகைகள் படிந்திருக்கும் கற்களில் விக்கிரகங்கள் செதுக்கினால் விக்கிரகங்களின் சக்தியும் அதிகரிக்கும்.

கல்லிலே, திறந்த வாய் உள்ளனவாக சிம்மங்களைச் செதுக்கி, அதன் வாய்களிலே கல் உருண்டைகளை உருளும்படி செய்யலாம். இசையெழுப்பும் இசைத் தூண்களையும் செதுக்க முடியும். ஸப்த ஸ்வரங்களையும் கற்தூண்களில் ஏற்ற முடியும். இதற்கு தொழில் நுணுக்கத்துடன் இறையருளும் வேண்டும். சங்கிலிக் கோர்வைகளையும் செய்ய முடியும்.

கருங்கற்கள் இறைவன் அளித்த அருட்கொடை. பொழியப்பட்ட கருங்கல் விக்கிரகங்களில் இறைவன் ஐக்கியமாகி அருளாட்சி செய்கின்றான். இத்தகைய கருங்கற்களைத் தேர்ந்தெடுத்து அழியாக் கலைப் படைப்புக்களைத் தருகின்றவர்கள் படைப்புக் கடவுளின் வழிவந்த **விஷ்வகர்மாக்கள்** என்னும் பிரிவிலுள்ள ஸ்தபதிகள் ஆவார்கள். விராட் விஷ்வப் பிரம்மனே இத்தொழிலின் தெய்வமாவார்.

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ

# வட்டத்தின் முத்தமிழ்ச் செல்வர் விருதுபெறும் தென்பொதிகைக் கவிஞர், கலைமணி, கலைஒளி, சிவசித்தாந்த வித்தகர், வட்டூர்க் கவிஞர் அமரர் கதிர்.சரவணபவன்.



இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்த முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி அவர்களின் மகள் வழிப் பேரன். சன்னிக்குராசன் எனப் புகழப்பட்ட சித்த வைத்தியர் சரவண முத்துபரியார் அவர்களின் மகன் வழிப்பேரன்.

புலவர் பரம்பரை, வைத்தியர் பரம்பரை என்ற இரு பரம்பரைக் கலப்பில், 6ம் பரராச சேகரன் வழியில் கதிரை மலைநாதன் ஞானப் பூங்கோதை தம்பதிகளின் 10 பிள்ளைகளில் இரண்டாவது பிள்ளையாய் முதல் ஆண்பிள்ளையாய் 25.12.1952ல் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் அமரர்.சரவணபவன் பிறந்தார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் பின் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் கல்விகற்றார். வட்டுக் கோட்டை, பளை, முதலான இடங்களில் வாழ்ந்து வவுனியா தோணிக்கல் என்ற இடத்தில் வாழ்ந்து வாழ்வை நிறைவு செய்தார்.

ஸ்ரீலக்குமிதேவியை மணந்து பூவிழி, காவேரி, விஷ்வபாரதி என்ற பெயர் கொண்ட பிள்ளைகளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தார்.

பாடசாலைக் காலத்திலேயே பேச்சுத் துறையில் ஈடுபடத் தொடங்கிய இவர் சிறந்த பேச்சாளனாக மதிக்கப்பட்டார். பட்டி மண்டபப் பேச்சாளராகவும் திகழ்ந்தார்.

கவிதை, பாடல் என்னும் துறைகளில் ஆற்றல் பெற்ற படைப்பாளியாக விளங்கினார். பல ஆலயங்களுக்கு ஊஞ்சற் பாக்களை எழுதினார். கல்வெட்டுக் கவிதைகளை எழுதினார்.

பாடும் திறமை பெற்ற இவர் நாட்டுக் கூத்து, இசை நாடகம், நாடகம் ஆகியவற்றில் பாடியும், ஆடியும், நடித்தும் திறமை காட்டிப் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தினார். வில்லுப்பாட்டு எழுதி இசையமைத்துப்பாடி அரங்குகளை அதிசயத்தில் ஆழ்த்தினார்.





புரவி நடனம் எனப்படும் குதிரை ஆட்டத்தை வவுனியா மண்ணில் ஆடிக்காட்டிய முதல்வர் இவரே. 2009ல் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மா நாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H) இடம் பெற்ற வடக்கின் வசந்தம் கலைவிழா நிகழ்வில் இவர் மேடையேற்றிய புரவி நடனம் மிகுந்த பாராட்டைப் பெற்றது.


கவியரங்குகள் பல கண்ட இவர் **தெய்வீகமும் சமாதானமும்** என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டார். **சங்க இலக்கிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்** என்ற பெயரில் நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, என்னும் நூல்களுக்கு உரை எழுதிவெளியிட்டார். செம்மொழி மீளாய்வு என்ற நூல் அச்சேற்றிய குறையில் 13.09.2012இல் அமரரானார்.


பல கட்டுரைகளை எழுதினார். கந்த புராணத்திற்குப் பயன் (புராணபடனம்) சொல்லி பக்தியைப் பரப்பினார். ஆங்கில ஆசானாய் பலருக்கும் கற்பித்தார்.


மனோலயா அரமியம் 1998இல் **கலைமணி** விருது வழங்கிக் கௌரவித்தது. மெய் கண்டார் ஆதீனம் 2001இல் **சிவசித்தாந்த வித்தகர்** பட்டம் வழங்கிக் கௌரவித்தது வவுனியா பிரதேச கலாசாரப் பேரவை 2010இல் **கலைஒளி** பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

கவிதை, கட்டுரைப் போட்டிகள் பலவற்றில் பரிசுபெற்று கவிஞராக, எழுத்தாளராக கலைஞராக, முத்தமிழ்க் கலைஞராக விளங்கிய வட்டூர்க் கவிஞர் கதிர் சரவணபவன் அவர்களுக்கு அவரின் முத்தமிழ்ச் சேவையைப் பாராட்டி முத்தமிழ்ச் செல்வர் என்னும் விருதை தேகாந்த நிலையில் வழங்கி வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் பெருமை பெறுகிறது.

∅






# திரு.சு.சிவபாலன் அவர்களுடன் சுயகற்றலை முன்வைத்து ஓர் உரையாடல்

- நேர்காணல் : கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் -

01. இளமைப் பராயத்துக் கல்வி கற்றல் வாழ்வு பற்றிக் கூறுங்கள்?



எனது பெற்றோர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த போதிலும் எனது அம்மாவினுடைய தந்தையார் வியாபாரம் மற்றும் கமம் சார்பாக வவுனியாவிலிருந்து 5 மைல்கள் தொலைவில் அமைந்துள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாமடுவ எனும் கிராமத்தில் 1933ம் ஆண்டிலிருந்து வரலாற்றைக் கொண்டிருந்தார். அக்கிராமத்தில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒன்றாக வாழ்ந்து வந்தார்கள். அங்கு ஒரு ஆரம்பப்பாடசாலை இருந்தது. அதிபர் சிங்களவராக இருந்தார். பல சிங்கள ஆசிரியர்கள் இருந்தார்கள். தமிழ் மாணவர்களுக்கென ஒரேயொரு தமிழ் ஆசிரியர் இருந்தார். அவர்தான் ஆண்டு ஒன்றிலிருந்து ஆண்டு ஐந்து வரையுள்ள தமிழ் மாணவர்களிற்கு ஆசிரியராக இருந்தார். எனது முதலாம் இரண்டாம் வகுப்புக்களை அங்கேதான் கற்றேன். பழைய மன்னன் வசபா கட்டிய குளத்தங்கரையிலேயே இப்பாடசாலை அமைந்து இருந்தது. எனது 3ம் வகுப்பையும் 4ம் வகுப்பையும் யாழ்ப்பாணத்தில் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் கற்றேன். அங்கு சுவாமி விவேகானந்தரின் உடைய நினைவு நிகழ்வுகள், நாடகங்கள், ஆட்டங்கள், பாட்டுக்கள் என அமைந்தது போல ஒரு தோற்றம் என் மனக்கண் முன்னே இருக்கின்றது. இப்பாடசாலை இராமகிருஷ்ண மிஷனால் உருவாக்கி வளர்க்கப்பட்டதென்பது மிகவும் முக்கியமான தகவலாகும்.

ஒரு விடுதியிலே தங்கிப் படிக்கக்கூடிய வயது எனக்கு வந்து விட்டது என்பதாலோ என்னவோ, வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் விடுதி வசதி இல்லை என்பதாலும் யாழ் இந்துக்கல்லூரி விடுதியில் சேர்க்கப்பட்டு நான் 5ம் ஆண்டிலிருந்து உயர்தர வகுப்பு வரை என் கல்வியை கற்றேன். எனது யாழ் இந்துக்கல்லூரி விடுதி அனுபவம் பாடசாலையில் நான் கற்ற கற்றலும் என் வாழ்வில் மறக்கமுடியாத மகத்தான பசுமையான அனுபவங்களே. விடுதியிலே கடுமையான கட்டுப்பாடுகள், சட்டதிட்டங்கள், பாராட்டுக்கள், தண்டனைகள் இருந்தன. அக்கல்லூரி வாழ்க்கையிலே பாடசாலையிலும் விடுதியிலும் நான் பெற்ற அனுபவங்கள் எனக்கு கிடைத்த வழிகாட்டல்கள் எல்லாமே அபரிமிதமானவை.

"Play while you Play study while you study" என்ற வாசகம் தான் என் மனதிலே வெகு ஆழமாக பதிந்திருக்கின்றது. ஒரு முட்டாள்தான் கல்வியையும் விளையாட்டையும் பிரித்துப் பார்ப்பான் "காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு. மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக்





கொள்ளு பாப்பா" என்ற பாரதியாரின் சிந்தனைதான் எங்கள் மனதிலே எந்தவித பெரிய ஆர்ப்பாட்டங்களும் இல்லாமலும் விதைக்கப்பட்டதை நான் இன்றைய 65வது வயதிலே உணர்கிறேன்.

நான் ஆசிரியனாக வந்து எனது Postgraduate diploma in Education இல் நான் கற்ற கல்வி உளவியல், நான் கண்ட உளவியல் கோட்பாடுகள் அனைத்துமே எனது ஆரம்பக் கல்வியில் எனது ஆசிரியர்கள் யதார்த்தமாகக் கொண்டிருந்தார்கள் என்பதை இன்று நான் நன்றாக உணர்கிறேன். சுயகட்டுப்பாடு என்பது வாழ்க்கைக்கு எத்துணை வரமாக நின்று ஒரு மனிதனைப் போல வாழ உறுதுணையாக நிற்கும் என்பதை என்வாழ்வில் நிதர்சனமாகக் கண்டு கொண்டிருக்கிறேன். இளம்பராயத்துக்கல்வி நான் ஆசிரியனாக வந்து என் ஆசிரியத் தொழிலை புனிதமாக்குவதற்கும் அத் தொழிலில் வெற்றி காண்பதற்கும் உறுதுணையாக இருக்கின்றதென்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

எனது இளம் பிராயத்துக் கல்வியில் குறிப்பாக யாழ் இந்துக்கல்லூரிக் கல்வி எத்தனையோ அபரிமிதமான சிந்தனைகளை, அனுபவங்களை, எண்ணங்களை எனது மனதிலே விதைத்திருக்கின்றது. இவை எண்ணற்றவை. ஒரு குறுகிய நேரத்தில் பகிர்வதற்கு சொல்லில் அடங்காதவை. இருப்பினும் சுருங்கக்கூறின் விளையாட்டு மைதானம். விடுதியில் நாங்கள் செய்த சிரமதானங்கள், கல்லூரி நூலகத்திலே நாங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள், காலையில் நடைபெறுகின்ற கூட்டுப்பிரார்த்தனைகள், மாதமொரு முறை ஒரு சினிமாப்படத்திற்கு ஒழுங்காக திரை அரங்கிற்கு சென்ற நினைவுகள், நடித்த நாடகங்கள், Cadeting என்று தியத்தலாவைக்குச் சென்ற நாட்கள் இன்னும் எத்தனையோ என்று நான் அடுக்கிக் கொண்டே போகலாம்.

எனது ஆசிரியர்கள், அதிபர்கள் இந்தச் சூழ்நிலைகளைத் தந்தார்கள், என்னை வளர்த்தார்கள், ஆளாக்கினார்கள். எனது பெற்றோர்களும் இவர்களோடு இணைந்து கொண்டார்கள். பல பல்கலைக்கழகங்கள் சென்றேன். பட்டதாரி ஆனேன். ஆசிரியத் தொழில் என்னைத் தேடி வந்தது. அதை நான் உதறித் தள்ளவில்லை அதை அன்போடு அரவணைத்தேன். இன்று அத்தொழிலில் இருந்து இளைப்பாறி இருக்கிறேன். எனது மனதில் ஒரு சந்தோசத்தையும் திருப்தியையும் கண்டுகொண்டு இருக்கிறேன். இளைப்பாறி 5 வருடங்கள் ஆகியும் இன்னும் பிரத்தியேகமாக கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன். கற்பித்தலில் மனம் சளைக்க வில்லை மகிழ்வோடு தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறேன். இதற்காக நான் இறைவனிற்கு நன்றி கூறுகின்றேன். எனது ஆசிரியர்களும் பெற்றோர்களும் இறைவனாக தொழிற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உண்மைதான் மாதா, பிதா, குரு, தெய்வம்.

02. விழுமியக்கல்வி எனத்தாங்கள் கருதுவது பிரச்சார ரீதியில் திணிக்கப்பட வேண்டுமா அல்லது உள்ளுறை பாங்கில் அமைய வேண்டுமா?

நான் படிக்கின்ற காலங்களிலே விழுமியங்களை பல்வேறு மட்டங்களிலே பல்வேறு கோணங்களிலே பல்வேறு நிலைகளிலே கண்டேன் ஆசிரியர்கள் கண்டிப்பாக எனது ஆசிரியர்கள் விழுமியங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள் அவர்கள்

புள்ளிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததாக எனக்கு ஞாபகம் இல்லை விழுமியக்கல்விக்காக எம் வாழ்விலே யோகாசனத்தை அறிமுகப்படுத்தினார்கள்.

ஒரு மாணவனிடம் நல்ல விழுமியங்கள் இருந்தால் அவன் நல்வாழ்வு வாழ்வான். விழுமியங்கள் ஒருவடைய மனதோடு கோர்க்கப்பட்டு பார்க்கப்படுகின்றது. ஒருவருடைய சூழல் நல்லதாக அமைந்தால் அவரிடம் நல்ல விழுமியங்களை எதிர்ப்பார்க்கலாம்.

**"எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவே எண்ணல் வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்த நல்அறிவு வேண்டும்"**

என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப நல்லசூழலை எனது பாடசாலையும் எனது வீடும் ஆக்கித்தந்தது. அதன் விளைவுகளை நான் ரசித்துக் கொண்டிருக்கின்றேன். நன்கு அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன்.

"உனது கொள்கையை சமூகத்திற்குப் போட வேண்டுமா? அதைப் பாடசாலையில் போடு. அது சமூகத்தைச் சென்றடையும்" என்றார் லெனின். எனவே ஒரு பாடசாலையின் பங்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றதென்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. எனவே ஒரு பாடசாலை நன்கு சேவை செய்ய வேண்டுமானால் நல்ல ஆசிரியர்களோடு கூடிய நல்ல தலைமைப்பண்புள்ள அதிபரைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு பாடசாலையின் முன்னேற்றத்தை அதன் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளையும், சாதாரண, உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளையும் வைத்துக் கொண்டு நாம் கணித்துவிட முடியாது. பாடசாலை மாணவர்கள் கைக்கொள்ளும் விழுமியங்கள், ஒரு பாடசாலையில் பேணப்படுகின்ற விழுமியங்கள் என்பன மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. ஒரு பாடசாலையில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை வைத்துக் கொண்டு அப்பாடசாலையின் நிகழ்வுகளில் காணப்படுகின்ற விழுமியங்களின் மூலம் அப்பாடசாலையின் விழுமியங்கள் நன்றாக வரும் போது பரீட்சைப் புள்ளிகளும் பெறுபேறுகளும் நன்றாகவே அமையும். இதுதான் நான் படிக்கின்ற காலத்திலே இருந்தது. ஆனால் இன்று துரதிஸ்ரவசமாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர்களின் துணை கொண்டு மாணவர்களும் விழுமியங்களை ஒரு கரையில் வைத்துவிட்டு வெறும் பாடங்களின் புள்ளிகளைத் துரத்துகின்றார்கள். துரத்தி முடிந்த பின்புதான் அவர்களிற்கு வேதனை விளங்குகின்றது. இதற்காக யாரை நாம் குற்றம் கூற முடியும். கல்விக் கொள்ளையிலே மாற்றம் வேண்டும். இதனை பல முறைகள் பல கல்வியியலாளர்கள் பத்திரிகையில் எழுதிவிட்டார்கள். உண்மைதான்! விழுமியங்கள், சமுதாயத்தின் விழுமியங்கள் காலத்துடன் மாறுகின்றன.

03. சுயகற்றல் எனத்தாங்கள் வலியுறுத்தும் கல்விமுறை பற்றி விரிவாகக் கூறுங்கள்?

There is no learning in the absence of self learning அதாவது சுயகற்றல் இல்லாதவிடத்து கற்றல் நடைபெறுவது இல்லை. எனவே கற்றல் கற்பித்தல் தொழிற்பாட்டில் சுயகற்றல் என்ற காரணி மிகமுக்கியமான வகிபங்கைப் பெறல்





வேண்டும். சுயகற்றல் என்பதும் சுயகட்டுப்பாடு என்பதும் மனதிலிருந்து உதிக்கின்றன. சுயகற்றலினை மேம்படுத்துவதற்கு சுயகட்டுப்பாடு மிக அவசியம். எனவே சுயகற்றலையும் சுயகட்டுப்பாட்டையும் நாம் வேறுபடுத்திப் பார்க்கமுடியாது.

**"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன.**
**மேய்ப்பாரும் உண்டாய். வெறியும் அடங்கினால்**
**பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே."**

எனவே மனக்கட்டுப்பாடு என்பதை ஒரு மாணவனின் மனதிலே நிலைநிறுத்த வேண்டுமானால் பாடசாலைகளிலே விழுமியங்கள் நன்கு வேரூன்றி இருத்தல் வேண்டும். ஒரு பாடசாலையிலேயே நல்ல விழுமியங்கள் இருப்பின் மாணவர்கள் நல்ல விழுமியங்களைக் கொண்டிருப்பார்கள். ஒரு மாணவனிடம் நல்ல விழுமியங்கள் இருக்குமேயானால் அவன் நல்ல மனக்கட்டுப்பாடுகளை கொண்டிருப்பான். அவனிடம் நல்ல மனக்கட்டுப்பாடுகள் இருக்குமேயானால் அவன் ஒரு சுயகற்றலை நன்கு கடைப்பிடிப்பவனாக இருப்பான். அவனுக்குத் தேவை ஆசிரியரின் சிறந்த வழிகாட்டலே.

கற்பித்தல் கற்றல் தொழிற்பாட்டிலே சுயகற்றல் மிகமுக்கியமான பங்கை வகிக்கின்றது. கடந்த சில வருடங்களிற்கு முன்பு இதனை உணர்த்த அரசாங்கம், பாடசாலை முறைமையிலே 5E என்ற முறையை அறிமுகப்படுத்தியது. அதில் முதலாவது E-Engagement, இரண்டாவது E-Exploration, மூன்றாவது E-Explanation, நான்காவது E-Elaboration ஐந்தாவது E-Evaluation என்பனவாகும். இந்த 5E முறைமையை பிரயோகிக்கும் போது Brain Storming (சிந்தனைக்கிளறல்) இடம் பெறுகிறது. இங்கு வாசிப்புப் பழக்கமுள்ள ஒரு மாணவன் நன்கு பிரகாசிப்பான். அவன் மற்றவர்களிற்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டாக இருப்பான் 5E முறையில் மாணவனுக்கு வாசிப்புப் பழக்கத்திற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைக்கினறது. வாசிப்புப்பழக்கமுள்ள ஒரு மாணவன் சுயகற்றலிற்கு வித்திடுகிறான். சுயகற்றல் உள்ள மாணவனுக்கு கற்பிப்பது என்பது மிகவும் இலகுவானதொரு காரியமாகும். இதை நான் எனது கற்பித்தல் தொழிற்பாட்டின் போது உணர்ந்திருக்கிறேன். அவனுக்கு வழிகாட்டினால் அவன் செயற்படுவான். வாழ்வில் உயர்ந்த நிலையைப் பெறுவான். சமுதாயத்திற்கு ஒரு சொத்து ஆவான். கல்விக்கு ஒரு நல்ல அர்த்தத்தை ஏற்படுத்துவான். எனவே சுயகற்றல் என்பது சுயகட்டுப்பாடோடு ஓர் ஆசிரியரின் நல்ல வழிகாட்டலோடு விடய ஞானங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.



துரதிஸ்ரவசமாக 5E முறைமை வெற்றி பெறவில்லை காரணம் (Exam Oriented) பரீட்சைக்கல்வி. இந்த பரீட்சை மையக்கல்வி மாணவர்களின் சுயகற்றலுக்குக் குந்தகமாகவே அமைந்திருக்கின்றது. சுயகற்றல் ஊடாக நல்ல புள்ளிகளைப் பெறலாம். ஆனால் அதற்கு சுயகட்டுப்பாடு வேண்டும், வாசிப்பு பழக்கம் வேண்டும், இன்னும் பல நற்பண்புகள் வேண்டும். இதற்கு ஒரு மாணவன் நன்கு உழைக்க வேண்டும். ஆனால் இன்று உலகம் திடீர் தோசை, திடீர் இட்டலி, திடீர் சாம்பார் என்று திடீர் சங்கதிகளை நாடிச் செல்கின்றது. இதனால் இன்று உலகம் மாறிவிட்டது. சமுதாயம் மாறிவிட்டது. எல்லாம் திடீர் மயம்.

மேலத்தேய நாட்டிலே சுயகற்றல் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. சுயகற்றல் நல்லவழி என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் எங்கள் நாட்டில் அவ்வாறு இல்லை. இதற்கான காரணம் அரசாங்கக் கொள்கையால் தங்கள் தேவைகளுக்காக தாய்மொழியைக் கொண்டு வந்தபின் விஞ்ஞானம், இரசாயனவியல், அறிவியல் போன்ற பாடங்களில் போதிய புத்தகங்கள் இல்லாமையால் ஆசிரியர்கள் Notes கொடுக்க வேண்டியதாயிற்று Notes கடந்தகால வினாக்களை அடிப்படையாகக் கொண்டு இருப்பதால் மாணவர்களின் பரந்த அறிவை மழுங்கடிக்கச் செய்கின்றது. Rate Learning ற்கு அடிமையாக Self learning தூக்கி எறியப்படுகிறது. இதனால் மாணவன் எதற்கும் தயாராக இருக்கின்றான். ஆனால் அவனது சூழலும் அதனைக் கொடுக்கின்ற ஆசிரியர்களும் இலங்கையில் உள்ள கல்வி அமைப்பும் மிக முக்கியமான பங்காக இருந்து மாணவனின் வாழ்வையே பாழாக்குகின்றது. மிகவும் பிரபல்யம் வாய்ந்த மொழியியலாளர் Noam chomsky என்பவர் கல்வி என்பது ஏற்கனவே உள்ளே இருக்கிறது. அதனை வெளிக்கொண்டு வருவதுதான் ஒரு ஆசிரியரின் பங்கு என்றார். சுவாமி விவேகானந்தரும் அதையேதான் கூறுகின்றார். கீழைத்தேய நாடுகளைப் பொறுத்த வரையிலே இந்த நிலை இப்போது இப்படி இருந்தாலும் காலப்போக்கில் சுயகற்றல் என்பது ஒரு முக்கிய பங்கை கற்றல் கற்பித்தலில் வகிக்கப்போவதை கீழைத்தேசத்திலும் காணக்கூடியதாக இருக்கும்.

04. ஆங்கிலம் மூலம் கற்றல் மற்றும் இருமொழி ஊடாகக் கற்றல் என்பவற்றிற்கு இடையே இருக்கக்கூடிய சாதக, பாதக அம்சங்களைச் சற்று விளக்குக?

வவுனியாவிலே இரண்டு தேசியப் பாடசாலைகளில் ஆங்கிலமொழி ஊடாகக் கற்கின்ற அமைப்பு இருந்தது. இங்கு அவர்கள் தமிழ்மொழி, சமயம் என்பவை தவிர்ந்த ஏனைய ஏழு பாடங்களை ஆங்கிலமொழிமூலம் கற்கிறார்கள். இது பின்னர் பல்வேறு காரணங்களிற்காக வரலாறு என்ற பாடம் தமிழ் மொழியிலேயே கற்பிக்கப்பட்டது. இந்தப்புதிய அமைப்பு Bilingual என்று கல்வி அமைச்சினால் பெயர் கொடுக்கப்பட்டது. இதற்கு அவர்கள் கொடுத்த காரணங்கள் என்னவென்றால்.


1. வரலாற்றை ஒரு மாணவன் தாய்மொழியில்தான் நன்கு விளங்கிக் கொள்வான்.
2. வரலாற்றை ஆங்கிலத்தில் கற்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை என்று கல்வி அமைச்சின் ஆய்வொன்று தெரிவிக்கின்றது.
3. எல்லாப்பாடத்தையும் ஆங்கிலத்தில் கற்றால் ஒரு இலங்கையனினது கலாசார தனித்துவம் அழிந்துவிடக் கூடுமென்ற அச்சம் ஏற்படுகிறது.





என்னைப் பொறுத்தளவில் இந்தக்காரணங்கள் வெறும் கேலிக்கூத்து போன்று இருக்கிறது. ஏனெனில் நான் ஆங்கில ஊடகத்தில் கற்று வந்தவன். நான் எனது கலாசாரத்தை இழந்துவிடவில்லை ஆங்கில மொழிமூலம் வரலாற்றைப் படித்தேன். எனக்கு வரலாறு விளங்கி இருக்கிறது. வவுனியாவைப் பொறுத்தளவில் வரலாற்றை ஆங்கிலத்தில் கற்பிப்பதில் பற்றாக்குறை இல்லை. ஆங்கில மொழி மூலம் கல்வி வவுனியாவில் இருக்கும் வரை வரலாறு நன்கே வவுனியாவில் கற்பிக்கப்பட்டது. மாணவர்களும் வரலாற்றை நன்கு விளங்கி வைத்திருக்கிறார்கள். வரலாற்றுப் பாடத்தில் சித்தியெய்திய மாணவர்களின் நூற்றுவீதம் 90% ற்கு மேலேயே காணப்படுகிறது. இது கல்வி அமைச்சின் ஆய்விற்கு முரணாகக் காணப்படுகிறது. எனவே அவர்களின் ஆய்வில் ஏதோ குறைபாடு இருக்கின்றது. அல்லது ஏதோ உள்நோக்கம் இருப்பதுபோல்தான் தெரிகிறது. எந்த மொழியில் ஒருவரிற்கு விளங்குகின்றது என்பது எந்த மொழியில் அவர் அதிகம் வாசிக்கிறார். என்பதைப் பொறுத்ததே. ஒரு தமிழர் கூடிய ஆங்கிலப்புத்தகங்களை நன்கு வாசித்திருந்தால் அவருக்கு ஆங்கில மொழியில் வரலாறு நன்கு புரியும். எந்த மொழியாக இருந்தாலும் நல்ல வாசிப்புப் பழக்கங்களை நாங்கள் மாணவர்கள் மத்தியிலே வளர்க்க வேண்டும். எனவே மாணவர்களை நாங்கள் எல்லா மொழியிலும் வாசிக்கும் பழக்கத்தை வேரூன்றச் செய்தால் எந்தவொரு மாணவனுக்கும் எதையும் விளங்கிக்கொள்வது எந்த மொழியிலும் இலகுவானதே.

வவுனியாவைப் பொறுத்தவரையில் இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் ஆங்கில மொழியில் கல்வி பயின்ற மாணவர்களிற்கென பிரத்தியேக நூலகமொன்று இருந்தது. இந்த நூலகம் அந்த மாணவர்களுக்குப் பேருதவியாக இருந்தது. அந்த மாணவர்கள் மத்தியிலே ஒரு வேறுபாட்டைக் கண்டேன். எனவே செய்ய வேண்டியவைகளை விடுத்து பாதகங்களைக் கதைத்தால் கல்வி அர்த்தமற்றதாகப் போகிறது. இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. எங்கள் நாட்டிலே உண்மையான கல்வி இல்லை. இதனால்தான் இன ஒற்றுமை இல்லை. இலங்கை மாதா கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கிறாள்.



இந்த இரத்தக் கண்ணீரை நிறுத்துவதற்கு மகாத்மா, நேரு, விவேகானந்தர் போன்றவர்கள் இனித்தான் உருவாக வேண்டும். எனவே என்னைப் பொறுத்தவரை ஆங்கில மொழிக் கல்வியால் எந்தப்பாதிப்பும் இல்லை இருமொழிக்கல்வி என்பது அரசாங்கம் தன் தேவைக்காகக் கொண்டு வந்த ஒன்று. இதில் அரசியல்தான் இருக்கிறது.

இதனைப்பற்றிக் கதைப்பதற்கு என் மனம் இடம் கொடுக்கவில்லை.

05. வவுனியா ஆங்கில சங்கமூடாக கடந்த 10 ஆண்டுகளிற்கு மேலாக தாங்கள் தங்கள் நண்பர்களுடன் ஆற்றிய பணிகளைப்பற்றி காத்திரத்தன்மை பற்றி விளக்குங்கள்.

இந்த வினாவிற்கு விடையளிக்க நான் முனைந்த போது என் கண்முன்னே English Association of Vavuniya (வவுனியா ஆங்கிலச் சங்கம்) ஒரு பாலைவனச் சோலை போன்றுதான் என்கண்முன்னே நிற்கின்றது. ஏனெனில் வடக்கில் அரசியல் காரணமாக முட்டாள்தனமாக ஆங்கிலம் புறக்கணிக்கப்பட்டது. இதனை மொழி வெறியின் அந்தம் என்று கூறலாம் வரலாற்றை நாம் திரும்பி பார்த்தால் தமிழர்கள் ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலத்தால் சுகமான வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இதுதான் யதார்த்தம். ஆனால் விடுதலை ஒன்று தேவை என்பதால் மாற்றங்களினை எல்லோரும் விரும்பினார்கள். சுதந்திரம் கிடைத்தது. அரசியல் காரணங்களுக்காக சுதந்திரம் கிடைத்ததும். அரசியல் தலைவர்கள் ஆங்கிலத்தைத் துடைத்தெறிய முனைந்தார்கள். நாட்டிற்கு நன்மையென நினைத்தார்கள். அது பிள்ளையார் பிடிக்க குரங்காய் முன்வந்தது. ஆங்கிலம் இலங்கையில் இருந்து துரத்தியடிக்கப்பட்டது. இந்தியா அந்த முட்டாள் வேலையைச் செய்யவில்லை. காலம் மாறியது. ஆங்கிலத்தின் தேவை எல்லோராலும் உணரப்பட்டது.

வவுனியாவைப் பொறுத்தளவில் ஆங்கிலத்தின் தேவைகருதி அதன் முக்கியத்துவம் கருதி சிலசமூக ஆர்வலர்களின் உதவியுடன் Dr.Shriganeshan அவர்களின் உதவியுடன் English Association of Vavuniya உருவாகியது. எனவேதான் அது பாலைவனச் சோலையாகத் தெரிகிறது. இந்தச் சங்கம் வவுனியாவிலே ஆங்கிலத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பல்வேறு சஞ்சிகைகளை பலசொற்பொழிவுகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. வவுனியாப் பாடசாலைகளிற்கு உறுதுணையாக இருந்திருக்கிறது. இது வவுனியாவிற்கு வரப்பிரசாதம் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. இச்சங்கத்தால் ஆளுமை பெற்றோர் ஏராளம். இச்சேவை மென்மேலும் வளர வேண்டுமென இறைவனை வேண்டி இச்சங்கம் வாழ இறைவனிடம் கையேந்துகின்றேன்.

Ø

வவுனியா வடக்கு பிரதேச செயலக கலாசார மலர் 2012



வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரியின் 16வது ஆண்டு மலர் 2010



யாழ் திருமறைக்கலாமன்ற சஞ்சிகை 2012








# வட்டத்தின் ஆங்கில கல்விச் செல்வர் விருதுபெறும் திரு.சுப்பிரமணியம் சிவபாலன்

- சங்கரன் செல்வி -



இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணம் காரைநகர் ஊரைப் பூர்வீகமாகக் கொண்ட சுப்பிரமணியம் சிவபாக்கியம் தம்பதியினருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்த சிவபாலன் (25.09.1948) வவுனியா மாவட்டத்தின் மாமடுவ எனும் கிராமத்தில் தமது பிள்ளைப் பராய வாழ்க்கையை தொடங்கினார். மூன்று சகோதரர்களுடனும் ஒரு சகோதரியுடனும் உபதபால் அதிபராக விளங்கிய தந்தையுடனும் அன்பு பாராட்டும் தாயுடனும் சிங்கள மக்களுடனான அன்புச் சூழலில் கட்டுண்டு, இலங்கைத் திருநாட்டின் இலட்சியக் குடும்பமாக சுப்பிரமணியம் குடும்பத்தில் வாழ்ந்து வந்தார். இதனால் திரு.சிவபாலன் தமது ஆரம்பக்கல்வியை மாமடுவ அரசினர் பாடசாலையில் பெற்றுக் கொண்டார்.

திரு.சிவபாலன் தமது கல்வியை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும், இடைநிலைக்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பெற்றதுடன் அக்காலத்தில் பெயர் பெற்ற ஆளுமை மிக்க நல்லாசிரியர்களின் வழிகாட்டலையும் பெற்றுக்கொண்டார். கணித ஆசிரியர் நாராயணசாமி விடுதிப் பொறுப்பாசிரியர் கடவுள் சுப்பிரமணியம், உப அதிபராகவும் அதிபராகவும், மிளிர்ந்த கணித ஆசிரியர் சி.சபாரத்தினம் ஆங்கில ஆசிரியரும் பின்னாள் ஈழநாடுபத்திரிகை ஆசிரியருமாகிய என்.சபாரத்தினம், ஆங்கில ஆசிரியரான கம்யூனிஸ்ட் கார்த்திகேசன், விளையாட்டு ஆசிரியர் தியாகராஜா, கடேற் அணிப் பொறுப்பாசிரியர் சோமசுந்தரம் மற்றும் உதவி விடுதிப் பொறுப்பாசிரியர் நமசிவாயம். ஆகிய பெருந்தகைகளை நினைவு கூரும் திரு.சிவபாலன் தனது யாழ் இந்துக் கல்லூரி விடுதி வாழ்வு தந்த கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பன தொடந்தும் தமது வாழ்வை சீர் செய்யும் வாழ்வினால் முறையாக உள்ளது எனக் குறிப்பிடுகின்றார்.

பாடசாலைக் கல்வி வாழ்க்கையில் பெற்ற, மகாத்மாகாந்தி, சுவாமி விவேகானந்தர், வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூர் ஆகியோரின் சிந்தனைகளும், வாழ்வியல் முறைகளும், கவியூற்றுகளும் தன்னை ஷித்ததாகவும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிச்சிந்தனைகளும் தம்மீது செல்வாக்குச் செலுத்தியதாகவும் எடுத்தியம்பும் சிவபாலன் அவர்கள்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
எனும் பாரதி வரிகளையும்,

**Arise, awake**
**and stop not**
**until the goal is achieved**

"எழுந்திரு, விழித்திரு பேறு பெறும் வரை ஓயாதே" எனும் விவேகானந்தர் சிந்தனைகளையும் தமது மனைவாசலில் எழுதிவைத்து தம்மிடம் வரும் மாணவர்க்கும் அதனை வெளிப்படுத்துவதில் இன்பம் காண்பார். தாகூரின் இயற்கைச் சூழலில் கல்வி பயிற்றுவித்தல் எனும் கல்விச் சிந்தனைக்கு ஏற்ப சாந்திநிகேதன் என தனது இல்லத்துக்கு பெயர் சூட்டி அதனை ஒரு கல்விச்சாலையாகவே மாற்றியுள்ளார். சிறந்த நூல்கள் அடங்கிய நூலகம், கணினியுடனான செயற்பாட்டு வரவேற்பறை, வவுனியா குளத்தை ஒரு புறமாகக் கொண்ட மரங்கள் அடந்த சோலையாகவும், பறவைகள் ரீங்கார கானம் இசைக்கும் சாலை யாகவும் அமைந்த ஒரு சூழலில் தமது சாந்திநிகேதனை அமைத்துள்ளார்.

Education is the manifestation of the perfection already in man எனும் விவேகானந்தரின் தத்துவத்தையும், மொழியியலாளர் Noam Chomsty இன் Education is within : derive out of எனும் கருத்தியலையும் ஒரே சேரக் காணும் சிவபாலன் தனது பேராதனைப் பல்கலைக்கழக B.Sc பட்டப்படிப்பையும் தொடர்ந்து தான் பங்குகொண்ட ஆங்கிலத்திலான பட்டமேற்படிப்பு டிப்புளோமா, அதன் விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள், களனிப் பல்கலைக்கழகத்தில் பின்பற்றிய மொழியியலிலான M.A.கல்விநெறி, திறந்த பல்கலைக்கழக பட்டமான கல்வியியலிலான பட்ட மேற்படிப்பு டிப்புளோமா என்பவற்றின் அடிச்சுவடா மேற்படி வாசகங்களே அமைகின்றன என முத்தாய்ப்புடன் கூறினார்.

1960க்கு முற்பட்ட இலங்கையில் அமுலில் இருந்த ஆங்கில மூலத்திலான கல்வி பின்னாளில் ஒரு விஞ்ஞான ஆசிரியராக மன்னார் வங்காலை மகாவித்தியாலயத்திலும், முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியிலும் (5வருடங்கள்) தூய கணிதம், பிரயோக கணிதம், இரசாயனவியல் பௌதீகவியல் போன்ற பாடங்களை வேறு ஆசிரியர் இல்லாத நிலைமையில் படிப்பித்து பல பொறியியலாளர், மருத்துவர் மற்றும் பட்டதாரிகள் உருவாக்கக் காரணமாக இருந்தது.

தமது 40களில் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திற்கு மாற்றலாகி வந்து 87/88களில் அதன் அதிபராகவும் உயர்ந்தார். நிர்வாகப் பணி தனது கல்விப்பணியின் மூச்சைக் குறைத்துவிடும் என எண்ணி பத்து ஆண்டுகள் மாலைதீவுப் பாடசாலைகளில் ஆங்கிலமொழி மூலத்திலான கல்விப்பணியை மேற்கொண்டு தாயகம் திரும்பினார்.

மீண்டும் தமிழ் மத்திய மகாவித்தியாலயம் காமினி மகாவித்தியாலயம், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி என அரச கல்விப் பணியில் ஈடுபட்டதுடன். சேக்ஸ்பியர் நாடகங்களை மாணவர்க்கு பழக்குவதில் ஆர்வம் காட்டினார். 2002ம் ஆண்டு இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் ஆங்கிலமொழி மூல இடைநிலைக் கல்வியை அந்நாள் அதிபர் வண.சகோ.எம்.எம்.மடுத்தீன் ஆரம்பிக்க விழைந்தபோது திரு.எஸ்.சிவபாலனிடம் அப்பணி வழங்கப்பட்டது. வெறுமனே ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது எனும் நிலைப்பாட்டிலும், Spoonfeeding கரண்டியால் தீத்தல் எனும் எண்ணக்கருவுக்கு எதிரான சுயகற்றல் நெறிக்கு மாணவரை வழிப்படுத்தும் முறைகளை மாணவர் மத்தியில்





அறிமுகப் படுத்திவெற்றியும் கண்டார். ஆங்கிலத்தில் பேச்சுத் தொடர், பிள்ளைகள் குழுநிலையில் தலைமை தாங்குதல், கவிதை வாசிப்பும் வியாக்கியானமும், கதை சொல்லல், நாடகப் பட்டறையூடு ஆங்கிலப்பேச்சு (கலாநிதி க.ஸ்ரீகணேசன் உதவியுடன்), சஞ்சிகை ஆக்கமும் வெளியீடும் (Learner Digest) போன்ற செயற்பாடுகளை உருவாக்கினார். மேலும் சிந்தனைக் கிளறல் (Brain Storming) எண்ண உருவாக்கம் (Mind Mapping) 5நு முறைமை (1. Engagement, 2. Exploration, 3. Explanation, 4. Elaboration, 5. Evaluation) Self Learning எண்ணக்கருவை செயற்பாடுகள் ஊடாக வழிப்படுத்தினார். இதன் பலாபலன்களை கடந்த ஐந்து ஆண்டுகளாக இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவர்களின் 100% பெறுபேற்றில் கண்டுகொள்ளலாம். மேலும் மாணவர்களின் ஆங்கில பேச்சுத்திறமை காரணமாக பல்கலைக்கழகங்கள், வங்கிகள், கம்பனிகளில் அவர்களின் நுழைவும், சாதனைகளும் சாட்சியாக நிற்கின்றன.

2006 அளவில் வலய மட்டத்தில் ஆங்கில மூலக்கல்வி வளவாளர் ஆகவும் காட்டுமாங்குளம் வித்தியாலயம் சிங்கள மாணவர்களுக்கு உற்சாகமூட்டும் கல்வியாளராகவும் திகழ்ந்து, சமூக ஒருமைப்பாடு, சமூக இசைவு, இனஉறவு எனும் பல்வேறு சிந்தனைகளுக்கு ஒரு நடைமுறை இலக்கியமாக இயங்கி வந்தார்.

2008இல் இளைப்பாறிய காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக டிப்புளோமா கற்கைநெறிமாணவர்களுக்கு ஆங்கில இலக்கியம் ஆங்கில எழுத்துதிறன் பாடங்களை செவ்வனே போதித்ததோடு க.பொ.த.சாதாரணதரம், உயர்தரம் வகுப்புகளுக்கு உரிய ஆங்கில இலக்கிய பாடங்களையும் மாணவர்க்கு அறிமுகப்படுத்தினார். வவுனியா ஆங்கில சங்கத்தின் ஊடாக சமூக மட்டத்தில் பல்வேறு கருத்தரங்குள் நாடக மேடைஏற்றங்கள், நூல்வெளியீடுகள் செய்வதற்கு ஒத்தாசை வழங்கினார்.

Nurses WelFare Society ஊடாகவும் Chamber Acadamy ஊடாகவும் English Association of Vavuniya உடனும் இணைந்து 100க்கு மேற்பட்ட Talk Series நடாத்தி மாணவர்களின் பேச்சுப்பயிற்சியை வளப்படுத்தி வருகிறார். Oasis சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் Learners Digest இன் Guide ஆகவும் செயற்படும் திரு.சிவபாலன் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.V.R.A.ஒஸ்வோல்ட் எழுதிய கல்விசார் சிறு நூல்களைத் தொகுத்து ஆங்கிலத்தில் உருவாக்கி Towards an Efficient Education System எனும் நூலை 2009 இல் English Association of Vavuniya ஊடாக வெளியிட்டார்.

வைரவபுளியங்குளத்தில் ஏற்றமுற வாழ்ந்து வந்த திரு.திருமதி. தியாகராசா, செல்வரத்தினம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியான அம்மணி சாந்தி அவர்களை திருமணம் புரிந்து இருபுத்திரர்களையும் பெற்று சிறப்புற வாழ்ந்து கல்விப்பணி ஆற்றி வரும் வேளையில் காலச்சக்கர ஓட்டத்தில் இளைய மகனை இழந்தபோதும் 'புனிதபயணம்' எனும் சிறப்புறு நூல்ஒன்றை ஆக்கி உலகுக்கு அளித்தார். மூத்தமகன் பெருமைமிக்க கம்பியூட்டர்துறை நிபுணர் ஆக சிறப்புப் பெற்றுள்ளார். **மானுடம் வெல்லும்** எனும் நாடகத்தின் மூலம் சமய சமூக ஒற்றுமையை வலியுறுத்தி எல்லோருக்கும் முன்னுதாரணமாகத் திகழும் **திரு.சுப்பிரமணியம் சிவபாலன்** அவர்கட்கு **ஆங்கிலகல்விச் செல்வர்** எனும் விருது வழங்கி வட்டம் பெருமை கொள்கிறது.

# வட்டத்தின் மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வுகள்.

- நந்தா -

**நிகழ்வு - 142**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் நிகழ்வு 142 ஆனது 08.01.2012 காலை 11.00 மணிக்கு நடைபெற்றது. செல்வி.து.நந்தீஸ்வரி எழுதிய உயிர்க்கும் விழுதுகள் கவிதைத்தொகுப்பு நூல் பற்றிய கருத்தாடலை யாழ் பல்கலைக் கழக ஆங்கிலமொழிக் கற்பித்தல் மைய சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் தொடக்கி வைத்தார். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திரு.எம்.சூசைதாசன் அவர்கள் ஆய்வுரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது.

**நிகழ்வு - 143**

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திரு.ம.நிரேஸ்குமார் எழுதிய "இவர்களும் யதார்த்தவாதிகள் தாம்" எனும் சிறுகதைத் தொகுப்பு நூலின் அறிமுக விழாவானது 07.02.2012 முற்பகல் 10.00 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க நடராசர் மண்டபத்தில் நடைபெற்றது. அறிமுகவிழாவிற்கு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு அதிதியாக மலையகத்தின் மூத்த எழுத்தாளர் திரு.மு.சிவலிங்கம் அவர்கள் கலந்து கொண்டார். நூலாசிரியர் பற்றிய அறிமுகத்தினை, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி.நெலோமி அன்னி குரூஸ் அவர்கள் வழங்கினார். நூல் அறிமுகத்தினை கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் நிகழ்த்தினார். வவு.தே.க.க.விரிவுரையாளர். திரு.ந.பார்த்தீபன் அவர்கள் ஆய்வுரையினை நிகழ்த்தினார்.

**நிகழ்வு - 144**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்சங்க கலாசார மண்டபத்தில் 06.04.2012 அன்று காலை 10.00 மணிக்கு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திரு.ந.பார்த்திபன் அவர்களின் தலைமையில் கருத்தாடல் நிகழ்வு நடைபெற்றது. கவிச்சரம் இதழ்- 4 பற்றிய விமர்சன உரையினை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய மாணவி செல்வி கு.சயந்தி அவர்கள் நிகழ்த்தினார். "குறும்படம், குறுந்திரைப்படம் ஒரு கண்ணோட்டம் " எனும் தலைப்பில் திரு.அ.ஜெயச்சந்திரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

**நிகழ்வு - 145**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்சங்க கலாச்சார மண்டபத்தில் 05.05.2012ம் திகதி சனிக்கிழமைகாலை 10.30 மணிக்கு கலாநிதி அகளங்கன் (வ.க.இ.ந.வ.தலைவர்) தலைமையில் செல்வன். ஜோசப் மனோகரன் தமிழ் மொழி வாழ்த்திசைக்க, திரு.மாணிக்கம் ஜெகனின் வரவேற்புரையைத்தொடர்ந்து இனிதே ஆரம்பமாகியது.





தலைமையுரையைத் தொடர்ந்து முதல் நிகழ்வாக ஞானம் சஞ்சிகை அறிமுகம் இடம்பெற்றது. அறிமுக உரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆங்கிலக்கல்வி விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் வழங்குவதாக இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் அவர் கலந்து கொள்ளவில்லை. ஆதலால் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார் அதனைத் தொடர்ந்து கவிச்சரம் இதழ் 5 வெளியிட்டு வைக்கப்பட்டது.

மாதந்தோறும் பௌர்ணமி நிகழ்வுகளை வட்டம் நிகழ்த்தியிருந்தாலும், தமிழ் மொழியின் மகத்துவத்தை பல்வேறு கோணங்களில் ஆராய்ந்திருந்தாலும். இந் நிகழ்வு மிகமிக வித்தியாசமானது. மகோன்னதமானது ஏனெனில் கொழும்பு தமிழ்ச் சங்க செயலாளர் டாக்டர் T.ஞானசேகரன், கொழும்பு தமிழ்ச்சங்க உப தலைவர்கள் டாக்டர் ஜின்னாஹ்ஷரிபுத்தின், சட்டத்தரணி ஜி.இ.ராஜகுலேந்திரா முதலியோர் கலந்து கொண்டு உலகத்தமிழ் மாநாடு பற்றிய பல விடயங்களை பகிர்ந்து கொண்டனர்.

கொழும்பு தமிழ்ச்சங்கம் தனது 70ம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இவ்வாண்டு ஜீன் மாதம் 2ம்,3ம், 4ம் திகதிகளில் உலகத்தமிழ் இலக்கிய மாநாடு ஒன்றை தமிழ் இலக்கியமும், சமூகமும்- இன்றும்,நாளையும்" என்ற தொனிப்பொருளில் நடத்தவுள்ளதாகவும் ஆயவரங்குகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் எனவும் ஞானம் சஞ்சிகையின் ஆசிரியரும் கொழும்பு தமிழ்ச்சங்க செயலாளருமாகிய டாக்டர் T.ஞானசேகரன் அவர்கள் தெரிவித்தார். நிகழ்விற்கு கலைஞர்களும் ஆர்வலர்களும் பேராளர்களாக, கலந்து நிகழ்வை சிறப்பிக்குமாறும். மாநாட்டில் சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நிறைந்த கலைஞர்களும் கலை ஆர்வலர்களும் கலந்து கொண்ட இன்றைய பௌர்ணமி நிகழ்வில் டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தின் உரையாற்றும் போது இவ்வாறான தொரு நிகழ்வில் தான் கலந்து கொண்டமையை பெரும் பாக்கியமாகக் கருதுவதாக குறிப்பிட்டார் வவுனியா மண் நல்லதொரு தமிழறிஞரைப் பெற்றிருப்பதாக கலாநிதி அகளங்கன் அவர்களைப் பாராட்டினார். அவர்வழி நாமும் கலைப்பணிசெய்வதில் பெருமகிழ்ச்சியும் திருப்பதியும் அடைகிறோம்.

எங்கெல்லாம் தமிழன் வாழ்ந்து கொண்டிருக்கிறானோ அங்கெல்லாம் தமிழ் வாழ்ந்து கொண்டிருக்கிறது. என்ற சட்டத்தரணி ஜி. இராஜகுலேந்திரா அவர்களின் உரையைத் தொடர்ந்து இலக்கியம் சம்பந்தமான கருத்துப்பரிமாறல்களுடன் கவிஞர் தனசீலன் (வ.க.இ.ந.உபசெயலாளர்) நன்றியுரை வழங்க பி.ப 1.00 மணியளவில் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

**நிகழ்வு - 146**

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திரு.ந.பார்த்திபன் அவர்களின் தலைமையில் 04.06.2012 காலை 10.00மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்சங்க கலாசார மண்டபத்தில் கருத்தாடல் நிகழ்வு நடைபெற்றது. வவுனியாவின் பாரம்பரியமும். பண்பாடும் எனும் தலைப்பில் ஓய்வு பெற்ற பிரதம

இலிகிதர் திரு.நா.தியாகராசா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். வவுனியாவின் நிலவளமும், நீர் வளமும் எனும் தலைப்பிலே புவியியல் சார்ந்த அறிவினை மையமாகக் கொண்டு. வவுனியா வின் காணிப்பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர் திரு.சி.சிவராஜா அவர்கள் வவுனியாவின் தரைத்தோற்ற அமைப்பைப்பற்றியும், வவுனியாவின் நீர்வளம் பற்றியும் துறைசார்ந்த அனுபவத்துடன் வழங்கிய கருத்துரை பலராலும் விபரிக்கப்பட்டு பாராட்டப் பட்டது குறிப்பிடத்தக்கதாகக் காணப்பெற்றது.

**நிகழ்வு - 147**

வவுனியூர் இரா.உதயணன் அவர்களின் நிதி உதவியுடன், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தயாரிப்பில் உருவாகி தமிழியல் விருது பெற்ற "ஏடு" குறும்படம் ஒரு கண்ணோட்டம் எனும் தலைப்பில் 01.08.2012 அன்று காலை 10.00 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெற்றது கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் "ஏடு" குறும்படக் காட்சி காண்பிக்கப்பட்டு விமர்சனம் நடைபெற்றது. பெரிய கோமரசங்குளம் ம.வி ஆசிரியர் திரு.சி.வரதராஜன் அவர்கள் கருத்தாடலைத் தொடக்கிவைத்தார்.

**நிகழ்வு - 148**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் 31.08.2012 காலை 10.00மணிக்கு வவுனியா விபுலாநந்தாக் கல்லூரியின் ஆசிரியர் திரு.கந்தையா ஸ்ரீ கந்தவேள் அவர்களின் தலைமையில் மாதாந்த முழு நிலைக் கருத்தாடல் நிகழ்வு நடைபெற்றது. செல்வன் ஜோசப்.மனோகரன் அவர்கள் கவிஞர் கலாநிதி அகளங்கள் அவர்கள் இயற்றிய தமிழ்மொழி வாழ்த்தினை இசைத்தார். அண்மையில் அமரத்துவமடைந்த வட்டூர்க் கவிஞர், அமரர்.கதிர்.சரவணபவன் அவர்களுக்கான அஞ்சலி உரையினை கலாநிதி தமிழ்மணிஅகளங்கன் அவர்கள் நிகழ்த்தினார்.

ஆகஸ்ட்டு மாதத்தில் பிறந்தநாளைக் கொண்டாடிய திரு.ப.எ.அன்ரன் அவர்களுக்கும், திரு.கந்தையா ஸ்ரீகந்தவேள் அவர்களுக்கும் பிறந்தநாள் கவி வாழ்த்துக்கள் இசைக்கப்பட்டன. "சிறுவர் துஷ்பிரயோகம்" எனும் கருத்தாடல் தலைப்பில் திரு.மாணிக்கம் ஜெகன் அவர்கள் உரையாற்றினார். வவுனியா சிறுவர் அபிவிருத்தி மேம்பாட்டு உத்தியோகத்தர் திரு.T.கெனடி அவர்கள் கருத்தாடலைத் தொடக்கி வைத்தார். கருத்தாடல் நிறைவு உரையினை வவுனியா உள சமூக இணைப்பாளர் திரு.S.நந்தசீலன் அவர்கள் நிகழ்த்தினார்.

**நிகழ்வு - 149**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்சங்க கலாசார மண்டபத்தில் 29.09.2012 காலை 10.00மணிக்கு கலாநிதி தமிழ்மணி அகளங்கள் அவர்களின் தலைமையில் மகாகவி பாரதியாரின் பெண் விடுதலை எனும் தலைப்பிலே கருத்தாடல் நடைபெற்றது. வரவேற்புரையை ஆசிரியை கஜரதி பாண்டித்துறை அவர்கள் நிகழ்த்தினார். தொடக்கஉரையினை வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி.நெலோமி அன்ரனி குருஸ் நிகழ்த்த சிறப்புஉரையினை ஆசிரிய ஆலோசகர் கவி எழில் திருமதி.த.நிறைமதி அவர்கள் வழங்கினார். நிறைவுரையினை பண்டிதை செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம் அவர்கள் நிகழ்த்தினார்.





மகாகவி பாரதியார் பற்றிய கவிதைகளை கவிஞர் குரும்பையூர் த.ஐங்கரன் அவர்களும் கவிஞர் மாணிக்கம் ஜெகன் அவர்களும் கவிஞர் ப.எ.அன்ரன் அவர்களும் வழங்கினார்கள்.

இம் மாதம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடிய சிவநெறிப் புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி அவர்களை வாழ்த்தி கவி வாழ்த்துக்கள் இடம் பெற்றது.

**நிகழ்வு - 150**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்சங்க நடராஜர் மண்டபத்தில் 29.10.2012 காலை 10.00 மணிக்கு வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் திரு.ந.பார்த்திபன் அவர்களின் தலைமையில் ஈழத்தின் சமகால கலை இலக்கியச் சஞ்சிகைகள் பற்றி வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிமனையில் பணிபுரியும் திரு.ச.அருண்மொழி வேந்தன் B.A அவர்கள் அறிமுக உரையினை நிகழ்த்தினார். விமர்சன உரையினை விரிவுரையாளர் திரு.ந.பார்த்திபன் அவர்கள் வழங்கினார்.

**நிகழ்வு 151**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் 27-11-2012ல் கவியரசு கண்ணதாசனின் திரையிசைப் பாடல்கள் என்ற தலைப்பிலான கருத்தாடல் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திரு.பொ.சத்தியநாதன் தொடக்கவுரையாற்றினார். இத் தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன் அவர்கள் சிறப்புரையாற்றினார். நிறைவுரையை திருமதி.புவனநாயகி ஐயம்பிள்ளை அவர்கள் (ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம்) நிகழ்த்தினார். வரவேற்றுரை திரு.ந.ஜெனன் தமிழ் வாழ்த்து செல்வன் ஜோசப் மனோகரன் நன்றியுரை திரு.ச.அருண்மொழிவேந்தன்.

**நிகழ்வு 152**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் 29.12.2012 இல் நடைபெற்றது. (முழுநிலா முடிந்த இரண்டாம் நாள்) ஞானம் சஞ்சிகையின் 150 ஆவது இதழ் அறிமுக நிகழ்வாக இது அமைந்தது. தலைமை கலாநிதி தமிழ்மணி அகளங்கன். வரவேற்புரை திரு.ச.அருண்மொழிவேந்தன். தொடக்க உரை திரு.சு.ஜெயச்சந்திரன். சிறப்புரை ஞானம் ஆசிரியர் டாக்டர்.வு.ஞானசேகரன். அறிமுகஉரை திரு.ஞா.பலச்சந்திரன். நன்றியுரை திரு.மாணிக்கம் ஜெகன்.

Ø

# 2012இல் வவுனியாவில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள் சில

- த.பிரதாபன் -

**01. தைப் பொங்கல் விழா (22.01.2012)**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகமும், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமும் இணைந்து சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நடாத்தின. தலைமை திரு.நா.சேனாதிராசா.ச.நீ. (தலைவர் சு.இ.இ.சங்கம்) பிரதம விருந்தினர் திருமதி.P.S.M.சாள்ஸ். அரசாங்க அதிபர் சிறப்பு விருந்தினர்கள் திரு.ந.திருஞானசம்பந்தர் (மேலதிக அரசாங்க அதிபர்) திரு.அ.சிவபாலசுந்தரன் (பிரதேச செயலாளர் - வவுனியா) திரு.க.பரந்தாமன் (பிரதேச செயலாளர் - வவுனியா வடக்கு) திரு.N.கமலதாசன் (பிரதேச செயலாளர் - செட்டிகுளம்) திரு.S.ஜானக (பிரதேச செயலாளர், வவுனியா தெற்கு))

**02. நிருத்திய ஸ்ருதி 2ம் ஆண்டு நிறைவு விழா (11.02.2012)**

வவுனியா நிருத்திய ஸ்ருதி நாட்டிய கலாலய 2ம் ஆண்டு நிறைவு விழா (11.02.2012) வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. தலைமை செல்வி.தர்ஷிகா செல்வராஜா. பிரதம விருந்தினர் திருமதி.பி.எஸ்.எம். சாள்ஸ் (அரசாங்க அதிபர் வவுனியா)

**03. கடற்கரைப் பூவரசு - வண்ணக் கனவு (10.03.2012)**

கவிஞர் ஆரணி (அ.சிவபாலசுந்தரன் பிரதேச செயலாளர் வவுனியாவின் கடற்கரைப் பூவரசு (கவிதைக் கதம்பம், வண்ணக் கனவு, சிறுவர் பாடல் ஆகிய இரு நூல்களின் வெளியீடு 10.03.2012ல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. தலைமை கலாநிதி.தமிழ்மணி அகளங்கன்.

**04. மலரும் நினைவுகள் (31.03.2012)**

திரு.பொன் சந்திரசேகரி அவர்களின் "மலரும் நினைவுகள்" (சுயசரிதை) நூல் வெளியீட்டு விழா வவுனியா றோயல் கார்டின் மண்டபத்தில் 31.03.2012ல் நிகழ்ந்தது. தலைமை கலாநிதி தமிழ்மணி அகளங்கன் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக திரு.மாவை.சேனாதிராசா (பா.உ.யாழ்ப்பாணம்) திரு.சிவசக்தி ஆனந்தன் (பா.உ.வன்னி) திரு.எஸ்.என்.ஜி.நாதன் (முன்னாள் நகரபிதா - வவுனியா) திரு.ஜி.ரி.லிங்கநாதன் (முன்னாள் நகரபிதா வவுனியா) ஆகியோரும். திரு.நா.சேனாதிராசா, திரு.க.ஜயம்பிள்ளை, திரு.அருணா செல்லத்துரை, திரு.இ.பாலமனோகரன் (நிலக்கினி ஆசிரியர்) முதலானோரும் கலந்து கொண்டனர்.

**05. வ/நிருத்திய நிகேதன கலைவிழா (08.04.2012)**

வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி (நெளுக்குளம், பூவரசங்குளம்) மாணவர்களது கலை நிகழ்வுகள் 08.04.2012ல் திருமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்களது தலைமையில் வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினர் திரு.அ.சிவபாலசுந்தரன் (பிரதேச செயலாளர் வவுனியா,





ஆடற் செல்வன்.சுஜேந்திரன் அருந்தவ நாயகத்தின் மாணவர்களின் நிகழ்ச்சி.

**06. சேக்கிழார் விழா (03.06.2012)**

வவுனியா சேக்கிழார் மன்றத்தின் சேக்கிழார் விழா 03.06.2012ல் சிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் திரு.க.ஜயம்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது பிரதம விருந்தினர். திரு.அ.சிவபாலசுந்தரன் (பிரதேச செயலாளர் - வவுனியா)

**07. திரு.மு.சிற்றம்பலம் அவர்களின் பாராட்டுவிழா (24.06.2012)**

வவுனியாவின் மூத்த சட்டத்தரணி திரு.மு.சிற்றம்பலம் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா 24.06.2012ல் வவுனியா றோயல் கார்டின் மண்டபத்தில், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற ஆணையாளர் மாண்புமிகு J.விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினர்களாக உயர்நீதி மன்ற நீதியரசர் மாண்புமிகு நீதியரசர் S.சிறீபவன் அவர்களும் மேன்முறையீட்டு நீதி மன்ற தலைமை நீதியரசர் மாண்புமிகு நீதியரசர் S.சிறீஸ்கந்தராஜா அவர்களும் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக இலங்கையின் அனைத்து தமிழ் நீதிபதிகளும் ஏராளமான சட்டத்தரணிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர். வவுனியா மாவட்ட வரலாற்றில் மிகமிக முக்கியமான நிகழ்வாக இது கருதத்தக்கது.

**08. வேல் ஆனந்தனின் தாண்டவ உதயம் (03.07.2012)**

நாட்டியப் பேராசான் வேல் ஆனந்தனின் தாண்டவ உதயம் நடன நிகழ்வு 03.07.2012ல் நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது தலைமை திரு.அ.சிவபாலசுந்தரன் (பிரதேச செயலாளர்)

**09. அம்மா குறும்பட வெளியீடு (02.09.2012)**

வவுனியா திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் த.பிரதாபனின் கதை, திரைக்கதை, வசனம், பாடல், படப்பிடிப்பு, படத்தொகுப்பு இயக்கத்தில் உருவான அம்மா குறும்பட வெளியீடு 02.09.2012ல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்சங்க கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. தலைமை, கலாநிதி தமிழ்மணி அகளங்கன் பிரதம விருந்தினர் திரு.அ.சிவபாலசுந்தரன் (பிரதேச செயலாளர் வவுனியா)

**10. தந்தை செல்வா ஒரு காவியம் (23.09.2012)**

திரு.இரா.சுப்பிரமணியம் எழுதிய தந்தை, செல்வா ஒரு காவியம் நூல் வெளியீடு 23-09-2012ல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. தலைமை S.N.G.நாதன் (முன்னாள் நகரபிதா) திரு.மாவை.சேனாதிராசா, திரு.ஆனந்த சங்கரி, திரு.பொன் ராதா கிருஷ்ணன் முதலான பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**11. இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு (29.09.2012)**

இந்நூலின் வெளியீட்டு விழா வ/சுத்தானந்த இந்து இளைஞர்சங்க கலாசார மண்டபத்தில் 29.09.2012ல் நடைபெற்றது. J.P.லூயிஸ் எழுதிய A Manual of the Vanni Districts என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு நூலாக இது வெளிவந்தது. தலைமை திரு.க.ஜயம்பிள்ளை. இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட முன்னாள் அரசாங்க

அதிபர் களான திரு.K.C.லோகேஸ்வரன், திரு.T.லங்காநேசன், திரு.சி.தில்லைநடராசா, திரு.க.கணேஸ் ஆகியோரும் சிரேஷ்ட சட்டத்தரணி திரு.மு.சிற்றம்பலம் அவர்களும் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இதுவும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகும்.

**12. நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி 18 ஆண்டு (07.10.2012 - 14.10.2012)**

வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் 18வது ஆண்டு கலை விழா 07-10-2012, 14-10-2012 ஆகிய இரு தினங்களில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. 07ம் திகதி நிகழ்விற்கு கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக வடமாகாண கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்திய சீலன் கலந்து கொண்டார்.

14ந் திகதி நிகழ்விற்கு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி.இமெல்டா சுகுமார் கலந்து கொண்டார்.

**13. வவுனியா பிரதேச இலக்கியவிழா 2012 (08.11.2012 - 9-11-2012)**

8ந் திகதி காலை, 9ந் திகதி மாலை என இரு நிகழ்வுகளாக இவ் இலக்கியவிழா வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. 8ந்திகதி காலை நிகழ்விற்கு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமைவகித்தார் பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் திரு.M.K.பந்துவ ஹரிஸ்சந்திர கலந்து கொண்டார். 9ந் திகதி மாலை நிகழ்விற்கு திரு.அ.சிவபாலசுந்தரன் (பிரதேச செயலாளர்) தலைமை வகித்தார் பிரதம விருந்தினர் கௌரவ அமைச்சர் றிசாட் பதியுதீன் (பா.உ) தொழில் மற்றும் வணிக அமைச்சு (சமூகமளிக்கவில்லை.)

**14. மாவட்ட கலை இலக்கிய விழா (04.12.2012)**

வவுனியா மாவட்ட கலை இலக்கிய விழா 04.12.2012 காலை மாலை என இரு நிகழ்வுகளாக நடைபெற்றது காலை நிகழ்விற்கு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதியின் சார்பில் உபபீடாதிபதி திரு.கு.சிதம்பரநாதன் கலந்து கொண்டார்.

மாலை நிகழ்வுக்கு வவுனியா அரச அதிபர் திரு.M.K.பந்துல ஹரிஸ்சந்திர தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக கைத்தொழில் வணிக அமைச்சர் கௌரவ அப்துல் றிஸாட் பதியுதீன் (பா.உ) கலந்து கொண்டார். இந்நிகழ்வில் 40 வயதிற்குட்பட்ட 25 தமிழ் சிங்கள முஸ்லிம் கலைஞர்களுக்கு இளங்கலைச் சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

**15. வவுனியா தமிழ்ச் சங்கம் நடாத்திய சில நிகழ்வுகள் :**

1. நால்வர் விழா 2. திருமூலர் விழா 3. முத்தமிழ் விழா
4. உளநல மருத்துவர் சிவதாஸ் எழுதிய நூல்களின் அறிமுகம்.
5. பாரதி விழா





# வாழ்த்துகிறோம்

**தேசிய சாகித்திய விருது 2012**

**தனது கருவறையிலிருந்து என்ற நாடக நூலுக்காக தேசிய சாகித்திய மண்டல விருது பெற்ற திரு.கந்தையா ஸ்ரீகந்தவேள் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.**

**கலாபூஷணம் விருது 2012**

**இவ்வாண்டுக்கான கலாபூஷணம் விருது பெற்ற இம் மாவட்டத்தைச் சேர்ந்த பின்வருவோரை வாழ்த்துகிறோம்.**

**பொ.மாணிக்கவாசகம் (ஊடகத்துறை)**
**திருமதி.தேவிமனோகரி நாகேஸ்பரன் (இசைத்துறை)**
**திரு.நவரட்ணம் பாலகோபால் (எழுத்துத்துறை)**
**(நவபாலகோபால்)**
**திரு.சி.தெய்வேந்திரம் பிள்ளை (பல்துறை)**
**திரு.மணிக்கு பதுகே குணதிலக (சிற்பம்)**

**ஆளுநர்விருது 2012**

**இவ்வாண்டுக்கான ஆளுநர் விருது பெற்ற இம்மாவட்டத்தைச் சேர்ந்த பின்வருவோரை வாழ்த்துகிறோம்.**

**திரு.க.கனகேஸ்வரன்**
**திரு.பொ.தைரியநாதன்**
**ஜனாப்.முகமது சரீப்**
**திரு.மணிக்கு பதுகே குணதிலக.**

**வவுனியா மாவட்ட கலை இலக்கிய விழாவில் (04-12-2012)**
**இளங் கலைச்சுடர் விருது பெற்றவர்கள்**

| இல | கலைஞர் முழுப்பெயர் | துறை | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|---|---|
| 01 | திரு.ஜெகதீசன் கோபிநாத் | எழுத்தாளர் | வவுனியா வடக்கு |
| 02. | செல்வி.நிரோசா தியாகராஜா | எழுத்தாளர் | வவுனியா வடக்கு |
| 03. | செல்வி.M.D.N.D.அரசகுலரத்ன | இலக்கியம் | வவுனியா தெற்கு |
| 04. | திருமதி.கீதாஞ்சலி குமாரசேகர | இலக்கியம் | வவுனியா தெற்கு |
| 05. | திரு.சிக்கந்தர் சிவசந்துரு | நாடகம் | வெங்கலச்செட்டிகுளம் |
| 06. | திரு.சுப்பிரமணியம் வினோத் | நாடகம் | வவுனியா |
| 07. | திரு.ரங்கென ஜெயக்கொடி | நாடகம் | வவுனியா தெற்கு |
| 08. | திரு.ஆசீர்வாதம் பொலின்ராசா | கிராமியக்கலை | வெங்கலச்செட்டிகுளம் |
| 09. | ஜனாப் சா.சர்ராஜ் | கிராமியக்கலை | வவுனியா- |
| 10. | திரு.அருந்தவநாயகம் சுஜேந்திரா | பரதநாட்டியம் | வவுனியா |
| 11. | செல்வி.தர்சிகா செல்வராசா | பரதநாட்டியம் | வவுனியா |
| 12. | திரு.நாகராசா செந்தூர்ச் செல்வன் | பரதநாட்டியம் | வவுனியா |
| 13. | திரு.தம்பித்துரை ஜங்கரன் | கவிதை | வவுனியா |

| | | |
|---|---|---|
| 14. திரு.தருமரத்தினம் தவயோகன் | குறும்படம் | வவுனியா |
| 15. திரு.தர்மலிங்கம் பிரதாபன் | குறும்படம் | வவுனியா |
| 16. திரு.நவரட்ணம் கபிலநாத் | ஊடகத்துறை | வவுனியா |
| 17. திரு.நிசங்க மாதவ குலசூரிய | ஊடகத்துறை | வவுனியா தெற்கு |
| 18. திரு.B.H.C.உபுல் பாலசூரிய | ஊடகத்துறை | வவுனியா தெற்கு |
| 19. திரு.கந்தையா பாலேந்திரன் | ஓவியம் | வவுனியா |
| 20. திரு.முருகதாசன் நாகதாசன் | ஓவியம் | வவுனியா |

**வடமாகாண விருது**



வடமாகாண வர்த்தக சம்மேளனத்தின் 17வது ஆண்டு விருது வழங்கும் விழாவில் (08.12.2012) வடமாகாண சிறந்த முயற்சியாளருக்கான விருதை பொன்வீடியோ உரிமையாளர் திரு.சுபாஸ்சிங்கம் பெறுகின்றார்.

**பாராட்டுகிறோம்**

**வவுனியாவின் சாதனை இளைஞர்களைப் பாராட்டுகிறோம்.**

1. **கனகேஸ்வரன் கணேஸ்வரன்**



Sahasak Nimavum 2012 எனும் கருப்பொருளில் SriLanka Inventors Commision (SLIC), Ministry of Technology and Research இனால் தேசிய ரீதியிலான கண்டுபிடிப்பாளர்களுக்கான போட்டி BMICH இல் 30 September - 02 October வரை நடைபெற்றது. அதில் பல்கலைக் கழகங்களுக்கான பிரிவில் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் சார்பில் போட்டியில் பங்கு பற்றிய இவரின் 3 கண்டு பிடிப்புகள் வெவ்வேறு வகுப்புகளில் (Class) விருதிற்காக தெரிவுசெய்யப்பட்டன.

| Invention | Class | Placement |
|---|---|---|
| AAL Handwash dispensor | I | First |
| Safety Mosquido Coilstand | F | First |
| Safe long lasting life time Switch board | J | Second |

விருது வழங்கும் விழா 6th December 2012 அன்று BMICH இல் நடைபெற்றது. இவர் 2011ம் ஆண்டிலும் Innovator of The Year விருது பெற்றவர் .





செல்வன் கனகேஸ்வரன் கணேஸ்வரன் கலாபூஷணம், ஆளுநர்விருது என விருதுகள் பெற்ற (இருவரும்) **திரு.திருமதி. கனகேஸ்வரன் விமலலோஜினி** தம்பதிகளின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

2. **தங்கராஜாஷத்விதன்**



வவுனியா காளிகோவில் வீதியில் அமைந்துள்ள சண்டெக் SUNTEC -Sun Technical Engineering College நிறுவனத்தினால் நாடாத்தப்பட்ட கண்காட்சியின் போது தொலை தூரத்தில் இயங்கக்கூடியதும் சுயமாக செயற்படக் கூடியதும் அத்துடன் கட்டுப்படுத்தக் கூடியதுமான (Robot Technoloy) கொண்ட உபகரணமும். அத்துடன் புதிய இலத்திரனியல் சுற்றை (Circuit) உருவாக்கி அதனை கணினியில் இணைந்து அதற்கான மென் பொருள் நிகழ்ச்சி நிரலையும் உருவாக்கி (Soft ware and driver) அதனூடாக வீட்டுமின்சுற்றுக்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை கட்டுப்படுத்துவதற்கான தொகையிடும் சுற்றுக்களை (Integrated Circuit) உருவாக்கி காட்சிப்படுத்தியுள்ளார்கள் இதனுடன் வர்த்தக நிறுவனங்களுக்கு பயன்படும் மென்பொருட்கள், இணையம், மல்டிமீடியா வடிவமைப்புக்களும் தெளிவு படுத்தப் பட்டிருந்தன.

இந்த வீட்டு மின் சுற்றானது தொலை தூரத்திலிருந்து இணையத்தினூடு வீட்டில் நடைபெறுவதை அவதானிப்பதும், மின்னிணைப்புக்களை ஏற்படுத்தவும் முடியும் எனத்தெரிவித்துள்ளார்கள். அத்தோடு இது முழுமையாக இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கக்கூடிய இலத்திரனியல் பொருட்களைக் கொண்டு எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்றவகையிலும் எல்லோராலும் இத்தொழில்நுட்பத்தினை பெறக்கூடியதாக அமையும் எனவும் தெரிவித்தார்கள்.

இந்நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குனரும் மென்பொருள் பொறியியளாலருமான தங்கராஜா ஷத்விதன் அவர்கள் தெரிவிக்கையில் கணினியின் Mother board, Processor இணை பயன்படுத்தி அவற்றுடன் பொருத்தக் கூடிய தொகையிடும் சுற்றினை (Integrated Circuit) உருவாக்கி அதனை இணைத்து மென்பொருள் ஒன்றினால் செயற்படுத்தக் கூடிய தன்னியக்கி செயற்பாட்டினையும் (Self Brain) அத்தோடு இயக்குனர் (Operator) மூலம் இயக்கக் கூடிய வசதியும் கொண்ட றோபோட் தொழில் நுட்பத்தினை உருவாக்கியுள்ளேன் என்றும் இது அதிகூடிய தகவல் பரிமாற்றத்தினை வேகமாக செயற்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளது அத்தோடு வீடியோ தொழில்நுட்பத்துடன் தானியங்கி செயற்பாடு கொண்டது இதற்கு ஒரு குறிப்பிட்ட தூரத்தின் முன் ஒரு பொருளோ அல்லது உருவமோ தென்படுமாயின் சமிக்கைகளை அனுப்பிக்கொண்டே இருக்கும் அதுமட்டும் அல்லாமல் அதன் தூரத்தின் அளவில் தனது செயற்பாட்டின் வேகத்தினை கட்டுப்படுத்தவல்லது எனவும் இது குறுந்தூரம்,

நெடுந்தூரம் செல்லக் கூடியதாகவும் இதனூடாக எதிர்காலத்தில் நிலத்திலிருக்கும் கன்னி வெடிகள் மற்றும் அவதானிப்புக்களும் தூரத்திலிருந்து இடம்பெறும் செயற்பாடுகளை அவதானிப்பதற்கும் பயன்படுத்த ஏதுவாக வடிவமைக்க உள்ளோடு எனவும் தெரிவித்தார். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் பொருட்கள் அனைத்தும் எமது நாட்டின் சந்தையில் கிடைக்கப் பெற்றவை அத்தோடு மருத்துவ துறைக்கு பயன்படும் சில உபகரணங்களையும் தாம் வடிவமைப்பதாகவும் அவை சாதாரண Laptop மூலம் இயங்க வைக்க கூடியதாக அமையும் உற்பத்திச் செலவு குறைவானதாகவும் கூடுதலான பயனாளிகள் பயன்பெறும் வகையில் அமையும் எனவும் தெரிவித்தார்.

வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரியின் 18வது ஆண்டு விழா 2012 நிகழ்வில் கௌரவம் பெறும் பெரியோர்கள்









கலாபூஷணம், கலைமாமணி, இலக்கியச் செல்வர்

அமரர்

## பொன்.தெய்வேந்திரம்

அவர்களுக்கு

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின்

# கண்ணீர்க் கவிதாஞ்சலி

**பிறப்பு** 1933.01.10

**இறப்பு** 2012.11.19

தமிழ்மொழிப் புலமையும் ஆங்கிலப் புலமையும்
சபைதனைக் கவர்ந்திடும் சங்கீதப் புலமையும்
அமிழ்தெனுந் தமிழில் அழகிய பேச்சும்
அமைந்து திகழ்ந்த அருந்தமிழ்ப் புலவரே!

ஆளுனர் விருதொடு அரச விருதுகள்
அளவில பெற்ற அண்ணலே! என்றும்
பொன்னென நாங்கள் போற்றிய கலைஞரே!
போய்மறைந் தீரோ பொன்னுல கினுக்கே

எங்கள் மண்ணின் இலக்கியத் தடத்தில்
இணையடி பதித்த ஏந்தலே! நாங்கள்,
உங்கள் இசையை உண்டு திகட்டாப்
பொங்கும் உணர்வினில் "ரித் திருந்தோம்.
பொதிகை வண்டாய்ப் புளகித் திருந்தோம்.

பத்திரி கைகளில் வானொலி தன்னில்
எத்தனை விதாமய் இலக்கியம் வளர்த்து
முத்திரை பதித்த மூத்த கலைஞரே!
இத்தரை போற்றும் இணையிலா ஏந்தலே!

இலக்கிய வட்டம் பாராட்டி மகிழ்ந்து
இலக்கியச் செல்வர்! எனக் கௌரவித்ததை
கலக்கமோ டின்று கண்ணிற் காண்கிறோம்.
காலங் காலமாய் உங்கள் புகழ்இக்
கலைதிகழ் வன்னியில் காலூன்றி நிற்கும்.

சென்றிடும் உலகில் திகழ்ந்து விளங்கி
என்றும் இறையடி பிரியா திருக்க
எங்கள் கண்ணீர் அஞ்சலி என்றும்
உங்கள் ஆத்மா ஈடேற உதவும்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**கவிஞர் அகளங்கன்**
உங்களின் பிரிவால் துயருறும்
**வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
**22.11.2012**


வட்டூர்க் கவிஞர்

தோற்றம் 25.12.1952 — **அமரர்.கதிர்.சரவணபவன்** — மறைவு 14.08.2012

அவர்களுக்கு

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின்

# கண்ணீர்க் கவிதாஞ்சலி




வட்டூர்க் கவிஞரே! வற்றாத கலைப் பெருக்கே!
இந்திரனின் சொர்க்கத்தில் இலக்கிய விழாவா?
கணீரென்ற குரலினிலே கவியரங்கில் பாடவா?
புரவி ஆட்டம் நிகழ்த்திப் பூரிக்க வைக்கவா?
வில்லுப்பாட்டிசையில் வல்லவரல்லவோ நீர்
வில்லிசைத்துப் பாடவா?
பட்டிமன்றம் எதிலேனும் பங்கேற்று மகிழவா?
சொல்லிசைத்துப் பேசிச் சுடர் விட்டுப் பிரகாசித்த
நல்லிசைத் தமிழ்ப் புலவா!
சொல்லாமற் போனதேன்
சொர்க்கத்தின் விழாவிற்கு.
கவிதைத் தொகுப்பு, கட்டுரை, உரைநூல், பேச்சு
என்றெல்லாம் கன்னித் தமிழுக்கு
இயல் ஆபரணம் இட்டு அலங்கரித்தீர்.
வில்லிசை, புரவி நடனம், நாடகம், நாட்டுக்கூத்து என
இசை நாடகத்தின் எழிலார்ந்த சொத்து நீர்.
முத்தமிழும் உமக்குப்போல் முன்னெவர்க்கு வாய்த்ததுவோ?
இதயத்தில் வேரூன்றி விழுது விட்ட உம்மேனி
விழுந்துவிட்ட நிலை அறிந்து வேதனையில் துடிக்கின்றோம்.
எங்கள் கண்ணீர் முத்துக்கள்
உங்கள் காலடிக்குக் காணிக்கை.
உம் ஆத்ம சாந்தியை நோக்கி
எம் ஆத்மார்த்த அஞ்சலிகள்.

**கவிஞர் அகளங்கன்**
**துயரைப் பகிர்ந்து கொள்ளும்**
**வ/கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
**வவுனியா.**





# 3ம் ஆண்டு நினைவஞ்சலி 20-12-2012



வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட பொருளாளர் ஆக கடமையாற்றி அமரத்துவம் அடைந்த **அமரர் கனகசபாபதி ரணேஷ்** (மல்ரிவிஷன் அச்சுக்கலையக நிர்வாக பணிப்பாளரும் பாடசாலை அதிபரும்) அவர்களுக்கு வட்டத்தின் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


**வ/கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**

**வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட பதினான்காண்டு நிறைவு விழாவில் நண்பர்கள்**



## இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு நூல் அறிமுகவிழா





வவுனியாவின் மூத்த சட்டத்தரணி திரு.மு.சிற்றம்பலம் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா









## வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்தும்

# பதினைந்தாண்டு நிறைவு விழா - நிகழ்வு 154

**காலம் : 25.02.2013 திங்கட் கிழமை காலை 9.30 மணி**

**இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்**

### தலைமை

**கலாநிதி. தமிழ்மணி அகளங்கன்** அவர்கள்

(தலைவர் வ.க.இ.ந.வட்டம்)

### பிரதம விருந்தினர்

**திரு. அ. சிவபாலசுந்தரன்** அவர்கள்

(பிரதேச செயலாளர் - வவுனியா)

### சிறப்பு விருந்தினர்கள்

**திரு. க. பேர்னாட்** அவர்கள்

(பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா)

**திரு. க. பரந்தாமன்** அவர்கள்

(பிரதேச செயலாளர் - வவுனியா வடக்கு)

**திருமதி. அன்ரன் சோமராஜா** அவர்கள்

(வலயக் கல்விப் பணிப்பாளர், வவுனியா தெற்கு)

### கௌரவ விருந்தினர்கள்

மக்கள் சேவை மாமணி **நா. சேனாதிராசா** அவர்கள்

(தலைவர், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா)

**திரு. சிவப்பிரகாசம் சுப்பிரமணியம்** அவர்கள்

(தலைவர் பல.நோ.கூ.சங்கம், வவுனியா)

சிவநெறிப்புரவலர் **சி. ஏ. இராமஸ்வாமி** அவர்கள்

(செயலாளர், இந்துமாமன்றம், வவுனியா)

## நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்
தமிழ் வணக்கப் பாடல் : **செல்வன். ஜோசப் மனோகரன்** அவர்கள்
வரவேற்பு நடனம் : **நிருத்தியவானி திருமதி. சூரியயாழினி வீரசிங்கம்** அவர்களின் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவிகள்.
வரவேற்புரை : **செல்வி. து. நந்தீஸ்வரி** (பத்திராதிபர் வ.க.இ.ந.வட்டம்) அவர்கள்
தலைமை உரை
தொடக்கவுரை : **திரு. ந. பார்த்திபன்** (உபதலைவர் வ.க.இ.ந.வட்டம்) அவர்கள்

### மாருதம் சஞ்சிகை இதழ் 13 வெளியீடு

**முதற்பிரதி பெறுபவர்**
**அருட்கலைவாரிதி**
**கலாபூஷணம் ஸ்தபதி சு. சண்முகவடிவேல் அவர்கள்**

**வெளியீட்டுரை**
**கவிஞர். த. தனசீலன் அவர்கள்**
(துணைச் செயலாளர், வ.க.இ.ந.வட்டம்)

**அறிமுக உரை**
**திரு. பா. பாலசுந்தரம் அவர்கள்**
(ஆசிரியர் புளியங்குளம் இந்துக்கல்லூரி)

**நூல் வெளியீடு**
**வட்டூர்க் கவிஞர் கதிர் சரவணபவன் அவர்களின்**

**"செம்மொழி மீளாய்வு"**

**முதற்பிரதி பெறுபவர்**
**திரு. V. குகேந்திரன் அவர்கள்**
(காணி உத்தியோகத்தர் - பிரதேசசெயலகம் - வவுனியா வடக்கு)

**அறிமுக உரை**
**சைவப்புலவர்**
**கலாபூஷணம் செ. குணபாலசிங்கம் அவர்கள்**





## கௌரவிப்பு நிகழ்வு

சான்றோர் விருது வழங்கும் வைபவம்

**"ஆங்கிலக் கல்விச் செல்வர்"** விருது பெறுபவர்
**திரு. சு. சிவபாலன் அவர்கள்**

தேகாந்த நிலையில்
**"முத்தமிழ்ச் செல்வர்"** விருது பெறுபவர்
வட்டூர்க் கவிஞர் கதிர் சரவணபவன் அவர்கள்

கௌரவிப்பு உரை
கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)

## கௌரவ விருந்தினர் உரை

## சிறப்பு விருந்தினர் உரை

## பிரதம விருந்தினர் உரை

# கலை நிகழ்ச்சிகள்

விபுலம் அரங்கியற் கலைக் கழகம் வழங்கும்
**கவிதையும் காட்சியும் (நாடகம்)**
தயாரிப்பு இயக்கம் : **திரு.கந்தையா ஸ்ரீகந்தவேள்** அவர்கள்

வவுனியா திருமறைக் கலாமன்றம் வழங்கும்
**இனியாகிலும் திருந்துவோம் - தாளலயம்**
எண்ணமும் இயக்கமும் - **மாணிக்கம் ஜெகன்** அவர்கள்
(துணைச் செயலாளர், வ.க.இ.ந.வ)

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்களின்
**நாட்டிய நிகழ்ச்சி**

தயாரிப்பு **நிருத்திய வாணி திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்** அவர்கள்
மிருதங்கம் : **கலாபூஷணம் க.கனகேஸ்வரன்** அவர்கள்
வயலின் இசை **கலாபூஷணம் திருமதி.விமலலோஜினி கனகேஸ்வரன்** அவர்கள்
பாட்டு
**இசைக்குயில் திருமதி.வதனி ஸ்ரீதரன்** அவர்கள்
செல்வி.அருந்ததி சிவக்கொழுந்து (முதகலைமாணி) அவர்கள்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் வழங்கும்
**கவி அளிக்கை விருந்து**

நன்றியுரை
**திரு.த.பிரதாபன் அவர்கள்**
(பொருளாளர் வ.க.இ.ந.வட்டம்)

நிகழ்ச்சித் தொகுப்பாளர்
**திரு.சி.நாகராஜா அவர்கள்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## விளம்பர உதவி:




**அறிவாலயம்**
(பாடசாலை உபகரணங்கள்,
புத்தகங்கள் விற்பனை செய்வோர்)

**190B, புகையிரத நிலைய வீதி,**
**வைரவபுளியங்குளம்,**
**வவுனியா.**










# THIRUMAHAL BOOK CENTER

# திருமகள் புத்தக நிலையம்

*Stationery, Greeting & Invitation Cards,*
*Diaries, Calendars*
*& Fancy Goods.*





*No : 14, Tharmalingam Road,*
*Vavuniya.*



*For Genuine*
*22ct Gold Jewellery*




# Ambal Jewellers



WESTERN UNION
FAST, RELIABLE, WORLDWIDE MONEY TRANSFER



*# 09, Horawapothana Road, Vavuniya.*



# PON
## VIDEO
### Digital Colour Lab

*No.5, 1st Cross Street, Vavuniya, Sri Lanka.*
*TP : 0777238837, 0242222191*
*E-mail : ponvideo.pvs@gmail.com*
*facebook : ponvideo*

# N.S.RATNAM & BROS

***Dealers in***
***all kinds of electronic items and spares***

**HONDA**

*No.6, 1st Cross Street,*
*Vavuniya.*
*Tel / Fax : 024 - 2221237*





# வெங்கடேஸ்வரா
## பல்பொருள் வாணிப நிலையம்

**இல.15, பஸார்வீதி,**
**வவுனியா.**
**தொ.பே.இல : 024 2222418**

# ஈசன்



***இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள்***
***விற்பனையாளர்.***

***இல : 27, பசார்வீதி, வவுனியா.***

# METO TRADERS

*Dealers in*
*Electrical Goods & Plumbing Items*

*35A, Bus Stand Shopping Complex,*
*Vavuniya.*
*Phone : 024 - 2222572*



# L S Communication

*Dealers in Imitation Jewellery, Fancy Goods, Cosmetics, Cycle Parts, Flowers, Electrical Items, Gift Items & etc*





*324, Mannar Road, Vavuniya.*
*Tel : 024 2223180, Fax : 024 2223181*





# THAMPA TOURIST HOTEL & INN

Thampa

**தங்குமிடங்கள்,**
**விருந்துபசார மண்டபங்கள்**
**மற்றும் நிகழ்வுகளுக்கான உணவு**
**உபசாரங்களுக்கு**

**No.10, 1st Lane, Sinnaputhukkulam,**
**Vavuniya.**

மாருதம் சிறப்புற வாழ்த்துகிறோம்,




Multivision. 024 2223669